அறிவுரை!




பக்கம் 18


# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 270 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 7, சனி 23.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பு.

# இனிமேலும் இந்தியா காலம் தாழ்த்தக்கூடாது

## இனப்பிரச்சினை விடயத்தில் சுஷ்மாவிடம் நேற்று வலியுறுத்தியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

புதுடில்லி, ஓக.23
இனிமேலும் இந்தியா காலம் தாழ்த்தக் கூடாது. தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கைத் தமிழ் மக்களின் தீர்வுத் திட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது – இவ்வாறு தெளிவாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் எடுத்துரைத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும், இந்தியா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழுவினருக்கும் இடையிலான பேச்சு நேற்றுக் காலை புதுடில்லியில் நடந்தது. அந்தச் சந்திப்பின்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு கோரியுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டோம்.

"வெளிவிவகார அமைச்சிடம் பல விடயங்கள் குறித்துப் பேசினோம். தமிழர்களின் தீர்வுத் திட்டம் தொடர்பிலும், பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இந்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது" தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்

22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையை உன்னிப்பாக கவனிக்கின்றது இந்தியா



புதுடில்லி, ஓக.23
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான பேச்சின் பின்னர் அவர்களுக்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், "நான் ஏற்கனவே இலங்கைக்கு வந்த போது பல விடயங்களை நேரிலும் பார்த்திருக்கின்

22 ஆம் பக்கத்தில்

## மோடியை இன்று கூட்டமைப்பு சந்திக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 23
இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று மாலை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இன்று மு.ப. 11.30 மணியளவில் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்திய மத்திய அரசின் அழைப்பை ஏற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் டில்லிக்குப் புறப்பட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பொன்.செல்வராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மழை; மகிழ்ச்சியில் மக்கள்

யாழ்ப்பாணம், ஓக.23
வடக்கு மாகாணத்தில் கடந்த 7 மாதங்களாக கடும் வறட்சியான காலநிலை நிலவி வரும் நிலையில் நேற்றுப் பரவலாகக் கனமழை பெய்துள்ளது. தொடர்ந்தும் மழை பெய்வதற்குரிய காலநிலை காணப்படுவதால் மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். கடும் வறட்சி காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் கடும் நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. வாழ்வாதாரத் தொழில்கள் பலவும்

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் வீதி அபிவிருத்திக்கு தேவை ரூ.6,000 மில்.

யாழ்ப்பாணம், ஓக. 23
வடக்கின் வீதி அபிவிருத்திக்கு உடனடியாக.6 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கொழும்பு அரசால் வழங்கப்பட்டு, மாகாண சபையால் ஒதுக்கப்பட்ட நூறு மில்லியன் ரூபாவுக்கும் வீதி அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைக்கு கொழும்பு அரசால் இந்த ஆண்டுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கிய நிதியில், வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு நூறு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டி

22 ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கியதில் ஒருவர் சாவு; இருவர் காயம்

அளவெட்டி, ஓக.23
உயரழுத்த மின்மார்க்கத்தில் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த மூவர் எதிர்பாராத விதமாக மின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். அவர்களில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இளவாலை மெய்கண்டான் பாடசாலைக்கு அருகே உள்ள ஆலடிப் பகுதியில் நடந்துள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க

**மன்னார் சிறுமி வன்கொடுமை சிப்பாய்க்கு விளக்கமறியல்**

பக்கம் 3

## உள்ளக போர்க்குற்ற விசாரணை அடுத்த மாதம் கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், ஓக. 23
போர்க்குற்ற உள்ளக விசாரணைகள் மீண்டும் அடுத்த மாதம் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழு, புதிதாக விரிவு படுத்தப்பட்ட விடயப் பரப்புக்கு அமைய இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போதான மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணை முன்னெடுத்து வருகின்றது.

அதற்கமைய அடுத்த அமர்வு கிளிநொச்சியில் மீண்டும் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஆணைக்குழு வட்டாரங்கள், அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையில் இந்த அமர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது

22 ஆம் பக்கம் பார்க்க

## அரசுடைய நடவடிக்கைகளால் உளவியல் பாதிப்புகள் தொடரும்

### எச்சரிக்கின்றார் பேராசிரியர் தயா சோமசுந்தரம்.

யாழ்ப்பாணம், ஓக.23
போரின் பின்னர் வடக்கில் தற்கொலை உட்பட பல உள சமூகப் பிரச்சினைகளால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலிருந்து மீள்வதற்கு மக்களுக்கு உதவி தேவைப்படுகின்றது. அவர்களுக்குரிய உளசமூகப் புனர்வாழ்வைக் கொடுக்க வேண்டிய கடமை அரசுக்குரியது என்றபோதும், அரசு அதுகுறித்துக் கண்டுகொள்ளாதுள்ளது. அத

22 ஆம் பக்கம் பார்க்க

## சமுர்த்தி உத்தியோகத்தர்களைக் கூட்டி தேர்தல் பரப்புரைக்கு அழைத்தார் டக்ளஸ்

### ஏமாற்றி விட்டதாக அவர்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 23
வாழ்வின் எழுச்சித் திட்டக் கலந்துரையாடல் என்று அழைத்து, ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பரப்புரை நடவடிக்கைக்கு வருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார் என்று விசனம் தெரிவித்துள்ளனர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

யாழ்.மாவட்டத்தில் சகல பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, யாழ்.மாவட்டச் செயல கத்தில் வாழ்வின் எழுச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என்று தெரிவித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச

22 ஆம் பக்கம் பார்க்க

# பாதாளக் குழுக்களைக் கைது செய்ய அலரி மாளிகைக்கே செல்லவேண்டும்

## நாடாளுமன்றில் தெரிவித்தார் அனுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, ஓக.23
பாதாளக் குழுக்களையும், குற்றவாளிகளையும் கைது செய்ய வேண்டுமானால் பொலிஸார் அலரி மாளிகைக்குள்தான் செல்ல வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க. அத்துடன் அமைச்சர்களின் அலுவலகங்களுக்குச் சென்றாலும் பாதாளக் குழுக்களை கைது செய்யக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பான விவாதத்தில் உரையாற்றியபோதே அனுரகுமார திஸாநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"அண்மையில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வியாபாரி ஒருவர் பாதுகாப்பு செயலாளருடன் நின்று எடுத்த இரண்டு படங்களை இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது. இலத்திரனியல் அடையாளஅட்டையைவழங்கவிண்ணப்பப் படிவத்தில் கேட்கப்படும் கேள்விகள் குற்றவாளிகள் சந்தேகநபர்களை பிடிப்பதற்கு ஒப்பானது.
ராஜபக்ஷவின் குடும்ப உறவினர்களைத் தவிர ஏனைய அனைத்து மக்களையும் குற்றவாளியாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆயினும் சாதாரண அப்பாவி மக்களை பொலிஸார் மிரட்டுகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## எபோலா; இலங்கைக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஓக.23
எபோலா வைரஸ் இலங்கைக்கும் பரவும் அச்சுறுத்தல் உள்ளது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
கிழக்கு நாடுகளில் மிக வேகமாகப் பரவி வரும் இந்த எபோலா வைரஸ், இலங்கைக்குள் வரும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளது என்றும், அதனை தடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் விசேட மருத்துவர் திபால் பெரேரா தெரிவித்துள்ளார்.
கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையில் பணியாற்றும் இலங்கை இராணுவத்தினர், அங்கு சுற்றுலா சென்ற இலங்கையர்கள், அங்கு தொழில் புரிந்து வருபவர்கள் நாட்டுக்கு திரும்பி வரும் போது, அந்த வைரஸ் இலங்கைக்குள் பரவக் கூடும்.
எபோலா பரவுவதைத் தடுக்க அமெரிக்க மருத்துவர்கள் எதிர்ப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் திபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.(ற)

## ஆபிரிக்க நாடுகளுக்கான நுழைவிசைவு இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக.23
எபோலா வைரஸ் தாக்கத்தை அடுத்து இலங்கைக்கு வருகை தந்தவுடன் வழங்கப்படும் நுழைவு-நுழை விசைவு (ஒன் அரைவல் விசா) வழங்கும் நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.
ஆபிரிக்காவைச் சேர்ந்த நான்கு நாடுகளிலிருந்து வருவோருக்கான நுழைவு-நுழைவிசைவு வழங்கும் நடைமுறையே இடைநிறுத்தப்பட்டுள்ளது. நைஜீரியா, சியரா லியோன், மற்றும் லைபீரியா ஆகிய நாடுகளிலிருந்து வருவோருக்கான நுழைவு-நுழைவிசைவே மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ற)

## மூன்று பிரசவங்களில் 7 குழந்தைகள்!



கொழும்பு, ஓக.23
முதல் இரண்டு பிரசவங்களின்போதும் இரட்டை சிசுக்களை பெற்ற பெண்ணொருவர் தனது மூன்றாவது பிரசவத்தில் மூன்று சிசுக்களைப் பிரசவித்த விநோத சம்பவம் கொழும்பில் நடந்துள்ளது. கொழும்பு, மருதானையைச் சேர்ந்த பாத்திமா நிரோஷா என்ற 31 வயதுடைய பெண்ணே இவ்வாறு தனது மூன்றாவது பிரசவத்தின்போது 3 ஆண் சிசுக்களைப் பெற்றுள்ளார். இந்தப் பெண் ஏற்கனவே முதலாவது பிரசவத்தில் இரட்டை சிசுக்களை பிரசவித்துள்ளதுடன் இரண்டாவது பிரசவத்திலும் இரட்டை சிசுக்களை பெற்றார்.
இந்நிலையிலே மூன்றாவது பிரசவத்தில் அவர் மூன்று சிசுக்களை பிரசவித்துள்ளார். சொய்சா பிரசவ வைத்தியசாலையிலே இவருக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. இவரது முதல் இரண்டு பிள்ளைகளுக்கும் தற்போது 15 வயதாகிறது. சாஹிர் அப்துல் கரீம், பாத்திமா நிரோஷா தம்பதிக்கு தற்போது மொத்தமாக 7 ஆண் பிள்ளைகள் உள்ளனர்.
பாத்திமா நிரோஷா உலகிலேயே மூன்று பிரசவங்களின் போதும் அதிகமான எண்ணிக்கையில் சிசுக்களை பெற்றவர் என்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடிக்கக் கூடும் என மருத்துவர்கள் கூறுகின்றனர். தற்போது, தாயும் சிசுக்களும் நலமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

## தேசியத் தலைவர்களை உருவாக விடாது அமெ.

### அனுர பிரியதர்ஷன யாப்பா கருத்து

கொழும்பு, ஓக.23
உலகில் எந்த நாட்டிலும் தேசியத் தலைவர் ஒருவர் உருவாகும் போது அந்த தேசிய தலைவரை அழிப்பது ஏகாதிபத்தியவாதிகளின் பழக்கம். இரண்டாம் உலகப் போருக்கு பின்னர், அமெரிக்கா, 51 நாடுகளின் அரசுகளைக் கவிழ்த்துள்ளது. அவர்களுக்கு அடங்காதவர்கள், கூறுவதைக் கேட்காதவர்கள், கருத்துக்கள், நிலைப்பாடுகளுக்கு இணங்காதவர்கள் எவரையும் ஆட்சி நடத்த விடமாட்டார்கள். - இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா.
அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"ஏகாதிபத்தியவாதிகள் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்வதன் காரணமாகவே உலகில் பயங்கரவாதம் இருக்கின்றது. ஈழப் பயங்கரவாதம் எப்படி உருவானது?. அது எவ்வாறு வளர்க்கப்பட்டது?. ஈழவாதம் போசிக்கப்படும் பிரதான இடம் ஐரோப்பா. நாட்டில் தற்போது பயங்கரவாதம் இல்லாவிட்டாலும் ஈழவாதம் ஐரோப்பாவில் இருக்கும் தமிழ் ஈழவாத மக்களால் போசிக்கப்பட்டு வருகிறது.
நாட்டில் போரை முடிவுக்கு கொண்டு வந்து வெற்றி பெற்றுபோதும், ஈழ ஏகாதிபத்தியவாதிகளுடன் நாம் மற்றுமொரு போரைச் செய்ய வேண்டியுள்ளது. நாட்டில் போர் முடிவுக்கு வந்த பின்னர், படுகொலை நடந்ததாகக் கூறி, அமெரிக்கா, மனித உரிமைகள் சபையில் யோசனை ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. அது குறித்து விசாரணை நடத்த தயாராகி வருகின்றனர்.
பலஸ்தீனத்தின் காஸா மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. பிள்ளைகளும், பெண்களும் என போரில் சம்பந்தப்படாத அப்பாவிகள் கொல்லப்படுகின்றனர். இது குறித்து உலகில் உள்ள எந்த அமைப்பும் பேசுவதில்லை. ஏகாதிபத்திய நாடுகள் தமக்கு ஆதரவான நாடுகளைப் பாதுகாக்கின்றன.
தேசியத்தை பாதுகாக்கும் தலைவர்களை அகற்றும் செயற்பாடுகளையே ஏகாதிபத்திய நாடுகள் முன்னெடுக்கும். அவர்கள் புதிய வார்த்தைகள் பற்றி பேசுகின்றனர். ஜனநாயகம், மனித உரிமை, நல்லாட்சி. இந்த வார்த்தைகளை பயன்படுத்தி உலக நாடுகள் பலவற்றை அழித்து விட்டனர்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# புலிகள் சார்பு அரசியல் பிரிவினர் இராணுவத்தில் இணைவோரைத் தடுக்கின்றனர்

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா கூறுகின்றார்



யாழ்ப்பாணம், ஓக. 23
தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பு அரசியல் பிரிவினர் இங்குள்ள இளைஞர் - யுவதிகளை இராணுவத்தில் இணைய வேண்டாம் என்று தடுத்து வருகின்றனர். அத்துடன் இங்கு பதற்றத்தை ஏற்படுத்துவதற்காக புலம்பெயர் தமிழர்கள் பழைமைவாத அரசியல் பிரிவுகள் ஊடாகப் பெரும்தொகைப் பணத்தை செலவு செய்தும் வருகின்றனர். - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா.
பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஒரு குழுவினர், யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வந்திருந்தனர். அவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
"யாழ்ப்பாண மக்களின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் விளையாட்டு போன்றவற்றின் மேம்பாட்டுக்கு யாழ். படைத் தலைமையகத்தால் சுமார் 17 திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் சிவில் செயற்பாடுகளில் இராணுவம் எந்தத் தலையீடும் மேற்கொள்வதில்லை.
ஆயிரத்து 118 குடும்பங்களே யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள். அவர்களில் அதிகமானோர் தற்போது தாம் தங்கியுள்ள பிரதேசத்திலேயே மீளக் குடியமர விரும்புகின்றனர். எவ்வாறாயினும் மீள்குடியேற்றத் தேவையான அடிப்படை வசதிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருப்பினும், சில பிரிவினர் அரசியல் இலாபத்துக்காக அதற்கு தடை ஏற்படுத்துகின்றனர்."- என்றும் மேஜர் ஜெனரல் உதய பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.
வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளின் கேள்விகளுக்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் உதய பெரேரா,
'தமிழீழ விடுதலைப் புலிகள் சார்புடைய அரசியல் பிரிவினரால் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் சிங்கள இராணுவம் என்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் தோலுரிக்கின்றனர்.
இராணுவத்தில் இணைவதற்கு வடக்கின் இளைஞர், யுவதிகளுக்கு இலங்கை அரசு இடவசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஆனால் மேற்குறிப்பிட்ட அரசியல் பிரிவினர் வீடு வீடாகச் சென்று இராணுவத்திலோ அல்லது பொலிஸ் பிரிவிலோ இணைந்து கொள்ள வேண்டாம் என்று இளையோரை அச்சுறுத்துகின்றனர். அவ்வாறான தடைகள் மத்தியிலும் யாழ்ப்பாணத்தின் இளைஞர், யுவதிகள் 500 இற்கு மேற்பட்டோர் இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ளனர்"- என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 07 சனிக்கிழமை (23.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 270

# கைதிகள், காணாமற்போனோரை விடுவிக்குமாறு கோரிப் போராட்டம்

## வவுனியாவில் நடத்துவதற்கு ஏற்பாடு

வவுனியா, ஓகஸ்ட் 23

**அரசியல் கைதிகள் மற்றும் வடக்கு-கிழக்குப் பகுதியில் காணாமற்போனோரின் விடுதலையை வலியுறுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று வவுனியாவில் இடம்பெறவுள்ளது.**

**வடக்கு-கிழக்குப் பகுதியில் போர்க் காலத்திலும் போருக்குப் பின்பும் பெருமளவான இளைஞர், யுவதிகள் காணாமற் போனார்கள்.**

இதேவேளை- அரசியல் கைதிகள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் பல போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும் இதுவரை காணாமற்போனோர் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக அரசு எந்த விதமான சாதகமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் உள, உடல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் காணாமற் போனோர் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் சொல்லொணாத் துயர்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே, இந்த ஆண்டுக்குள் அரசு இதற்குச் சாதகமான நடவடிக்கையை எடுக்க வலியுறுத்தி வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பிரசைகள் குழுக்களும், காணாமற் போனோரின் உறவுகளும், அரசியல் கைதிகளின் உறவுகளும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உட்படப் பலர் ஒன்று சேர்ந்து வீதியில் இறங்கிப் போராடவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரசைகள் குழு தெரிவித்துள்ளது.

(த-402)

## ஐ.நாவின் விசாரணையை மலினப்படுத்த மஹிந்த முயற்சி

### விஸா மறுப்பு அதற்காகவே என்கிறார் சரவணமுத்து

கொழும்பு, ஓக. 23

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை முன்னெடுத்துள்ள விசாரணைகளை பலவீனப்படுத்தும் நோக்கிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசாரணைக்குழுவுக்கு நுழைவிசைவு வழங்கப்படமாட்டாது என அறிவித்துள்ளார் என்று மாற்றுக்கொள்கை நிலையத்தின் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கைக்கு வெளியேயுள்ள பெருமளவு ஆதாரங்களைப் பயன்படுத்தி விசாரணைகளை முன்னெடுக்கலாம். வீடியோ கொன்பரன்சிங் முறை மூலமாக இலங்கைக்குள்ளிலிருந்து வாக்கு மூலங்களைப் பெறலாம்.

இலங்கைக்குள் விசாரணையாளர்களை அனுமதிக்காவிட்டால், விசாரணையின் நியாயபூர்வத் தன்மையும், வலுவும் பாதிக்கப்படும் என அதனை எதிர்ப்பவர்கள் கருதுகின்றனர். நுழைவிசைவு மறுப்பு என்பது இந்த நோக்கத்துக்காகவே இடம்பெறுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## முதலையை கொலை செய்த மூவருக்கு பிணை

கிளிநொச்சி, ஓக. 23

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் குளத்தில் இருந்த முதலையைப் பிடித்து உயிரிழப்பு ஏற்படுத்திய மூவருக்குக் கிளிநொச்சி நீதிமன்றம் தலா 50ஆயிரம் ரூபா ஆள் பிணை வழங்கியுள்ளது.

குறித்த மூவரையும் நேற்றுக் கைது செய்த பூநகரிப் பொலிஸார் மூவரையும் நேற்றுக் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். மூவரையும் விசாரித்த நீதிபதி எம்.ஐ. வகாப்தீன் அவர்களை பிணையில்செல்லஅனுமதித்தார். (த-18)

## 14 வயது சிறுமி துஷ்பிரயோகம்; இராணுவச் சிப்பாய்க்கு மறியல்

மன்னார், ஓக. 23

மன்னார் பனங்கட்டிக் கொட்டு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் இராணுவச் சிப்பாயை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

மன்னார் பனங்கட்டிக் கொட்டு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமியுடன் சௌத்பார் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் காதல் தொடர்பை ஏற்படுத்திய நிலையில், அண்மையில் குறித்த சிறுமியை அந்தச் சிப்பாய் சௌத்பார் இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள பற்றைக்காட்டினுள் கூட்டிச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தை அந்தப் பகுதியைச் சேர்ந்த இருவர் நேரடியாகக் கண்டுள்ளனர்.

குறித்த சிறுமி வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் தனக்கு நடந்தவற்றை வைத்தியர்களிடம் தெரிவித்துள்ளார். சிறுமியின் பிரச்சினை தொடர்பாக வவுனியா வைத்தியசாலைத் தரப்பினர் மன்னார் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கினர். சிறுமியின் தாயும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

மன்னார் பொலிஸ் நிலையத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் குறித்த சிறுமியிடம் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டனர்.

இதன்போது சௌத்பார் இராணுவ முகாமைச் சேர்ந்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## பாம்பன் பால முற்றுகை கைவிடப்பட்டது

இராமநாதபுரம், ஓக. 23

இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளதை அடுத்து இராமேஸ்வரம் மீனவர்களால் இன்று மேற்கொள்ளப்படவிருந்த பாம்பன் பால முற்றுகைப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டம்மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த வேலைநிறுத்தம் இன்று 31ஆவது நாளாக நீடித்து வருகின்றது. இந்நிலையில் இலங்கை அரசு அனைத்து மீனவர்களை மட்டும் விடு

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் விலங்கு விசர் நோய்க்கு புதிய பிரிவு

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்.போதனா வைத்தியசாலையில் வரலாற்றில் முதல் முறையாக விலங்கு விசர்நோய் தொடர்பான சிகிச்சைப் பிரிவு ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.



இதுவரையான காலமும் வெளிநோயாளர் பிரிவு இயங்கும் பொதுவான இடத்திலேயே விலங்கு விசர் நோய்க்கான சிகிச்சை மற்றும் ஊசி ஏற்றல் இடம்பெற்று வந்தது.

இதனால் நாளாந்தம் சுமார் 40 பேர்வரை விலங்கு விசர் நோய் தொடர்பான சிகிச்சைக்கு வருவதனால் இடையூறுகள் ஏற்பட்டிருந்தன. அதனைத் தவிர்க்கும் முகமாகவே புதிய பிரிவு ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அதற்கென தனியே மருத்துவர், தாதியர் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

(த-4)

## பொதுவேட்பாளரை நிறுத்துவதே எதிர்க்கட்சிகளுக்குள்ள ஒரே வழி

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

தற்போதைய நெருக்கடிக்கு ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவதே ஒரே வழி. எனினும், இது குறித்த பேச்சுக்களில் தீவிரத்தன்மை தென்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பினான்ஸியல் டைம்ஸ்'க்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து கட்சியின் நிலைப்பாடு பற்றி அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பௌத்த துறவியொருவரால் அனைத்து சமூகங்களினதும் வாக்குகளையும் பெற முடியாது. அவர் எவ்வளவு நேர்மையானவராக இருந்தாலும் தமிழ் - முஸ்லிம் மக்கள் அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதே தற்போதைய நிலவரம்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அதிகளவில் விவாதிக்கப்படுகின்றது. எனினும், இந்தத் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ எப்போது நடைபெறும் என்பது எவருக்கும் தெரியாது. இதனால், எமது கட்சி இது குறித்து ஆராயவில்லை.

நாங்கள் எந்த வேட்பாளரையும் ஆதரிப்பது குறித்த நிலைப்பாட்டை எடுக்கவில்லை.

(22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு கடிவாளம் போடவே கூட்டமைப்பை கருவியாக்குகிறார் மோடி

### சீனப் பீதியில் பா.ஜ.க. என்கிறது தே.தே.இ.

கொழும்பு, ஓக. 23

இலங்கையைக் கட்டுப்படுத்தும் கருவியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கு மோடி அரசு திட்டம் தீட்டுகின்றது என்றும், இதன்பொருட்டே கூட்டமைப்பை வலிந்து அழைத்து பா.ஜ.க. அரசு பேச்சு நடத்துகின்றது என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

சீனாவை நோக்கி நகரும் இலங்கைக்கு கடிவாளம் போடவேண்டிய தேவைப்பாடு காரணமாக தற்போது இந்திய வெளிவிவகாரக் கொள்கை மாறாது என்ற இந்தியாவின் உறுதியான கொள் கைக்கு அப்பால் சென்று இலங்கைவிவகாரத்தைக் கையாள்வதற்கு மோடி அரசு திட்டம் வகுக் கின்றது. இது தொடர்பில் இலங்கை அரசு எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். இலங்கை சீனாவை நோக்கிச் சாய்கின்றது என்று டில்லிக்குத் தெரியும். இதன் காரணமாகவே மிரட்டல் பணியில் இலங்கையை அணுகுவதற்கு இந்தியா உத்தேசித்து வருகின்றது. இதற்கான கருவியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அது பயன்படுத்துகின்றது.

அதேவேளை, இந்தியாவைப் பயன்படுத்தி தமது அரசியல் இருப்பைத் தக்கவைக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இருக்கிறது" - என்றும் வசந்த பண்டார கூறினார்.

## வழக்காளியும் எதிராளியும் நீதிமன்றுள் வாக்குவாதம்

### நால்வருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஓக. 23

நீதிமன்றில்வழக்குநடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வழக்காளியும் எதிராளியும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர் நீதிமன்ற செயற்பாடுகளைக் குழப்பும் வகையில் செயற்பட்டமைக்காக வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்ட நால்வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

காணித் தகராறு தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கு நடைபெற்றுக்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## படையினர் வளர்க்கும் நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

படையினரால் முகாம்களில் வளர்க்கப்படும் தொகையான நாய்களுக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் நேற்று விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது. பிரதேசத்தில் உள்ள 52 ஆவது படையணி தலைமை அலுவலகம் மற்றும் மினிமுகாம்களில் வளர்க்கப்படும் நாய்களுக்கே இவ்விதம் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது. படையினருக்கான பொதுச் சுகாதார பரிசோதகரின் ஏற்பாட்டில், சாவகச்சேரி பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள் படை முகாம்களுக்குச் சென்று நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

**A/L இணைந்த கணிதம்**
Group / Personal Class
Tamil / English Medium
**ஆசிரியர் S.யூட் B.Sc (Hons) (MSc)**
தொடர்பு: இல.03, சோமசுந்தரம் அவனியு
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
077 967 2059 (51126) (4.6.3)

**வீடு விற்பனைக்கு**
நல்லூர்க் கோயிலுக்கு அண்மையில் பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக புதிதாகக் கட்டப்பட்ட அதி நவீன வசதிகளைக் கொண்ட 6 அறைகள், 2 ஹோல் கள், முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட இரண்டு மாடி களைக் கொண்ட 1½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. (5 வாகனத் தரிப்பிட வசதியுள்ளது.)
தொடர்பு : 076 544 8410 (51139) (4.6.3)

**J.C.B (பைக்கோ) வாடகைக்கு**

குறிப்பு :★ போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
★ஒப்பந்தவேலைகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்) (60575) (4.6.3)
077 771 2482 (சுன்னாகம்) /077 984 7285 (பருத்தித்துறை)
**புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்**
**207, K.K.S.வீதி, சுன்னாகம்.**

# வெள்ளம் தேங்கும் இடங்களில் வடிகால்கள் அமைக்க ஏற்பாடு

### சாவகச்சேரி நகர சபையால்

தென்மராட்சி, ஓக.23

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அந்த இடங்களில் வடிகால்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் மழை நீர் வழிந்தோடும் வகையில் அமைக்கப்பட்ட வாய்க்கால்கள் இருந்த இடங்களில் குடியிருப்புகள், மதில்கள் மற்றும் வீதிகள் அமைக்கப்பட்டதால் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதாக சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு நகர சபையின் அடுத்த வருட (2015) உத்தேச வரவு -செலவுத் திட்டத்தில் மழை நீரை வெளியேற்றுவதற்குரிய வடிகால்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கும் பகுதிகள் தொடர்பான விவரங்களையும். வெள்ள நீரை அப்புறப்படுத்தக் கூடிய குளத்தின் விவரங்களையும் வழங்குமாறு சபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புகள் மற்றும் வரியிறுப்பாளர்களிடம் கோரப்பட்டுள்ளது.

கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் இந்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்கி அடுத்த வருடம் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல பரதநாட்டிய பேரொளி
லாவண்ஜா ஆனந் குழுவினரதும்
பிரபல கர்நாடக இசைப்பாடகர்
T.V.ராம் பிரசாத் குழுவினரதும்
தெய்வீக சுகானுபவம் III
Divine Ecstasy III
நடன இசை நிகழ்வு

**2014 ஓகஸ்ட் 24 ஞாயிற்றுக்கிழமை**
மு.ப.10.00 மணி
பரத நாட்டிய பயிற்சிப்பட்டறை - லாவண்ஜா ஆனந்
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
(கல்லூரி வீதி, நீராவியடிப்பிள்ளையார் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.
மாலை 6.00 மணி
பரதநாட்டிய நிகழ்வு - லாவண்ஜா ஆனந்
சங்கிலியன் தோப்பு நல்லூர், யாழ்ப்பாணம்

**2014 ஓகஸ்ட் 25 திங்கட்கிழமை**
மு.ப.10.00 மணி
கர்நாடக சங்கீத பயிற்சிப்பட்டறை - T.V.ராம் பிரசாத்
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
(கல்லூரி வீதி, நீராவியடிப்பிள்ளையார் கோயில் அருகில், யாழ்ப்பாணம்)
மாலை 6.00 மணி
கர்நாடக இசைக்கச்சேரி - T.V.ராம் பிரசாத்
சங்கிலியன் தோப்பு நல்லூர், யாழ்ப்பாணம்
உள்நுழைவு இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(சி16113) (12:6)

அனுசரணை
பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்வி அமைச்சு - வடமாகாணம்
யாழ்.இந்திய துணைத்தூதரகம், கலாசார உறவுகளுக்கான இந்திய மன்றம்
இந்திய - இலங்கை அறக்கட்டளை மையம்

அபான்ஸ் பொருட்களுக்கான
மலிவு விற்பனை
50% வரை விலைக்கழிவு
தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள், வளிச்சீராக்கிகள், சலவை இயந்திரங்கள், ஹோம் தியட்டர், மின்னியற்றி, டிவிடி ப்ளேயர்ஸ், மைக்ரோவேவ் அவன்கள் மற்றும் கணினி மேலும் பல

☞ ஓடியோ சிஸ்டம் - 4,500/- ரூபாவிலிருந்து
☞ குளிரூட்டிகள் - 20,000/- ரூபாவிலிருந்து
☞ டிவிடி ப்ளேயர்ஸ் - 2,000/- ரூபாவிலிருந்து
☞ தொலைக்காட்சிகள் - 12,500/- ரூபாவிலிருந்து
☞ கணினிகள் - 15,000/- ரூபாவிலிருந்து
ஓகஸ்ட் 22 முதல் 25 ஆம் திகதிவரை
காலை 8.30 மணி முதல் மாலை 7.00 மணி வரை
இல.121/1 பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்
(பிரதான பேருந்து நிலையத்திற்கு எதிரில்)
அபான்ஸ் செகன்ட் காட்சியறைகள் மஹரகமை, சாய்ந்தமருது மற்றும் பிட்டகோட்டை
* நிபந்தனைகளுக்குட்பட்டது. * காசு மற்றும் கடனட்டை விற்பனைக்கு மாத்திரம்
Abans

LED
1W LED Bulb Rs.12/=
Surface Mounted LED Panel light 12W Rs.1750/= 18W Rs.1950/=
Led Panel Light 3w Rs.490/= | 6w Rs.990/= 12w Rs.1450/= | 18w Rs.1750/=
Metal 3W Rs220/= 5W Rs300/= 7W Rs400/= 9W Rs600/=
Led Tube 1metre Rs490/=
LED Tube 4 ft 18w Rs.890/=
100W LED Rs.6750/=
LED Rotating Buld Rs.490/=
Led Strip 5m Rs1650
25W Led Celing Light Rs 5950/=
PLASTICS LED BULB
3W - Rs.150/=
5W - Rs.250/=
7W - Rs.280/=
9W - Rs.360/=
12W - Rs.420/=
15W - Rs550/=
18W - Rs750/=
LED NAME BOARD 6"-36" RS8500
KINGS ELECTRONICS
11A, STANLEY ROAD, JAFFNA.
TEL NO : 021 2223857
WWW.KINGSELECTRONICS.LK

**JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY - ST.JOHN'S COLLEGE**

க.பொ.த.(உ/த) - இரண்டாம், மூன்றாந் தடவைகள் தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான (இருபாலாருக்கும்) கணித, உயிரியல் பிரிவுகள் ஆரம்பம்.
வகுப்புக்கள் ஆரம்பம் - 2014.09.10 புதன்கிழமை
மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 12.30 வரை.
குறிப்பு :
* வெளிமாவட்ட மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்படும்.
* விண்ணப்பப் படிவங்களை இல.446, பிரதான வீதியிலுள்ள அக்கடமி காரியாலயத்திலோ அல்லது சென்.ஜோண்ஸ் கல்லூரி காரியாலயத்திலோ 2014.08.25 காலை 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2014.09.05 வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிவரை.
(சி/16119) (7.6.3)
Principal
St.John's College - Jaffna.
Director
Jaffna Academy & School of Technology

# நல்லூர் தேர், தீர்த்தத்தன்று காலை முதல் அன்னதானம்

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ். மாநகர சபை நீர்வேலைப்பகுதிப் பணியாளர்களின் கலியுகவரதன் இந்து மன்றத்தால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் யாழ். இந்து விடுதியில் நடத்தப்படும். அன்னதான நிகழ்வு, இந்த வருடம் யாழ். மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இடம்பெறும்.

தேர், தீர்த்தத் திருவிழா தினங்களில் காலை 9 மணி முதல் இந்த அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும் என்று கலியுகவரதன் இந்து மன்றம் அறிவித்துள்ளது. (ஒ-ரி)

**K M Education Centre**

தரம் 9, 10, O/L வகுப்புக்களுக்கு கணிதம் தமிழ், ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும். மற்றும் Cambridge, Edexcel International Syllabus Mathematics and Chemistry for O/L and AS, A2 Level சேர விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 088 7732 27.08.2014 புதன்கிழமை வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
(61043) (4.6.3)
இடம்: முதலி கோயில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**இடமாற்றத்தை முன்னிட்டு.....**




யாழ் மாநகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு
சில தினங்கள் மட்டுமே.

- பட்டு சாறிகள்
- சீதுன் சாறிகள்
- ஸ்ரோன் சாறிகள்
- சல்வார்கள்
- இந்தியன் றொப்
- சேட்
- ஜீன்ஸ்
- குருதா

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(51113)(7.6.3) T.P : 021 221 9393

**துன்பம் தீர அருள்வாக்கு**



குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப்பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் -தீர அருள் வாக்கு கூறப்படும்.

வெள்ளவத்தை பெர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள்
**23, 24, 25 / 08 / 2014**
ஆகிய நாள்களில் யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறவுள்ளார்.

பூசை நேரம்:
காலை 10.30 மணி
மாலை 04.00 மணி

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
ஞான வைரவர் ஆலயம்
கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம், 077 801 2226
தமிழ் கலாசார உடையுடன் வரவும்.
(45.6.3)(51151)

**மணிவிழா நாயகியை மனமுவந்து வாழ்த்துகின்றோம்**



திருமதி சக்திதேவி சிவகுமார்
(இசைக்கலைமணி,
(S.L.T.S.I, இசையாசிரியர்)

**சேவை விவரம்**

மு/வித்தியானந்தாக் கல்லூரி -05.08.1984-31.08.1985
மு/செம்மலை மகா வித்தியாலயம்-01.09.1985-04.05.1992
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி -06.01.1992-22.08.2014
பாட இணைப்பாளர் -2005-2011
பகுதித்தலைவர்-2012-2014

ஈழத்துப் பாடல் தந்த மெல்லிசைக் குயிலாய்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்
'A' தரக் கலைஞராய்
"பொன்மணி" திரைப்படத்தின்
பின்னணிப் பாடகியாய்
கலாவித்தகராய்
இசைக்குயிலாய் கலைஞானச் சுடராய்
கவினுறு பட்டங்கள் பலபெற்று
யாழ் இந்து மகளிர் கல்லூரியின்
இசையாசிரியராய் பணி ஏற்று
ஆற்றல் மிகு மாணவியர்
ஏற்றத்திற்காய் உழைத்து
கலைத்துறைப் போட்டிகளில்
சாதனைகள் படைத்து
கல்லூரிப் பெருமைக்கு
அரும்பாடுபட்டு இன்று ஓய்வு பெறும்
எங்கள் சக்தி ஆசிரியை
வாழும் காலமெல்லாம் வளம்பலவும் பெருகி
நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பி
சீரும் சிறப்போடும் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

( சீ/6137)(4.3.6)
கல்லூரிச் சமூகம்,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

இன்று : சப்பரம்

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'இனிய வாழ்விற்கு ஆன்மிகம்' என்ற தலைப்பில் இ.சர்வேஸ்வராவின் சிறப்புச் சொற்பொழிவும் கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, சுழிபுரம் பாரதி கலைமன்ற அறநெறிப் பாடசாலை மற்றும் உரும்பிராய் சிவபூரீஸ்வரர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-7)

★ ★ ★

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு - பொன் ஸ்ரீவாமதேவன், வயலின் - கே.குகபரன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கெஞ்சிரா - பி.சியாம்கிருஷ்ணா. (ஒ)

★ ★ ★

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு இசை அர்ச்சனை இடம்பெறும். ஏ.ஜி.சுவாமிநாதன் குழுவினர் நிகழ்வில் பங்குபற்றுவர். (ஒ)

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பக்க வாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'கும்பகர்ணன் வதம்' இசைப் பேருரை இடம்பெறும். (ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம் சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'வெற்றியின் இரகசியம்' என்பதாகும். (ஒ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக.23

தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான ஜயவருட தேர் உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். வசந்தமண்டப பூசை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஒ)

◆◆◆


வட்டுக்கோட்டை, துணைவி, அரசடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி ற்து. தொடர்ந்து 10 நாள்களுக்கு நடைபெறும் திருவிழாவில் 10ஆம் நாளன்று திருவூஞ்சல் உற்சவமும், சண்டேஸ்வர உற்சவமும் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு வைரவப் பொங்கல் இடம் பெறும். (ஒ-29)

◆◆◆

சாவகச்சேரி நுணாவில்மேற்கு வீரபத்திரர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்துபத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும்7 ஆம்திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஒ-9)

இருபத்து இரண்டாம் நாள் திருவிழா



### தண்ணருளே தந்தருள வேண்டும்

சப்பை ரதமேறிச் சதிபதிகள் புடை சூழ
சாந்தமாய் வலம் வரும் சண்முகா
இப்பாரி லுன்னடியாரி ன்னலின்றி வாழ
எப்போதும் நீயருளல் வேண்டும்
அப்பனுக் குபதேசம் அன்றருள் செய்த
அண்ணலே எங்கள் ஆறுமுகா
தப்பாது ன்னடியே சார்ந்திடு மெமக்குத்
தண்ணருளே தந்தருள வேண்டும்

*செல்வராஜா சுதாகரன், மட்டுவில் வடக்கு.*

### சப்பரம் ஏறி எம் சஞ்சலம் தீர்த்திடுவாய்

பல்லவி

சப்பரம் ஏறும் முருகா - எங்கள்
சஞ்சலம் தீரும் முருகா
கற்பூர ஜோதி முருகா - எம்மைக்
கண்ணெனக் காரும் முருகா

அனுபல்லவி

நல்லூரின் கந்தனின் சப்பரம் - கைலை
நாதனின் மைந்தனின் சப்பரம்
எல்லோரும் கூடிட நல்லூரில் ஓடிடும்
ஓம் வடி வேலனின் சப்பரம்

சரணம்

சப்பரம் ஏறி சாமரம் வீசி
மனையாள்களோடு வாமுருகா - இங்கே
நட்புற வாகி நாங்களும் வாழ
நல்லருள் வந்து தாமுருகா

*வேலணையூர், சுரேஷ்.*

### நேசமுறுங் காட்சியது காண்

சப்பரத்தி லேறிவருஞ் சண்முகனை நல்லூரில்
எப்பொழுதுங் காண இயலாது - தப்பாது
பாசங் குறுகப் பரம்பொருளோ டான்மாவும்
நேசமுறுங் காட்சியது காண்

*வேலணை அமரர் சி.இராசரத்தினம்.*

### "சப்பை ரதமேறி அருள் தருவாய்"

நல்லூரின் நாயகா உன் திருவருள் வேண்டுவோர்க்கு
வரமருளும் முருகா!
சரவணப் பொய்கையில் அவதரித்த சண்முகா
தந்தைக்கு உபதேசம் செய்திட்ட பாலமுருகா!
மாங்கனிக்காய் உலகை வலம் வந்த முருகா!
உம்மையன்றி எம்மைக்காக்க யாருளர் - இவ்வுலகில் - முருகா
சப்பைரதமதில் ஏறி எமக்கு அருள் தருவாய்

*நயினை விசு.இராசநாயகம்.*



நல்லைக் கந்தனுக்கு
இன்று
23.08.2014
இருபத்திமூன்றாம் திருவிழா

சாரங்கா நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD.
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 6972, Fax.No: 222 8869

## தங்கக் கடத்தல் வழக்கு 28 ஆம் திகதி ஒத்திவைப்பு

மன்னார், ஓக.23

தமிழகத்துக்குத் தங்கம் கடத்த முற்பட்டமை தொடர்பான வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மன்னார் மாவட்ட நீதிபதி ஆனந்தி கனகரெட்ணம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

தலைமன்னாரிலிருந்து தமிழகத்துக்குத் தங்கம் கடத்த முற்பட்டதாகச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட 3 சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியதுடன் கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகளையும் பொலிஸார் மன்னார் நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

தமிழகத்துக்குக் கடத்தப்படவிருந்த 6 கோடி ரூபா பெறுமதி வாய்ந்த 11கிலோ 824 கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகளைத் தலைமன்னார் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைப்பற்றியதுடன் சந்தேக நபர்கள் மூவரையும் கைது செய்திருந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட நீதிபதி செல்வி ஆனந்தி கனகரெட்ணத்திடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் சார்பாகக் கொழும்பிலிருந்து வருகை தந்த ஜே.ஜி.ஜோன் தலைமையில் 5 சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த வழக்கை மன்னார் மாவட்ட நீதிமன்றில் எடுத்துக் கொள்வதற்கு நீதி நியாயாதிக்கம் உள்ளதா எனச் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும் எனத் தெரிவித்து விசாரணையை இந்த மாதம் 28 ஆம் திகதிக்கு மன்னார் மாவட்ட நீதிபதி செல்வி ஆனந்தி கனகரெட்ணம் ஒத்தி வைத்தார்.

இதேவேளை குறித்த தங்கக் கட்டிகள் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்காக நீதிமன்ற உத்தரவுக்கமைவாகப் பலத்த பாதுகாப்புடன் வங்கி ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (த)

## துணுக்காய் கூட்டுறவுச் சங்கத்தின் அரைக்கும் ஆலைக்கு அடிக்கல்

துணுக்காய், ஓக.23

துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவீன அரைக்கும் ஆலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் துணுக்காயில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.



அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள 2 கோடி 20 லட்சம் ரூபா நிதியில் சேவாலங்கா நிறுவனத்தினால் இந்த அரைக்கும் ஆலை அமைக்கப்படவுள்ளது.

அரைக்கும் ஆலைக்கான அடிக்கல்லை அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனத்தின் தலைமை அதிகாரி எஸ்.மாரின் நட்டு வைத்தார்.

துணுக்காயிலிருந்து கல்விளான் செல்லும் வீதியில் ஒதுக்கப்பட்டுள்ள 2 ஏக்கர் காணியில் இந்த அரைக்கும் ஆலை அமையவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்களஞ்சியமாக விளங்கும் துணுக்காயில் நவீன அரைக்கும் ஆலை அமையவுள்ளமை விவசாயிகளுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் பெரும் நன்மையாக அமையவுள்ளது.

இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் மற்றும் துணுக்காய் ப.நோ.கூ.சங்கப் பணியாளர்கள், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் கூட்டுறவாளர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-18)

## கிராம கைத்தொழில் பொருள்கள் விற்பனை செய்வதற்கு நிலையம்

### கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக.23

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் பொருள்களை குறிப்பிட்டதொரு இடத்தில் வைத்து விற்பனை செய்யக் கூடிய வகையில் விற்பனை நிலையமொன்று அமைக்கப் படவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய தொழில் முயற்சி அதிகார சபையினரால் கிளிநொச்சி அரச செயலகத்தில் நடத்தப்பட்ட கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கான தொழில் விருத்தி அறிவை மேம்படுத் தும் கருத்தரங்கில் தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த தொழிலில் ஈடுபட்டாலும் அந்தத் தொழில் வாழ்வுக்கு உதவும் வகையில் அமைய வேண்டும்.

எங்களிடம் காணப்படுகின்ற பொதுவானதொரு குறைபாடு தொழில்களில் ஈடுபடுகின்ற போது பயிற்சி, தொழில் தொடர்பான அறிவு என்பவற்றை வளர்த்துக் கொள்வதில் அக்கறை காட்டாமையாகும்.

கைத்தொழில் முயற்சியொன்றில் பெருமளவில் ஈடுபடுகின்றவர்கள் தொழில் அறிவை வளர்த்துக்கொள்வது அவசியமானதாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கைத்தொழில் பொருள்களை உற்பத்தி செய்தாலும் அந்தப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில் கிளிநொச்சி நகரத்தில், கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் பொருள்களை விற்பனை செய் யக்கூடிய நிலையமொன்றை எதிர்காலத்தில் அமைக்கவுள்ளோம்.

இதன்மூலம் கைத் தொழில் பொருள்களைச் சந் தைப்படுத் தக்கூடிய வாய்ப்பு ஏற்படும். பெண்களும், ஆண்களும் கூடுதலாகக் கைத்தொழில் பொருள்களை உற்பத்தி செய்து வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்-என்றார். (த-18)

ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
08 - 04 - 1923

இறைவன் அடியில்
23 - 08 - 2013



அமரர்
சிவப்பிரகாசம் பஞ்சலிங்கம்
(சிரேஷ்ட சட்டத்தரணியும், சிறந்த பண்பாளரும்)

வையத்துள் வாழ்வாங்கு வளம் பெற வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் இரண்டறக் கலந்து
ஓராண்டு ஆனதுவே!
இன்னும் வற்றவில்லை எம் விழிகள் சொரியும் நீர்,
என்றும் ஆறாது எம் துயரம்

கொடிகாமம் வீதி,
புலோலி.
021 226 3134

மனைவி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(50185)(5.6.3)

இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை
வதிவிடமாகவும் கொண்ட
அமரர் சின்னத்தம்பி
செல்லத்துரை (சாத்திரியார்)

வையத்துள் 12.07.1943
தெய்வத்துள் 13.09.2012

திதி: ஆவணி திரயோதசி தேய்பிறை



காற்றுப் போல் ஈராண்டுகள் கலைந்து போனதே - எம் கண்ணில்
கானல் நினைவுகளாய் கண்ணீரும் பெருகியதே
நேற்று எம்முடன் நீங்கள் இருந்த
நேச நினைவுகளை மீட்டியே பார்க்கின்றோம்
தோற்றுப் போனதே மருத்துவம் - உங்களைக்
கூற்றுவன் பிடியிலிருந்து பிரித்திட
தேற்றுவார் யாருளர் தேம்பியே தவிக்கிறோம் - நீங்கள்
வீற்றிருந்த இடத்தில் எல்லாம் உம் முகத்தைத் தேடுகின்றோம்
மாற்ற முடியவில்லை எங்கள் வாழ்க்கைப் பாதையை
காத்திருக்கின்றோம் நீங்கள் எம்மிடமே வருவீர்கள் என.....

- பாசமுடன் குடும்பத்தினர்.

சாத்திரியார் கோட்டம்" இல. 45/2, விசுவமடு.

நினைவகலா நினைவுகள்





இந்திரராசா சங்கர்
தோற்றம் 21.10.1937
மறைவு 23.08.2012

பூரணபாக்கியம் சங்கர்
தோற்றம் 11.02.1936
மறைவு 29.08.2009

நேற்று வரை எம்முடன் வாழ்ந்ததாகவே உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன என்றாலும் உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(51141)(5.3)

## ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தீவிரவாத தடுப்பு சட்டம் அறிமுகம்

டுபாய், ஓக.23

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தீவிரவாதத் தடுப்புச் சட்டம் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தீவிரவாதத்துக்கு எதிரான சட்டம் இதுவரை இருந்ததில்லை. இந்தநிலையில் நாட்டின் முதல் தீவிரவாத தடுப்புச் சட்டத்தை அந்தநாட்டு ஜனாதி பதி கலிபா பின் ஜயீத் அல் நஹ்யான் புதன்கிழமை அறிமுகப்படுத்தியுள்ளார். அந்தச் சட்டத்தில் என்னென்ன அம்சங்கள் உள்ளன என்பது குறித்து தெரியவரவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளில் போராட்டங்கள், பிரச்சினைகள் நடைபெற்று வருகின்றன. இந்தநிலையில் நாச வேலைகளில்ஈடுபடத்திட்டமிட்டதாகஐக்கிய அரபு எமிரேட்ஸில் 200 உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

எகிப்தில் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலருக்கு அபுதாபியில் தண்டனை கிடைத்துள்ளது. எகிப்து மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடும் எகிப்தில் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டுபிடிக்கஇருநாடுகளும்இணைந்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த 30 பேருக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நீதிமன்றம் 3மாதங்கள்முதல்5ஆண்டுகள் வரையான தண்டனை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## பாக். பிரதமருக்கு எதிரான பிரேரணை நிராகரிப்பு

இஸ்லாமாபாத், ஓக.23

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அந்த நாட்டு நாடாளுமன்றம் ஏக மனதாக நிராகரித்துள்ளது.

பிரதமர் பதவி விலக வேண்டும்என்றும், மக்களவையைக் கலைக்குமாறும் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை நாடாளுமன்றம் நிராகரித்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் பிரதமர் பதவி விலகும் வரை தமது போராட்டங்கள் தொடரும் என்று எதிர்கட்சித் தலைவர் இம்ரான் கான் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி விலக வேண்டும் என ஆர்ப்பாட்டக் குழுக்களின் தலைவர்களான இம்ரான்கான் மற்றும் மத குருவான தாஹீர் உல் கட்ரி ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பரந்த அளவில் வாக்குமோசடி செய்தே நவாஸ் ஷெரீப் ஆட்சிக்கு வந்ததாக ஆர்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனினும் நவாஸ் ஷெரீப் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார். (வ)



298 பயணிகளுடன் பயணித்த எம்.எச்-17 மலேஷிய விமானம் கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி உக்ரேன் எல்லைப் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்த விமானத்தில் பயணித்தவர்களில் 43 பேர் மலேஷியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது உயிரிழந்த மலேசியப் பயணிகளின் சடலங்கள் மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது... (வ)

## ஹமாஸ் தளபதிகள் மூவர் உயிரிழப்பு

ஹமாஸ், ஓக.23

காஸா பகுதியில் ஹமாஸ் போராளிகளைக் குறிவைத்து தொடர் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் ஒரு வீட்டின் மீது விமானம் மூலம் குண்டுவீசியது. இதில்ஹமாஸ் இயக்கத்தைச்சேர்ந்த 3 மூத்த தளபதிகள் உட்பட 19 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட 3 மூத்த தளபதிகளும் மொகமது அபு ஷமாலா, மொகமது பர்ஹோம் மற்றும் ரயாத் அல்-அத்தார் எனத் தெரிய வந்துள்ளது. அவர்கள் கடத்தல், சுரங்கம் அமைத்தல் மற்றும் 2006 ஆம் ஆண்டு இஸ்ரேல் இராணுவ வீரரைச் சிறைப்பிடித்த விவகாரத்துடன் தொடர்புடையவர்கள்.

ஹமாஸின் தெற்குப் பகுதியில் உள்ள ரபாக் அருகே நடைபெற்ற தாக்குதலொன்றின்போது அவர்கள் கொல்லப்பட்டதாக காஸா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உயிரிழுந்த பர்ஹோம், ஹமாஸ் செய்தித்தொடர்பாளர் பாவ்சி பர்ஹோ மின் நெருங்கிய உறவினர் ஆவார்.

நேற்று முன்தினம் இஸ்ரேல் தாக்குதல்நடத்தியதில்ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தளபதியின் மனைவி மற்றும் மகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## எகிப்தில் பஸ் விபத்து 33 பேர் உயிரிழப்பு



கெய்ரோ, ஓக.23

எகிப்து சினாய் தீபகற்பத்தில் உள்ள ஷரம் எல் ஷேக் அருகே நேற்றுக் காலை 2 சுற்றுலா பஸ்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

இந்த விபத்தில் 33 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் படுகாயம் அடைந்தனர்.

படுகாயம் அடைந்தவர்கள் ரஷ்யா, ஏமன், சவுதி அரேபியா நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் எகிப்து சுகாதாரதுறை அதிகாரி முகமது லஷின் தெரிவித்துள்ளார்.

மேலும் உலக அளவில் அதிகமாக வீதி விபத்துக்கள் எகிப்தில் தான் நடைபெறுகின்றன.

அந்தளவுக்கு எகிப்தின் வீதி மற்றும் ரயில் போக்குவரத்து பாதுகாப்பற்றதாக இருக்கிறது என்றும் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்தில் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஐ.நா. கண்டனம்

### அமெரிக்கப் பத்திரிகையாளர் கொலைக்கு

நியூயோர்க், ஓக.23



அமெரிக்கப் பத்திரிகையாளர் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொல்லப்பட்டமைக்கு ஐ.நா.பொதுச் செயலாளர் பான்- கீ மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈராக் அரசுக்கு எதிராக அங்குள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் போரிட்டு வருகின்றனர். கடந்த ஜூன் மாதம் ஆரம்பித்த இந்தப் போரின் மூலம் ஈராக்கின் பல்வேறு பகுதிகளை தீவிரவாதிகள் கைப்பற்றி உள்ளனர். அதையடுத்து, ஈராக் அரசுக்கு ஆதரவாக ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா வான்வெளித் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் யூரியூப் மற்றும் அல் புர்கான் மீடியா இணையத்தளங்களில் ஒரு காணொலியைப் பதிவு செய்திருந்தனர். சுமார் 4 நிமிடங்கள் ஒளிபரப்பாகும் அந்தக் காணொலியில், ஈராக் போர் குறித்து செய்தி சேகரித்து வந்த அமெரிக்கப் பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலேவின் தலையைத் துண்டித்துக் கொலை செய்யப்படும் காட்சி இடம்பெற்றிருந்தது. மேலும், தங்கள் மீதான தாக்குதலை அமெரிக்கா நிறுத்த வேண்டும். இல்லையேல் தினமும் அமெரிக்க மக்கள் ரத்தம் சிந்துவார்கள் என்று மிரட்டலும் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் இந்தக் கொடூர செயலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

"தனி நாடு அமைக்க நினைக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள மக்களை படுகொலை செய்து வருகின்றனர். தற்போது வெளியாகி உள்ள பத்திரிகையாளர் படுகொலை சம்பவத்தின் காட்சி மிகவும் கொடூரமானது. இவை வெறுக்கத்தக்க குற்றமாகப் பார்க்க வேண்டியவை. இதுபோன்ற கொடூரங்களில் ஈடுபடுவோர்களை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும்" -என்றார். (வ)

## தாய்லாந்தின் பிரதமராக இராணுவத்தளபதி ஒச்சா

பாங்கொங், ஓக.23



தாய்லாந்து புதிய பிரதமராக இந்தநாட்டு இராணுவத் தளபதி பிரயூத் சான்-ஒச்சா தெரிவாகியுள்ளார்.

தாய்லாந்தில் அரிசி மானியத் திட்டத்தில் நடைபெற்ற ஊழல் சம்பந்தமாக பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பதவி விலக வலியுறுத்தி, அங்கு கடந்த 5 மாதங்களாக எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தன. அந்தநாட்டின் பிரதமர் யிங்லக் ஷினவத்தின் பதவியும் பறிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து அங்கு மக்கள் புதிய பிரதமரை நியமிக்கக் கோரி கிளர்ச்சியில் ஈடுபட்டனர். நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர அங்கு இராணுவ ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், தாய்லாந்துக்குப் புதிய பிரதமராக இராணுவப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் பிரயூத் சன்-ஒச்சாவை தேர்வு செய்ய நாடாளுமன்றக் குழு தீர்மானித்தது. இதற்கான வாக்குப் பதிவில் அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் 197 உறுப்பினர்களும் பங்கு பெறுவார்கள் என்று அறிவிக் கப்பட்டது. அதன்படி, அரை வாசிக்கும் மேற்பட்டவர்கள் அவருக்கு ஆதரவாகவே வாக்களித்தனர். அதையடுத்து, அவர் தாய்லாந்தின் புதிய பிரதமராக அறிவிக்கப்பட்டார்.

வரும் செப்ரெம்பர் மாதம் புதிதாக உதயமாகவுள்ள 35 உறுப்பினர்கள் கொண்ட அமைச்சரவைக்கு பிரயூத்சன்- ஒச்சா தலைமை தாங்குகிறார்.

எனினும், அவர் சம்பிரதாய முறைப்படி, அந்த நாட்டு அரசர் பூமிபோல் அதுல்யாதெஜ்ஜிடம் இருந்து ஒப்புதல் பெற வேண்டும். (வ)

## வட கிழக்கு எல்லையில் ஆகாஷ் ஏவுகணைகள்

சீனாவின் அச்சுறுத்தலுக்கு பதிலடி




டில்லி, ஒக.23
சீன-இந்திய எல்லையின் வடகிழக்கு பகுதியில் பறப்பில் ஈடுபட்டு அச்சுறுத்தும் சீன ஜெட் விமானங்கள், ஹெலிகள் ஆளில்லா விமானங்களுக்கு எதிராக இந்தியா 6 ஆகாஷ் ஏவுகணைகளை அங்கு நிறுவும் பணிகளை ஆரம்பித்துள்ளது

இந்திய விமானப்படை அங்குள்ள படைப்பிரிவுகளுக்கு 6 ஆகாஷ் ஏவுகணைகளை வழங்கி உள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சக வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன. இது எல்லா காலநிலைகளிலும் செயற்படக் கூடிய 25 கிலோமீற்றர் தூரத்தில் எதிரி நாட்டு விமானத்தை வானத்திலேயே தாக்கி அழிக்கக் கூடிய திறன் கொண்டதாகும். ஆகாஷ் ஏவுகணையின் சோதனைப் பயிற்சிகள் 1990 இல் தொடங்கி, முழுமையான பணிகள் 1997 இல் முடிவடைந்தன. புனேவில் உள்ள குவாலியர் சுகோய் மிரஜ் -2000 தளத்தில் 2 ஆகாஷ் ஏவுகணைகளை இந்திய விமானப்படை நிறுவி உள்ளது . வடக்கு எல்லைகளில் அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்புக்கு 6 ஏவுகணைகளுக்கு மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் வழங்கி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீண்ட தாமதமாக இருந்தாலும் இறுதியில் ஆகாஷ் ஏவுகணை நிறுவுவதில் வெற்றியளித்துள்ளது. இதை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம், பாரத் டைனமிக்ஸ் பாதுகாப்பு உற்பத்தி, பொதுத்துறை நிறுவனம் ஆகியவை நிறுவி உள்ளன. வடகிழக்கில் ஆகாஷ் நிறுவப்பட்டதன் காரணமாக எல்லைக் கட்டுப்பாடு கோட்டில் இருந்து 4057 கிலோமீற்றர் சீனாவின் அச்சுறுத்தலுக்கு எதிராக அர்த்தமுள்ள மற்றும் நம்பகமான தடுப்பு அமைந்து உள்ளது. (வ)

# இந்திய மத்திய அரசுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

### எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்ற வார்த்தைக்கு விளக்கம் அளிக்கக் கோரி

டில்லி, ஒக.23
லோக்பால் நியமனக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் இடம் பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வார்த்தைக்கு உரிய விளக்கத்தை அளிக்கும்படி மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அழைப் பாணை அனுப்ப உத்தர விட்டுள்ளது.

மக்களவையில் மொத்தமுள்ள 545 உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 10 சதவீதத்தை அதாவது 55 உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்குத்தான் எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்க முடியும் என்பதால் 44 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி அளிக்க முடியாது என்று சபாநாயகர் சுமித்ரா மகாஜன் அண்மையில் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். இந்தநிலையில், லோக்பால் விவகாரம் குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மேற்கூறிய கருத்துக்களைத் தெரிவித்த நீதிபதிகள், லோக்பால் சட்டத்தின்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி மிகவும் முக்கியமான அம்சமாக விளங்குகிறது.



லோக்பால் நியமனக் குழுவின் முக்கிய உறுப்பினர் எதிர்க்கட்சித் தலைவராகலாம். மத்திய அரசு முன்வைக்கும் விவகாரங்களில் உள்ள எதிர்மறையான விடயங்களை எடுத்துரைத்து, அதற்காகக் குரல் கொடுப்பதே எதிர்க்கட்சித் தலைவரின் முக்கியப் பணியாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் குறித்து உடனடியாக முடிவெடுக்க வேண்டியது அவசியம். அதனை நிலுவையில் வைத்திருக்க முடியாது. எனவே எதிர்க்கட்சித் தலைவர் என்ற வார்த்தைக்கு உரிய விளக்கத்தை 4 வார காலத்துக்குள் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். (வ)



இமாச்சல பிரதேசத்தில் தனியார் பஸ் ஒன்று 500 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த 17 பேர் உயிரிழந்துள்ளனர். 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புப் பணியாளர்கள் காயமடைந்தவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டனர். 500 அடி பள்ளத்தில் பஸ் விழுந்துள்ளமையால் காயமடைந்தவர்களை மீட்பதில் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மீட்கப்பட்டவர்கள் ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## புகைத்தல் ஒழிப்புக்கு முன்னோடியாக ராஜஸ்தான்

ஜெய்ப்பூர், ஒக.23
ராஜஸ்தான் மாநிலத்தில் புகைத்தல் பழக்கத்தை ஒழிக்கும் விதமாக அஜ்மீர் மற்றும் அல்வார் மாவட்டங்கள் புகைத்தல் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதேபோல ஏற்கெனவே ராஜஸ்தான் மாநிலத்தில் இரு மாவட்டங்கள் புகைத்தல் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனுடன் சேர்த்து தற்போது 4 மாவட்டங்கள் புகைத்தல் பழக்கம் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. புகையிலை ஒழிப்பில் ராஜஸ்தான் மாநிலம் இந்தியாவுக்கே முன்னோடியாகத் திகழ்கிறது. (வ)

# பட்டினிப்போரில் ஈடுபட்ட ஷர்மிளா நேற்றுக் கைது

மணிப்பூர், ஒக.23
மணிப்பூரில் உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்ட இரோம் ஷர்மிளாவை பொலிஸார் மீண்டும் கைது செய்தனர். அவர் மீது இந்திய தண்டனைச் சட்டம் 309 இன் கீழ் தற்கொலை முயற்சி வழக்கும் பதிவு செய்தனர்.

மணிப்பூர் மாநிலத்தில் நடைமுறையில் இருக்கும் இராணுவப் படை சிறப்பு அதிகார சட்டத்தை திரும்பப் பெறக் கோரி 2000 ஆம் ஆண்டு முதல் ஷர்மிளா உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 14 ஆண்டுகளாக உணவு தவிர்ப்பில் இருக்கும் அவருக்கு மருத்துவர்கள் வலுக்கட்டாயமாக உணவு அளித்து வந்தனர். அவர் உயிரை மாய்க்க முயன்றதாகப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெறும் அறையையே சிறையாக மாற்றினர்.

பல ஆண்டுகளாகச் சிறையில் இருந்த அவரை விடுதலை செய்ய மணிப்பூர் மாவட்ட நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து மருத்துவமனை வளாகத்தில் இருந்து வெளியேறிய அவர் வீட்டுக்குச் செல்லாமல் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தனது கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், இந்தமுறை தனக்கு கட்டாயமாக உணவு அளிக்க அனுமதிக்கப்போவதில்லை என்றும் கூறியிருந்தார்.

அதன்படி போராட்டத்தில் ஈடுபட்டார் இரோம் ஷர்மிளா.



இந்தநிலையில் நேற்றுக் காலை உணவுதவிர்ப்பு பந்தலுக்குள் நுழைந்த 30 இற்கும் மேற்பட்ட பெண் பொலிஸார் இரோம் ஷர்மிளாவை மருத்துவப் பரிசோதனைக்கு கொண்டு செல்வதாகக் கூறி அவரை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். (வ)

## உ.பி.யில் வெள்ளத்தால் உயிரிழந்தோர் 89 பேர்

உத்தரப் பிரதேசத்தில் வெள்ளம் காரணமாக வியாழக்கிழமை 7 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் அந்த மாநிலத்தில் தற்போதைய மழை காரணமாக, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 89 ஆக உயர்ந்துள்ளது.



இதுகுறித்து அரச அதிகாரிகள் கூறியதாவது: மழை காரணமாக 150 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1.5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீட்கும் பணியும், அவர்களுக்கான நிவாரணப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்ராம்பூர் மாவட்டத்தின் ஜோனார், மிஸ்ராபூர், நந்த நகர் உள்ளிட்ட பல கிராமங்களில் எண்ணற்ற வீடுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவித்தனர். பாராய்ச் மாவட்டத்தில் உள்ள கிர்ஜா, சாரதா ஆகிய தடுப்பணைகள் நிரம்பியதால் அந்த அணைகளில் இருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்த மாவட்டத்தில் உள்ள ஆறு களில் வெள் ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அந்த மாவட்டத்தில் 335 படகுகளின் சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கரையோரங்களில் உள்ள 100 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (வ)

# பொதுமக்கள் ஏற்றுக்கொண்ட ஒருவர்தான் பொது வேட்பாளர்

## பெயரளவு வேட்பாளர் தேவையில்லை என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஓக.23

பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவரே பொதுவேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா. பொது வேட்பாளர் ஒரு பெயரளவு வேட்பாளராக இருக்கக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"யாரும் பொது வேட்பாளரைப் பரிந்துரை செய்ய முடியும். ஆயினும் அவரை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது. மக்களின் தேவைகளை அறிந்து செயற்படக் கூடிய ஒருவருக்கு மட்டுமே ஜனநாயகக் கட்சி ஆதரவு வழங்கும். குறுகிய காலத் தேவைகளின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவதில் எமக்கு உடன்பாடில்லை. தனிப்பட்ட ரீதியில் எதனையும் அடைந்துகொள்ள விரும்பியதில்லை.

வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால் தேர்தல் ஆணையாளர் பதவி தேவையற்றதொன்று. நியாயமான முறையில் பக்கச்சார்பற்ற வகையில் தேர்தல்களை நடத்த தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரமும், பொறுப்பும் இருக்கின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)



# கல்வி கொள்கையில் மாற்றங்கள் தேவை

## சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, ஓக.23

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் கல்விக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பிரதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது.

"இலங்கையில் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகும் பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்கே செல்கின்றனர். அவர்கள் செல்லும் நாடுகளின் கல்வி முறையானது இலங்கையில் முன்னெடுக்கும் கல்வி முறையுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இலங்கையில் நடுத்தர வர்க்கக் குடும்பத்தினர் தமது குழந்தைக்ளின் கல்விக்காக பெருமளவில் நிதியைச் செலவிடுகின்றனர். எமது பல்கலைக் கழகக் கட்டமைப்புக்குள் அவர்களை இணைத்துக் கொள்வதில் காணப்படும் சிக்கல்களே அதற்குக் காரணமாகவுள்ளது. விஞ்ஞானத்துடன் முன்னேறும் நபர்களை இணைத்துக் கொள்வதற்கு பல்கலைக்கழக கல்வியில் மாற்றம் வேண்டும்.

அவ்வாறு மாற்றம் ஏற்படுத்தப்படாவிட்டால் அந்த மாணவர்கள் சோர்வடைவார்கள். அதனால் பெற்றோரின் செலவில் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்க நேரிடுகின்றது. இலங்கையின் கல்விக் கொள்கையில் காணப்படுகின்ற சிக்கல்களே இதற்கு காரணமாகும். இலங்கையை கல்வியின் கேந்திர நிலையமாக மாற்ற வேண்டுமாயின் கல்விக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். எமது அடுத்த கட்டம் அதுவாகத்தான் இருக்கும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)



சரத் அமுனுகம

> இலங்கையை கல்வியின் கேந்திர நிலையமாக மாற்ற வேண்டுமாயின் கல்விக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

## நகர சபை தலைவருக்கு பிணை

கொழும்பு, ஓக.23

கொலன்னாவை நகரசபையின் தலைவர் ரவீந்தர் உதய சாந்தவை, ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கொழும்பு மேலதிக நீதிவான் நிரோஷா பெர்ணான்டோ நேற்று உத்தரவிட்டார்.

கொலன்னாவை நகரசபையின் உப தலைவரான சுதேஷ் கோதாகொடவை, துப்பாக்கியால் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் மேற்படி நகர சபைத் தலைவர் கைது செய்யப்பட்டிருந்தார். (ற)

## கிணற்றில் வீழ்ந்து இருவர் சாவு

கொழும்பு, ஓக.23

மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்குரம்படை மெதலந்த பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் வீழ்ந்த இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

கிணற்றில் விழுந்த வாளியை எடுப்பதற்காக சென்ற நபர் கிணற்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். இதனையடுத்து, அவரை மீட்பதற்காக இருவர் குளத்தில் குதித்துள்ளனர். இதனையடுத்து, கிணற்றில் குதித்த இருவரில் ஒருவருக்கு சுவாசிப்பதில் சிரமமேற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (ற)



நாட்டின் பல பாகங்களிலும் நேற்று இடியுடன் கூடிய மழை பெய்துள்ளது. நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில், நீர்கொழும்பிலேயே அதிக மழைவீழ்ச்சி காணப்பட்டுள்ளது. நீர்கொழும்பில் 137 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் கட்டுநாயக்காவில் 136 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டது. நாட்டின், வறட்சி நிலவிய பிரதேசங்களான அநுராதபுரம், திருகோணமலை, புத்தளம், பொலன்னறுவை, பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களிலும் முறையே 0.3, 6.4, 0.6, 7, 16.4 மில்லிமீற்றரளவில் மழை பெய்ததாக திணைக்களம் குறிப்பிட்டது. அத்துடன், காலி மாவட்டத்தில் 81 மில்லிமீற்றரும் கொழும்பு மாவட்டத்தில் 16 மில்லிமீற்றரும் மழை பெய்ததாக வளிமண்டலவியல் திணைக்கம் குறிப்பிட்டது. நாட்டின் தென்மேற்கு பிரதேசத்தின் பல பகுதிகளிலும் இந்த மழை நீடிக்கும் எனவும் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற)

# இலத்திரனியல் அ.அட்டை மிகவும் சிறந்ததொன்று

## பிரதமர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.23

இலத்திரனியல் அடையாள அட்டை முறை மிகவும் சிறந்தது என்று தெரிவித்துள்ளார் பிரதமர் டி.எம்.ஜெயரட்ண.

"புதிய இலத்திரனியல் அடையாள அட்டைக்கான தகவல்களைத் திரட்டும் போது நபர்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

புதிய அடையாள அட்டையின் ஊடாக நாட்டு மக்களும் பாதுகாக்கப்படுகின்றனர். இன்று பலர் பல்வேறு தேவைகளுக்காக சாரதி அனுமதிப் பத்திரத்தையே சமர்ப்பிக்கின்றனர்.



ஆட்பதிவு திணைக்களத்தின் ஊடாக தரவுத் தளமொன்று உருவாக்கப்படும்.

15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# பல்கலைகளில் சி.சி.ரி.வி. கமராக்கள்; உயர்கல்வி அமைச்சருக்கு தெரியாதாம்

கொழும்பு, ஓக.23

பல்கலைக் கழகங்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தமக்கு எதுவுமே தெரியாது என்று கூறியுள்ளார் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க. இந்த விடயம் குறித்து ஐ.தே.க. உறுப்பினர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் பிரஸ்தாபித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சில பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.



அதற்குப் பதிலளித்த உயர் கல்வி அமைச்சர், "பல்கலைக் கழக நிர்வாகத்தினர் இவ்வாறான நடவடிக்கையை முன்னெடுத்திருக்கக் கூடும். கமராக்கள் பொருத்தப்பட்டமை தொடர்பில் எனக்கு தகவல் ஏதும் கிடைக்கவில்லை. கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டமை தொடர்பில் மாணவர்களிடம் இருந்து எந்தவிதமான முறைப்பாடுகளும் எனக்குக் கிடைக்கவில்லை. ஜயவர்த்தன பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் மட்டுமே தாம் கண்காணிப்புக் கமராக்கள் மூலம் கண்காணிக்கப்படலாம் என்று சந்தேகம் வெளியிட்டிருந்தனர்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# 2050ஆம் ஆண்டுவரை இலங்கையில் பிறக்கும் குழந்தைகள் கடனாளிகளே

## அரசின் செயற்பாடுகளால் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஓக.23

அரசு 2050 ஆம் ஆண்டு வரை நாட்டில் பிறக்கும் குழந்தைகளை கடனாளிகளாக மாற்றியுள்ளது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"நாட்டிற்குள் பல்வேறு பிரச்சினைகள் இருக்கும் போது பலஸ்தீனத்துக்கு ஒரு மில்லியன் டொலர் நிதியுதவியை அரசு வழங்கியுள்ளது. இது இலங்கை ரூபா பெறுமதியில் ஆயிரத்து 300 லட்சம் ரூபா வாகும்.

பலஸ்தீனத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்க இந்த நிதியுதவி அளிக்கப்பட்டிருந்தாலும் இவ்வாறான பெருந்தொகை பணத்தை உதவியாக வழங்க அரச தலைவருக்கு அதிகாரம் இல்லை. அப்படியான நிதியுதவிகள் வழங்கப்படுமாயின் அதற்கான அனுமதியைப் பெற வேண்டிய வழிமுறைகள் உள்ளன.

உலகில் கடன் சுமை அதிகரித்துள்ள நாடுகள் வரிசையில் இலங்கை முதலிடத்தில் உள்ளது.

ஒரு தனி நபரும் 3.5 லட்சம் ரூபா கடனாளிகள். இல்லாத காரணத்தினால் கடன் வாங்குகின்றோம். அப்படி வாங்கும் கடனை எண்ணியது போல் அன்பளிப்பு செய்ய முடியாது. ஆனால் அரசு எண்ணம் போல் பணத்தை அன்பளிப்பு செய்து வருகிறது. "- என்று தெரிவித்துள்ளார். (ற)

Shakthi சக்தி FM
தமிழ் பேசும் மக்களின் சக்தி

# சக்தி FM யாழ் நேரலை

the Capital maharaja organisation limited
Since 1930

## யாழ் மண்ணிலிருந்து உலகெங்கும்

## தமிழ் பேசும் மக்களின் சக்தி

யாழ் நல்லூரில்

# சக்தி வளாகம்




ஆகஸ்ட்
**18 - 24**

உலகின் மிகப்பிரம்மாண்டமான
வானொலிக் கலையகம்
உங்கள் அன்பு அறிவிப்பாளர்கள்
ஏராளமான போட்டிகள்
அட்டகாசமான பரிசுகள்
தினமும் கலை நிகழ்ச்சிகள்

அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்

உத்தியோகபூர்வ பத்திரிகை

Shakthi சக்தி FM
Shakthi சக்தி TV
NEWS 1st
உதயன்
தமிழ் பேசும் மக்களின் சக்தி

நல்லூரான் சக்தி நாடெங்கும் பரவட்டும்
**104.1 / 103.9 FM**
**www.shakthifm.com**

## ரிலாக்ஸா வாசியுங்க....

### நண்பேன்டா,...

ஒருவனின் கைத்தொலைபேசியில் உள்ள அனைத்து எண்களும் அழிந்துவிடுகின்றன. பின்னர் அவனுடைய கைத்தொலைபேசிக்கு காதலியிடமிருந்தும் நண்பனிடமிருந்தும் தவறிய அழைப்பு (மிஸ் கோல்) வருகிறது. அவனது கைத் தொலைபேசியில் அனைத்து எண்களும் அழிந்துவிட்ட காரணத்தால், இந்த இரண்டு தவறிய அழைப்பிலும் யாரென்று தெரியாமல், அந்த இருவருக்கும் Who are you? (நீங்கள் யார் ?) என்று குறுந் தகவல் (எஸ்.எம்.எஸ்) அனுப்பினான்.

அந்த எஸ்.எம்.எஸ்ஸை படித்த நண்பனும் காதலியும் இவனுக்கு பதில் அனுப்பினார்கள்.

காதலி : Who are you ? (நீங்கள் யாருன்னா) கேட்கிறாய். அதுக்குள்ள என்னை மறந்திட்டியா. உன்னை நம்புனேன் பாரு. என்னை நானே செருப்பால அடிக்கணும்.

நண்பன் : டேய் மச்சி, அது Who are you? (நீங்க யாரு?) இல்லையடா How are you (எப்படி இருக்கிறீர்கள்) என்று சொல்லணும். நான் நல்லா இருக்கிறன். நீ எப்படி இருக்கிறாய்?



## 40 ஆவது ஆண்டில் சூப்பர் ஸ்டார்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சினிமாவில் 40 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளார். சாதாரண பஸ் நடத்துநராக தன் வாழ்க்கையைத் தொடங்கிய ரஜினி, பல்வேறு கஷ்டங்கள், போராட்டங்களைக் கடந்து சென்னைக்கு வந்தார்.

1975 ஆம் ஆண்டில் பாலசந்தரின், அபூர்வ ராகங்கள் படம் மூலம் தனது சினிமாப் பயணத்தை ஆரம்பித்தார் ரஜினி. ஏற்கனவே சிவாஜிகணேசன் என்றொரு நடிகர் தமிழ் சினிமாவில் இருந்ததால், சிவாஜிராவ் என்ற பெயர் அவருக்கு சரிவராது என்று ரஜினிகாந்த் என்றும் மாற்றி வைத்தார் பாலசந்தர். முதல் படத்திலேயே ரசிகர்களை ஏதோ ஒரு விதத்தில் கவர்ந்ததால், அவரது நடிப்புக்கு வரவேற்பு ஏற்பட்டது.

பின்னர் சில படங்களில் வில்லனாக நடித்த ரஜினி, அதையடுத்து ஹீரோவாக அவதரித்தார். ரஜினியின் ஸ்டைல் பார்த்து சில படங்களிலேயே அவருக்கென்று ஒரு தனிப் பாணி உருவாகியதால் சூப்பர் ஸ்டார் என்ற பட்டமும் பெற்றார். அப்போது முதல் இப்போது வரை சூப்பர் ஸ்டார் பட்டத்தை தக்க வைத்து கொண்டுள்ளார். கருப்பு - வெள்ளை காலம் தொடங்கி இப்போது 3டி அனிமேஷன் வரை வளர்ந்து நிற்கிறார். தற்போதும் படங்களின் வசூலில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்து வருகிறார்.

ரஜினி நடித்த முதல்படமான அபூர்வ ராகங்கள் படம் 1975 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 18 ஆம் திகதி வெளியானது. அதனடிப்படையில் ரஜினி, சினிமாவுக்கு வந்து 39 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன.

## சும்ம நச்சுன்னு....



"சத்திர சிகிச்சையை பாதியில் நிறுத்திட்டு டொக்டர் எதோ புத்தகத்தைப் புரட்டிக்கிட்டிருக்கிறாரே.. ஏன்?'
'கிட்னி எங்கயிருக்கு என்று அவருக்கு சந்தேகம் வந்திட்டுதுதாம்"!

"பொறுப்பான ஆசிரியர் பதவியில இருக்கற நீங்கள், காலையிலேயே குடிச்சுட்டு பாடசாலைக்கு வரலாமா?"
"எழுத்தெல்லாம் பளிச்னு தெரிய வேண்டுமென்றால், ஒரு 'கிளாஸ்' போடுங்கள் என்று டொக்டர் தான் சொன்னார்."

"கோழியில இருந்து தான்டா முட்டை வந்தது."
"அது எப்படியடா அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்"
"சிக்கன் புரியாணியில் முட்டை இருக்கும். ஆனால், முட்டை புரியாணியில சிக்கன் இருக்காது. அதனாலதான் கோழியில இருந்துதான் முட்டை வந்தது!!!"

முதலாளி தன் மேலாளரிடம்... அந்த மொட்டையைப் பார்த்தாலே ஏதோ ரவுடி போல இருக்கு.. முகத்தில் அரிவாள் வெட்டு தழும்பு எல்லாம் இருக்கு.. அவனைப் போய் கணக்காளராக போட்டு இருக்கிறீங்க.
பணத்தைத் தூக்கிட்டு ஓடிட்டான்னா..? அந்தத் தழும்பையே அடையாளமா பொலிஸுக்கு சொல்லலாம்..!

## இன்றைய பேஸ்புக் தத்துவம்




வாழ்க்கை
என்பது பனை
மரம் போல.
ஏறினா நுங்கு....
விழுந்தா
சங்கு....



## இது நல்லாயிருக்கே....!

## வைரஸாகப் பரவும் சமந்தாவின் நீச்சல் உடைப்படம்...!



தமிழில் இதற்கு முன்னர் சில படங்களில் கதாநாயகியாக சமந்தா நடித்திருந்தாலும், எந்தப் படமும் அவருக்குப் பெயர் சொல்லும் அளவுக்கு இல்லாமலே போனது. அதன் பின்னர் தெலுங்கில் தொடர்ந்து வெற்றிப் படங்களாக அமைய அங்கு முன்னணி கதாநாயகி யானார் சமந்தா. ஆனால் தமிழில் மட்டும் முன்னணிக்கு வரமுடியாமல் இருந்தார். திடீரென அவருக்கு 'அஞ்சான்' படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. அடுத்து 'கத்தி' படத்திலும் கதாநாயகியாக ஒப்பந்த மானார். இரண்டு படங்களில் 'அஞ்சான்' முதலில் வெளிவந்து சமந்தாவைப் பற்றி அதிகமாகவே பேச வைத்துவிட்டது. அது நடிப்பைப் பற்றிய பேச்சு அல்ல, [illegible] உடையைப் பற்றிய பேச்சு.

[illegible] சமந்தா படு 'கிளாமராக' நடித்திருக்கிறார். ஒரு [illegible] மட்டுமே [illegible] வருகிறார். மற்ற [illegible] குட்டைப் பாவாடை, குட்டையான ரவுசர் [illegible] மட்டுமே அணிந்து வருகிறார். இது [illegible] படம் பார்க்கும் ரசிகர்களுக்கு நெளிய [illegible] அளவில் இருந்தாலும், இளம் ரசிகர்களை [illegible] கவர்ந்திருக்கின்றது.

[illegible] ஒரு பாடல் காட்சியில் சமந்தா சில வினாடிகள் [illegible] உடையில் வரும் [illegible] சத்தம் அதிகமாக [illegible]. அந்தக் குறிப்பிட்ட காட்சியின் புகைப்படம் [illegible] சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டு பரவி வருகிறது.

தமிழ்த் திரையுலகில் முன்னணியில் வருவதற்கு சமந்தா நீச்சல் உடையிலும் நடித்தது மற்ற நடிகைகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.



இலங்கையில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு இராணுவ உயரதிகாரிகள் நேற்று முன் தினம் கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்டனர். நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் இவர்கள் கிளிநொச்சி இராணுவ முகாம்களுக்கு சென்றதுடன், கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள ஒத்துழைப்பு மத்திய நிலையத்தையும் பார்வையிட்டனர். கிளிநொச்சி மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவையும் இவர்கள் சந்தித்துப் பேசினர். (த)

## சர்வதேச பாலூட்டும் வார நிகழ்வு கரைச்சியில்

கிளிநொச்சி.ஒக.23

சர்வதேச பாலூட்டும் வார நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலர் லோ.நாகேஸ்வரன் தலைமையில் நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்து கொண்ட பெரும் தொகையான தாய்மார்களுக்கு அறிவூட்டல் கருத்துரைகளை பிரதேச சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் வழங்கினர்.

இதேவேளை சர்வதேச பாலூட்டும் வார நிகழ்வுகள் கிளிநொச்சியின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

## சிறுதானியச் செய்கைகள் கால்நடைகளால் அழிவு

பூநகரி, ஒக.23

பூநகரி குடமுருட்டிக் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்டிருந்த சிறுதானியப் பயிர்ச் செய்கை கால்நடைகளினால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.



இந்தக் குளத்தின் கீழ் சின்னப்பல்லவராயன்கட்டு கிராமத்தைச் சேர்ந்த 44 விவசாயிகளால் 22 ஏக்கரில் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் கால்நடைகளால் சிறுதானியச் செய்கை முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கந்தபுரம் கிராமத்தி லிருந்து வரும் கட்டாக்காலி கால்நடை களினாலேயே பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறினர். குடமுருட் டிக் குளத்தின் கீழ் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் காலநிலைகளை கருத்திற் கொள்ளாமல் நீண்ட இடைவெளிகளிலும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டமை இத்தகைய அழிவுக்குரிய காரணமாக கூறப்படுகிறது. (த-18)

# குளங்கள், வாய்க்கால் புனரமைக்க 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## மன்னார் மாவட்ட செயலகம் தெரிவிப்பு

மன்னார், ஒக.23

மன்னார் மாவட்டத்தின் விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் அந்த மாவட்டத்தின் குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் புனரமைப்புக்கென 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

**குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் பாவனையற்று இருப்பதால் இந்த மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.**

போர்க் காலச் சூழல் மற்றும் இயற்கை அழிவுகள், காலநிலை மாற்றங்களால் சிதைவடைந்த குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் பாவனையற்று இருப்பதால் இந்த மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

இவற்றின் புனரமைப்புத் தொடர்பில் மன் னார் மாவட்ட செயலகத்தால் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து இந்த நிதி ஒதுக்கீடு மன்னார் மாவட்ட செயலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. நிதி ஒதுக்கீட்டின் படி புனரமைப்பு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (த-14)

## புதிய பாடசாலையை அமைக்க கோரிக்கை

கிளிநொச்சி.ஒக.23.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி அரசர்கேணியில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் புதிய பாடசாலை ஒன்றை உருவாக்கும் படி வேண்டுகோள் விடுத்துள்ளதாகப் பச்சிலைப்பள்ளி கோட்டக் கல்விஅதிகாரிசு.ஆனந்தசிவம் தெரிவித்தார். மேற்படி குடும்பங்கள் தமது கோரிக்கைகளை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர், அரச அதிபர், பிரதேச செயலர் ஆகியோரிடம் மனுக்கள் மூலம் கோரியுள்ளனர்.

மக்களின் கோரிக்கையில் நியாயப்பாடுகள் உள்ளதாகவும், அரசர்கேணியில் ஆரம்ப பாடசாலை அமைப்பது முக்கியமானதெனவும், வேம்பொடுகேணிச்சந்திக்கும் பளை நகரத்துக்குமிடையில் அரசர்கேணி கிராமமுள்ளதுடன் 70 இற்கு மேற்பட்ட கிராமங்கள் இந்தக்கிராமத்தில் வாழ்ந்து வருவதாகவும் கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்தார். (த-18)

## தேசிய வீரன் பண்டார வன்னியன் ஞாபகார்த்த விழா வவுனியாவில்

வவுனியா, ஒக.23

தேசிய வீரனும் வன்னி மண்ணின் மன்னனுமான பண்டாரவன்னியனின் ஞாபகார்த்த விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு வவுனியா கலாசார மண்டபம் வரை ஊர்வலம் செல்லவுள்ளது. ஊர்வலத்தைத் தொடர்ந்து கலாசார மண்டபத்தில் மேடை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வரவேற்புரையை மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராஜாவும் வரவேற்பு நடனத்தை நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவிகளும் வழங்குவர்.

தலைமையுரையை கலாபூசணம் இ.சிவசோதியும், நினைவுப் பேருரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் அருணா செல்லத்துரையும் நிகழ்த்துவார்.

கவி மன்ற நிகழ்வை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும், தேசிய வீரன் பண்டாரவன்னியன் நாடகத்தை வவுனியா கலைத் தொடர்பு மையமும் வழங்கவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திரவும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.சிற்றம்பலம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அசங்க காஞ்சன குமார உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-421)

## தண்ணீர் தாங்கியில் உள்ள குளவிக் கூட்டினால் மக்கள் அச்சம்

வவுனியா, ஒக.23

வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள தண்ணீர்த் தாங்கியில் உள்ள குளவிக் கூட்டால் ஆபத்து நேரிடலாம் என்று பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்

வவுனியா பஸ் நிலையம், வங்கிகள் மற்றும் வர்த்தகக் கட்டடத் தொகுதிகள் ஆகியவற்றுக்கு அண்மையில் தண்ணீர்த் தாங்கியில் உள்ள குளவிக்கூடுகளால் எந்நேரமும் ஆபத்து நேரிடலாம் என்று கூறப்படுகிறது.

வவுனியாவில் புதுக்குளம் பாடசாலையில் இருந்த குளவிக் கூடு கலைந்து குளவிகள் தாக்கியதால் ஆசிரியர் ஒருவர் கடந்த ஆண்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் நெளுக்குளம் பாடசாலையில் இவ்வாண்டு குளவிக்கூடு கலைந்தமையால் மாணவர்கள் உட்பட ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டனர்.

எனவே குறித்த குளவிக் கூடுகளை அகற்றிவிடுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வர்த்தகர்கள், பயணிகள், பொது மக்கள் உட்பட பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

## மன்னார் மருத்துவமனையில் புகையூட்டும் நடவடிக்கைகள்

### நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த



மன்னார், ஒக. 23

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனை வளாகத்தில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் புகையூட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் நிர்வாக அலுவலர் எஸ்.என்.எம். சஜானியின் மேற்பார்வை யில் இந்தப் புகையூட்டும் வேலைத் திட்டம் இடம் பெற்று வருகின்றது.

கடந்த புதன்கிழமை மாலை முதல் குறித்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து மன்னார் மருத்துவமனை வளாகப் பகுதியில் மழை நீர் தேங்கியுள்ளது. இந்த நிலையில் மருத்துவ மனையில் நுளம்புப் பரவல் அதிகரித்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புகையூட்டல் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-56)

## வேலைக்குச் செல்லுமாறு அடித்துக் கலைத்தார் தாய்

### 13 வயதுச் சிறுமி பொலிஸில் முறைப்பாடு

வலி.வடக்கு, ஓக. 23

பாடசாலை செல்லும் சிறு மியை வேலைக்குச் செல்லும் படி அடித்து விரட்டிய தாய்க்கு எதிராகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் குறித்த சிறுமியால் நேற்று முன்தினம் வியாழக் கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச் சேர்ந்த 13 வயது உடைய மாணவியொருவரே தனது தாயாருக்கு எதிராகப் பொலிஸ் நிலையம் சென்று இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் பிரிவின் மகளிர் சிறுவர் பிரிவுப் பொலிஸார் உடனடியாக நடவ டிக்கையில் ஈடுபட்டதுடன் குறித்த சிறுமியின் தாயாரை பொலிஸ் நிலையம் வருமாறு அழைப்பு அனுப்பியுள்ளனர்.

எனினும் சிறுமியின் தாயார் பொலிஸ் நிலையம் செல்லாத தால் சிறுமி வீட்டுக்குச் செல்ல மறுத்து விட்டார்.

இதனையடுத்துச் சிறுமி சுன்னாகம் பொலிஸ் பெண்கள் பிரில் தங்க வைக்கப்பட்டுள்ளார். சிறுமியை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திச் சிறுவர் இல்லத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-86)



இணுவைக் கந்தனின் உலகப் பெருமஞ்சத்தை உருவாக்கிய மகான் பெரிய சன்னியாசியாரின் சிலை ஊர்வலமும் பிரதிஷ்டையும் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. சன்னியாசியாரின் உருவச்சிலை அடியார்கள் சகிதம் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் இருந்து மேள தாள வாத்தியங்களுடன் இணுவைக் கந்தன் ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. இந்த நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். (த-86)

## சுன்னாகம் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய பணிப்பாளர் சபை விரைவில்

வலி. வடக்கு, ஓக. 23

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எதிர் காலச் செயற்பாடுகள் தொடர் பான கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண முதலமைச் சர் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றுள் ளது.

இதன்போது விரைவில் புதிய பணிப்பாளர் சபையைத் தெரிவு செய்வதற்குரிய நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் பணித்துள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் சுன்னாகம் சங்கத் தலை வரினால் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் காரணமாகப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாமலும், உரிய நிர்வாகக் கட்டமைப்பு கள் இன்றியும், நூற்றுக் கணக் கான ஊழியர்கள் வேலையில் இருந்து நீங்கிய நிலையிலும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் சங்கம் உள்ளது.

அத்துடன் பல கிளைகள் பூட் டப்பட்டு உரிய முறையில் செயற்படாமல் உள்ளன. பணிப் பாளர் சபை உறுப்பினர்கள் மூவர் பதவி விலகியுள்ளனர்.

ஊழியர்கள் நியமனங்கள் உறுதி செய்யப்படாமை மற் றும் பெரும் நிதி நெருக்கடியின் மத்தியில் சங்கம் செயற்படு கின்றமையை அடுத்து மாகா ணக் கூட்டுறவு அமைச்சரான முதலமைச்சர் இந்தக் கலந் துரையாடலை நடத்தினார்.

விரைவில் புதிய பணிப்பாளர் சபையைத் தெரிவு செய்வ தற்கு நடவடிக்கை எடுக்கு மாறு கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் தற் போதைய பணிப்பாளர் சபை யினர் ஆகியோருக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர், யாழ். மாவட் டக் கூட்டுறவு உதவி ஆணை யாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-86)

# ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்காதோர் மீது சட்ட நடவடிக்கை

### பிரதித் தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்காத நிறு வனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பணிப்புரை விடுத்துள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க. கனகேஸ் வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் மற் றும் வர்த்தக நிலையங்களில் போயா மற்றும் விடுமுறை தினங்கள் உள்ளிட்ட ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங் குமாறு கோரி ஊழியர்கள் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் ஆகி யோருக்கு மனு கையளித் திருந்தனர்.

அந்த மனுவின் பிரகாரம், யாழ். மாவட்டத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள், வர்த் தக நிலையங்களில் கடமை யாற்றும் ஊழியர்களுக்குப் போயா மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை வழங் குவதற்கான ஆவணங்களை பரிசீலனை செய்யுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பணித்துள் ளார்.

அதன் பிரகாரம் யாழ். மாவட் டத்தில் உள்ள அத்தியாவசிய நிலையங்கள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களில் கடமையாற் றும் ஊழியர்களின் விடு முறை தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊழியரை விடுமுறை தினத் தில் வேலைக்கு வைத்திருப் பதானால் விடுமுறை நாளுக் கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டுமென் றும் அவ்வாறு வழங்கப்படாத நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படு மென் றும் அவர் குறிப்பிட்டார்.

அந்த வகையில், ஊழியர் சேமலாப நிதி வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் 12 வழக்குகளும், கிளிநொச்சியில் 15 வழக்குகளும், வவுனியா வில் 22 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தொழிலாளர்கள் தொடர்பான சட்ட நடை முறைகளைப் பின் பற்றாத நிறுவனங்கள் மற்றும் விடுமுறை வழங்காத நிறு வனங்கள், வர்த்தக நிலை யங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்றும் வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் மேலும் கூறினார். (த-106)

## வீதிகளில் கொட்டப்படும் குப்பை அசௌகரியத்தில் நல்லூர் மக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்களால் அதிகளவில் பயன் படுத்தப்படும் வீதிகளில் குப் பைகள் இடத்துக்கிடம் கொட் டப்படுவதால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகங் கொடுப்பதாக நல்லூர்ப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுமக்கள் கூறுகையில்,

நல்லூர்ப் பகுதியில் பல பொது இடங்களில் குப்பைகள் கொட் டப்பட்டாலும் குறிப்பாக சிவன் அம்மன் வீதி மற்றும் புதிய சிவன் வீதி இணையும் வீதிச் சந்தியில் குப்பைகளைக் கொட் டும் செயற்பாடு அண்மைக் காலமாக அதிக அளவில் இடம் பெற்று வருகின்றது.

இதன் காரணமாக இந்த வீதி யைப் பயன்படுத்துபவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள் கின்றனர்.

இந்தச் சூழலில் குப்பைகளைக் கொட்டுவோர் தொடர்பாக இது வரை மாநகர சபை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ள



வில்லை. ஆனால் அந்த இடங் களை மாநகர சபை குப்பை சேகரிக்கும் இடமாகப் பயன் படுத்துவதாக அறிவித்திருப்ப தாக தெரியவருகிறது. ஆனால் அதற்கான ஆதாரம் எதுவும் அங்கில்லை. இந்த இடங் களில் குப்பைகளைக் கொட்டு பவர்கள் பெரும்பாலும் உயரதி காரிகளாகப் பணி புரிபவர்கள் தான். அவர்கள் சமூகத்தின் நலனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களாக உணர்ந்து இவ்விடங்களில் குப்பைகளைப் போடுவதைத் தவிர்க்காவிடின் நாம் மிக விரைவில் அவர்கள் தொடர் பான பெயர் விபரங்களை வெளியிடுவோம் எனத் தெரி வித்தனர்.

இவ்விடத்தில் குப்பை கொட்ட வேண்டாம் என்ற அறிவிப்பு எழுதப்பட்டுள்ள இடத்திலேயே குப்பைகள் கொட்டப்பட்டுள் ளதைக் காண முடிகிறது. (த-10)

## கோணப்புலம் நலன்புரி முகாம் மக்களுடன் அங்கஜன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து கோணப்புலம் நலன் புரி நிலையத்தில் வசிக்கும் மக்களை வட மாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் நேற்று முன்தினம் மாலை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வலி. வடக்கிலிருந்து கடந்த 23 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த இந்த மக்கள் குறித்த நலன்புரி நிலையத் திலேயே வசித்து வருகின்ற னர். இந்த மக்களின் குடிசை களுக்கு நேரில் சென்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர் அங்கஜன் அந்த மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

தாம் கடந்த 23 வருடங்களாக தப்படாமல் உள்ளதாகவும், தமது காணிகளை இராணு வம் கையகப்படுத்தி வைத் திருப்பதாகவும் அந்த மக்கள் அங்கஜனிடம் தெரிவித்தனர்.

கடந்த வருடம் இங்கு வந்த சில அதிகாரிகள் எமக்கு வேறு இடத்தில் காணி தரலாம் எனக் கூட்டிச்சென்று கீரிமலை வீதி யில் கல் குவாரிக்கு அருகில் உள்ள காணியைக் காட்டி அங்கு வந்து குடியேறுமாறு கூறி னார்கள். நாம் அந்தக் காணி களில் குடியேறமாட்டோம் எம்மை எமது சொந்த இடத்தில் தான் குடியமர்த்தவேண்டும் எனத் தெரிவித்தோம் என வும் அவர்கள் கூறினார்.

மேலும் தம் மத்தியில் வேலை யில்லா பிரச்சினை காணப் படுவதாகவும் இதனால் தமது



அந்த முகாமில் பல இன்னல் களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும், இன்னும் சொந்த இடங்களில் குடியமர்த் பகுதி மக்கள் கடும் வறுமைக் குள்ளான நிலையில் இருப்ப தாகவும் அவர்கள் தெரிவித் தனர். (த)

## பார்வையாளர் மண்டபம் இன்று திறப்பு

தென்மராட்சி, ஓக.23


சாவகச்சேரி சங்கத்தானை இளைப்பாறிய ஆசிரியர் அமரர் வ.பொன்னுச்சாமி, அமரர் திருமதி நல்லம்மா பொன்னுச்சாமி ஆகியோரின் நினைவாக அமைக்கப்பட்ட பார்வையாளர் மண்டபம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திறந்து வைக் கப்படவுள்ளது. யாழ். பிராந் திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ் வரன் முதன்மை விருந்தின ரா கக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். (வ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 13ஆவது திருத்தத்தைவிட்டு வெளியே வாருங்கள்

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு இப்போது சாத்தியமாகி இருக்கிறது. புதுடில்லியில் இந்த இரு தரப்பினரும் இன்று சந்தித்துப் பேச்சு நடத்துகிறார்கள்.
நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வரலாற்று வெற்றியைப் பெற்றுக்கொண்ட சூழலில், தமிழர்கள் பிரச்சினை குறித்து உடனடி அக்கறை ஒன்று செலுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு ஈழத் தமிழர்களிடமும் புலம்பெயர் தமிழர்களிடமும் தமிழகத் தமிழர்களிடமும் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் காட்சிகள் எதிர்பார்ப்பிற்கு மாறானவையாகவே கடந்தன. தனக்கு முன்னர் இருந்த காங்கிரஸ் அரசின் பாதையிலேயே தானும் பயணிக்க இருப்பதாக மோடி அரசு வெளிப்படுத்தியது.
இந்தப் பின்னணியில் மோடி அரசும் வழக்கம்போலவே தனது அரசியல் வெற்றிக்கு மட்டும் ஈழத் தமிழர்களைப் பயன்படுத்திக்கொண்டு பின்னர் கழற்றிவிட்டுவிட்டது என்ற விரக்தி தமிழகத் தலைவர்களிடமும் ஈழத் தமிழர்களிடமும் ஏற்பட்டது. ஆனால் நிதானமான நகர்வுகளின் பின்னால் இப்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் - மோடி சந்திப்பு சாத்தியமாகி இருக்கிறது.
பாரதிய ஜனதா அரசின் பதவியேற்பு வைபவத்திற்குச் சென்றிருந்த கொழும்பு அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சின் பின்னர் கொழும்பின் எதிர்வினை என்ன என்று கணிப்பதற்கான கால அவகாசமாக புதுடில்லி இத்தனை காலம் காத்திருந்தது என்றும் இதனை எடுத்துக்கொள்வதற்கு இடமிருக்கிறது.
மோடி - மஹிந்த சந்திப்பின்போது மன்மோகன் சிங் அரசுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதை மோடி சுட்டிக்காட்டியிருந்தார். போர் முடிந்ததும் தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வு காணப்படும் என்பது மன்மோகன் சிங்குக்கு அப்போது மஹிந்தவால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்று. ஆனால், மோடி அரசு பதவியேற்றதன் பின்னரும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்பதை கொழும்பு அரச தலைவர் மஹிந்த திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். அண்மையில் வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்களைச் சந்தித்துப்பேசியபோதுகூட மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்கப்போவதில்லை என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். அதன் அர்த்தம் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை கொழும்பு ஒருபோதும் முழுமையாக நிறைவேற்றப்போவதில்லை என்பதுதான்.
நிலைமை இப்படி இருக்கையில் புதுடில்லி சென்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், 13ஆவது திருத்தத்தை கொழும்பு அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கு மேலும் செல்வதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று இந்தியத் தலைவர்களிடம் வலியுறுத்தப்போகிறார்கள் என்று இங்கிருந்து புறப்படும் முன்னர் கூறியிருந்தார்கள்.
இது, கூட்டமைப்பினர் பாறையில் தலையை மோதுவதற்கு ஒப்பான செயல்.சாத்தியமற்ற ஒன்று என்று தெரிந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதற்காக முயல்வது வீணானது. 13ஆவது திருத்தத்தை கொழும்பு அரசுகள் ஒருபோதும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதில்லை என்பது திண்ணம். இதன் பின்னரும் மீண்டும் மீண்டும் அதனை வலியுறுத்துவதால் பயனில்லை. அது நடைபெறப் போகிற காரியமும் இல்லை.
அதுவும்போக, 13ஆவது திருத்தம் தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வாக ஒருபோதும் இருக்கப்போவதும் இல்லை. அதைத் திருத்தியோ, அதனுடன் சிலவற்றைச் சேர்த்துமோகூட அது ஒரு தீர்வாகப் பரிணமிக்கப்போவதில்லை. எனவே 13ஆவது திருத்தம் என்ற கோஷத்தைக் கூட்டமைப்பினர் முற்றுமுழுதாகக் கைவிடவேண்டும்.
இன்று இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேசும்போது 13ஆவது திருத்தம் தமிழர் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வாகாது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைப்பதுடன், பல்லின, பல கலாசார, பல மத நாட்டைக் கட்டியெழுப்பி அதில் அனைத்து மக்களும் சம உரிமையுடனும் சமத்துவத்துடனும் வாழ்வதற்கான புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க இந்தியா தனது முழுமையான பலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் அதை அவ[illegible]ரமாகச் செய்ய வேண்டும் என்றும் புதுடில்லிக்கு அழு[illegible]த்தம் கொடுக்க வேண்டும்.





சுதந்திர தினவிழா என்பது தேசிய திருவிழா. தேசத்தின் செயல்பாட்டை மாற்றி அமைப்பதற்காகவும், சுத்திகரிப்பதற்காகவும் நாட்டு மக்கள் அனைவரும் நம்மை அர்ப்பணிக்கவும், நம் ஒவ்வொரு செயலும், நாட்டின் நலனுக்காக மட்டுமே இருக்க வேண்டும் என்றும் இந்தத் தேசிய திருவிழாவில் உறுதிஎடுப்போம் என்று கூறி, மோடி உரையை தொடங்கியது, மிகவும் உத்வேகத்தை அளிக்கும் வகையில் இருந்தது.

# மந்திரி அல்ல சேவகன் நான்

1947ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி நள்ளிரவில் இந்தியா சுதந்திரம் அடைந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசை நடத்தும் பிரதமர், ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரத்தினத்தன்று டில்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றுவார். இது ஆண்டு தோறும் நடக்கும் ஒரு சம்பிரதாயம் என்றாலும், ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரத்தினத்தன்று பிரதமர் என்ன உரையாற்றுகிறார்?, அவர் தனது உரையில் கோடிட்டுக் காட்டும் கோட்பாடுகள் என்ன? என்பதை நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், உலகமே உன்னிப்பாகக் கவனிக்கும். அந்த வகையில், கடந்த மே மாதம் 26ஆம் திகதி பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோடி இந்த ஆண்டு சுதந்திரத்தினத் தன்று தேசியக்கொடியை ஏற்றிவைத் தார்.
இவர் இதுவரையில் உரையாற்றிய பிரதமர்களிலேயே வித்தியாசமான பின்னணியை கொண்டவர். இதுவரை இருந்த பிரதமர்கள் அனைவரும் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு பிறந்த வர்கள். இவர்தான் சுதந்திர இந்தியா வில் பிறந்த முதல் பிரதமர். டில்லிக்குப் புதியவர். இவர் என்ன பேசப்போகி றாரோ? என்ற எதிர்பார்ப்பு எல்லோருக் கும் இருந்தது.
நரேந்திரமோடியும் உரையாற்றவரும்போதே மிக வித்தியாசமான முறையில் தான் வந்தார். அவரது வழக்கமான உடையிலேயே வந்த அவர், தலையில் விவேகானந்தர்போல தலைப்பாகையுடன் வந்தார். இதுவரையில் இல் லாத அளவுக்கு ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் வந்திருந்த இந்த சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தில், அவரது தோற்றமே ஆச்சரியத்தை அளித்தது.
பொதுவாக பிரதமர்கள் குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்துதான் மக்கள் முன் உரையாற்றுவார்கள். ஆனால், எல்லோரையும் விட அதிக அச்சுறுத்தல் உள்ள நரேந்திர மோடி, குண்டு துளைக்காத மேடையே வேண்டாம் என்று சொல்லி, சாதாரணமாக ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதுபோல பேசினார். வழக்கமாகப் பிரதமர்கள் சுதந்திரதினத்தில் உரையாற்றும்போது, ஏற்கனவே தயாரித்து கொண்டு வந்த உரையைத்தான் ஆற்றுவார்கள். ஆனால், நரேந்திர மோடி எந்தவித தயாரிப்பும் இல்லாமல், சர்வ சாதாரணமாக 65 நிமிடங்கள் பேசினார். பொதுவாகப் பிரதமர்கள் சுதந்திரதினத்தில் உரையாற் றும்போது, அடுக்கடுக்கான அறிவிப்பு களை வெளியிடுவது வழக்கம். ஆனால், நரேந்திரமோடியின் உரையோ மக் களுக்கு நம்பிக்கையை ஊட்டி, தட்டி எழுப்பும் வகையில் அமைந்திருந்தது.
பொதுமக்கள் மாற்றிக்கொள்ளவேண்டிய மனப்பான்மைகளையும், அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகளையும் விளக்கிக்கூறி, நாட்டையே உற்சாகப்படுத்தும் வகையில் பேசினார்.
சுதந்திர தினவிழா என்பது தேசிய திருவிழா. தேசத்தின் செயல்பாட்டை மாற்றி அமைப்பதற்காகவும், சுத்திகரிப்பதற்காகவும் நாட்டு மக்கள் அனைவரும் நம்மை அர்ப்பணிக்கவும், நம் ஒவ்வொரு செயலும், நாட்டின் நலனுக்காக மட்டுமே இருக்கவேண்டும் என்றும் இந்தத் தேசிய திருவிழாவில் உறுதிஎடுப்போம் என்று கூறி, தனது உரையைத் தொடங்கியது, மிகவும் உத்வேகத்தை அளிக்கும் வகையில் இருந்தது.
இந்த சுதந்திரதின விழாவுக்காக, பிரதமர் மோடி ஜனதான யோஜனா என்ற ஒரு புதிய திட்டத்தை அவர் அறிவித்தார். நாட்டில் பெரும்பாலானவர்களுக்கு மொபைல் போன் இருக்கிறது. ஆனால், வங்கிக் கணக்கு இல்லை என்று கூறிய அவர், அனைவரும் வங்கிக் கணக்கைத் தொடங்கும் வகையில், ஒரு புதிய திட்டத்தை அறிவித்தது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.
எதிர்காலத்தில் கைத் தொலைபேசி மூலமே அனைத்து அரசு சேவைகள், வங்கிச்சேவைகளைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தி, டிஜிற்றல் இந்தியாவை உருவாக்கப் போகும் தொலைநோக்கு பார்வையை மோடி காட்டிவிட்டார்.
எல்லாவற்றுக்கும்மேலாக, உழைப்பின் மேன்மையையே இறுதியாகக்கூறி முடித்தார். நாட்டின் வளர்ச் சிக்காக மக்கள் 12 மணி நேரம் உழைத்தால், நான் 13 மணி நேரம் உழைப்பேன். அவர்கள் 13 மணி நேரம் உழைத்தால், நான் 14 மணி நேரம் உழைப்பேன். ஏனெனில், நான் பிரதம மந்திரி அல்ல, பிரதம சேவகர் என்று கூறி, இந்த சுதந்திரதின உரையை மக்களுக்கு நம்பிக்கையூட்டும் உரையாக, மக்களும், அரசும் கைகோர்த்து பணியாற்றவேண் டிய அவசியத்தை தெரிவிக்கும் உரையாக மாற்றிவிட்டார்.

# பெண்களின் பாதுகாப்பு பெண்களின் கைகளில்தான்

ஜோ.குட்டி

செய்திகள் என்றாலே பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான செய்தி ஒன்றா வது இல்லாமல் இருக்காது. தற்போது. பத்திரிகையைப் புரட்டினால் முதற் பக்கத்தி லேயே பெண்ணோ, சிறுமியோ துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட செய்தி இருக் கும். வானொலி,தொலைக்காட்சி என எதைப் பார்த்தாலும் உலகில் எங்கோ ஒரு மூலையில் யாராவது ஒருவர் பாலியல் ரீதி யான தொல்லைகளுக்கு உள்ளாகியிருப்பர். ஏன் உலகு என்ற பெரிய பரப்புக்குள் செல்ல வேண்டும்? இலங்கையை எடுத்துக் கொள் ளுங்கள். அதிலும் [illegible] பகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனையோ பாலியல துஷ்பிரயோகச் சம்பவங்கள் கடந்த 3 மாத காலப்பகுதிக்குள் பதிவாகியுள்ளன. வெளியே தெரியாமல் எத்தனையோ சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளானால் சமுதாயமும் அவர்களின் உடைபிழை. நடைபிழை என்று கூறும். அதைமுற்றாக மறுக்கமுடியாது. அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

எத்தனையோ ஆண்கள் பெண்களுக்குப் பக்கபலமாக உற்றதுணையாக எத்தனையோ சந்தர்ப்பங்களில் நடந்திருக்கிறார்கள். ஒரு சிலரது தவறான செய்கைகள் ஒட்டுமொத்த ஆண்வர்க்கத்தையும் பாதிப்பதாக உள்ளது. ஆகவே ஒட்டுமொத்த ஆண்வர்க்கத்தையும் நாம் குறை கூறமுடியாது.

காரைநகரில் 11 வயதுச் சிறுமி 11 நாள்களாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். அவளுடன் அவள் நண்பியும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட தடயங்கள் இருப்பதாக வைத்தியசாலைத் தரப்பினர் தகவல் வெளியிட்டிருந்தனர். இந்தச் சம்ப வத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கடற்படை யினர் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

சிலதினங்களுக்கு முன்னர் மன்னாரில் சிறுமி ஒருத்தி வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் ஓர் இரா ணுவ வீரர் ஒருவர். இதுபோக பெண்ணொ ருவர் இரவு தூங்கிக் கொண்டிருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த கடற்படைவீரர் ஒருவர் குறித்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றவேளை அயலவர்களால் கட்டிவைக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியுள் ளது.

இங்கு 30 வருடகாலம் உள்நாட்டுப் போர் நிலவியபோதிலும் எமது பெண்கள். குழந்தை கள் சுதந்திரமாகத்தான் இருந்தார்கள். அப் போதும் வடக்கில் இருந்தது சீருடைதான். ஆனால் அது இப்போதும் தலைநிமிர்ந்து பார்க்க வைக்கும் சீருடை. பாதுகாவலாக இருந்தசீருடை. இப்போது பாதுகாப்பு என்ற பெயரில் வேலியே பயிரை மேயும் சம்பவங் கள்தான் பதியப்படுகின்றன. ஒரேதேசம். ஒரேநாடு. ஒரே மக்கள் என்று கூறிக் கொண்டு மலர்ந்து இரண்டு இதழ்கள் விரியமுதலே மலர்களைக் கருக்குவது நியாயப்படுத்தமுடியாத விடயமாகும்.

சிறுமிகளுக்கு வீடுகளில் பாலியல் ரீதி யானஅறிவை வழங்க வேண்டிய தேவை தற்காலத்தில் அவசியமாகின்றது. காரைநக ரில் இடம்பெற்ற 11 வயதுச் சிறுமியை 11 நாள்களாக வல்லுறவுக்குட்படுத்தியசம்பவத் துக்குக் குறித்த சிறுமிகளுக்கு அதுபற்றி தெரிந்திருக்காமையும் ஒருகாரணமாகும்.

சிறுபராயத்தவரை பாலியல் ரீதியாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ துன்புறுத் துவதற்கு என்று தனிமனம் ஒன்று வேண் டும். கொடூரமானவர்களாக இருப்பவர்களே இந்தச் செயலுக்குத் துணிவார்கள்.



எத்தனையோ பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் கடந்த 3 மாத காலப் பகுதிக் குள் பதிவாகியுள்ளன. வெளியே தெரியாமல் எத்த னையோ சம்பவங்கள் இடம்பெற்று வருகின் றன. பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளானால் சமுதாயமும் அவர்களின் உடைபிழை. நடைபிழை என்று கூறும். அதைமுற்றாக மறுக்க முடியாது. அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

போருக்கு பின்னர் அபிவிருத்தி என்ற பெயரில் நாம் சம்பாதித்து வைத்திருக்கும் பலவற்றில் முக்கியமானது போதைவஸ்து எனப்படும் கொடிய நஞ்சாகும்.

கஞ்சாவுடன் பெண் கைது,கேரளா கஞ்சா யாழ்ப்பாணத்தில் மீட்பு, பாடசாலைக்குள் கஞ்சா பக்கற்றுக்கள் மீட்பு.. சொல்லிக் கொண்டே போகலாம். மனிதனை மனிதத் தன்மையில் இருந்து தூர இழுத்துச் செல்லும் போதைப் பாவனை கூட பாலியல் வல்லுறவுக்கு முக்கிய காரணமாகின்றது. போதைக்கு அடிமையாகிக் கிடப்பவனுக்கு குழந்தை என்ன? குமரி என்ன? பெண் என்று ஒருவிடயமே போது மானதாக உள்ளது.

முப்பது வருசமா என்னத்தக் கண்டம். சும்மா சண்டையைத்தான் கண்டமிச்சம். இப்ப நாங்கள் சந்தோசமா இருக்கிறம் என்ற மன நிலையில் யாராவது இருக்கின்றீர்களா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உங்கள் வீட்டுப்பெண் கொஞ்சம் தாமதாக வந்தால் பதறாமல் இருக்கிறீர்களா? உங்கள் வீட்டு ஆண்பிள்ளை சகவாசம் தவறிபோதைப் பொரு ளுக்கு ஆளாக மாட்டான் என்பதில் தெளிவாக இருக்கிறீர்களா? ஆழமாக யோசித்தால் மின் சாரம் இல்லாமல், காப்பெற் வீதி இல்லாமல் இருந்த காலத்திலும் எங்கள் தேசத்தில் எங்கள் பிள்ளைகள் சுதந்திரமாகக் காற்றை சுவாசித் துக் கொண்டிருந்தார்கள். அதில் அப்போது போதைவாசம் வீசுவதில்லை.

ஆனால் நாங்களும் எங்கள் வீட்டுச் சிறுவர் களைக் கவனித்துக்கொள்ளத்தான் வேண் டும். ஏதாவதொன்று நடந்த பின்னர் யாரையும் குற்றஞ்சாட்டுவதிலோ அல்லதுநியாயம் கேட்டு அழுதுகுழறிப் போராடுவதாலோ எதுவும் நடக்கப் போவதில்லை.

பெண்களுக்கோ சிறுமிகளுக்கோ பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் இடம்பெறும் சந்தர்ப் பங்களில் பெண்கள் அமைப்புக்கள்,சிறுவர் அமைப்புக்கள் என்பன தங்களால் இயன்ற வரை குற்றவாளியைக் கைதுசெய்து தண் டனை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாங்கள் தைரியசாலிகள். பாரதிகண்ட புது மைப் பெண்கள், யார் துணையும் தேவை யில்லை என்றெல்லாம் மார்தட்டிக்கொள்ள லாம். இருந்தாலும் அதீத தைரியம் கூட எமக்கு எதிரியாக மாறிவிடும். பெண்களின் பாதுகாப்பு பெண்களின் [illegible]ககளில்தான் உள்ளன. பெண் கள் எச்சரிக்கையாகவும், அவதானத்துடனும் நடந்து கொள்ளும் போது பாதிப்புக்களின் அள விலும் மாற்றங்கள் ஏற்படும்.

---

## வாசகர் நிருபம்

## பொறுப்பு இல்லாத நடத்துநர்

காலைவேளை என்றாலே அவசரம், பரபரப்பு ஆகிய வற்றுக்குக் குறைவிருக்காது. மாணவர்கள், அலுவலகங் கள், மருத்துவமனை, ஆலயங்கள் ஆகிய இடங்களுக்குச் செல்பவர்கள், வேறு தேவைகளுக்குச் செல்பவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பஸ்களில் பயணம் செய்கின்றமை வழமையான நிகழ்வாகும்.

இந்த நிலையில் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்ப் பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றில் அண்மையில் பிரயாணத்தை மேற்கொண்டி ருந்தேன். பஸ்ஸினுள் சனக்கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. இடைவழியில் பிரயாணிகள் சிலர் நிற்பதைக் கண்ட சாரதி பஸ்ஸை நிறுத்தினார். அப்போது மிதிபலகைக்கு அருகில் நின்ற இரண்டு இளைஞர்கள் கீழே இறங்கி பிரயாணிகள் உள்ளே செல்வதற்கு உதவினார்கள். சாரதி பஸ்ஸை திடீரென எடுத்ததால் கீழே இறங்கிய இளைஞர்களில் ஒருவரால் பஸ்ஸில் ஏற முடியவில்லை. ஆனால் பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அந்த இளைஞர் பஸ்ஸைத் தொடர்ந்து ஓடி வந்தும் பயன் கிடைக்கவில்லை. நடத்துநர் இதனைப் பொருட்படுத் தியதாகத் தெரியவில்லை. வேறொரு இடத்திலும் அந்த பஸ் பிரயாணிகளை ஏற்றியபோது பஸ்ஸின் வாசலில் நின்ற மற்ற இளைஞன் வழிவிடுவதற்காகக் கீழே இறங்கியபோது அவனால் மீண்டும் பஸ்ஸில் ஏறமுடியவில்லை. அவனும் இடைவழியில் அந்தரித்தநிலையில் விடப்பட்டான். பிரயாணிகளை ஏற்றுவதற்குப் பொறுப்பான நடத்துநரின் அசமந்தப் போக்கினால் அந்த இரண்டு இளைஞர்களும் இடைவழியில் காத்துநிற்க வேண்டிய அவலம் நேர்ந்தது.

*சுமித்திரா மருதனார்மடம்*

## கமராவை சற்றுப் பதித்துப் பிடியுங்கள்

நல்லூர் திருவிழாக் காலங்களில் சுவாமி புறப்பட்டு வெளிவீதி வரும் பொழுது அருகில் நின்று ஆளுக்கொரு கமராவை வைத்துக் கொண்டு உயர்த்திப் பிடித்து சுவாமியைத் தொடர்ந்து படம்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு வெளியில் வைத்துப் படம் பிடிப்பது தவறு என்று கூறவரவில்லை. ஆனால் இந்தச் செய்கை மூலம் நெருக்கமாக அருகில் நிற்பவர்கள் கூட சுவாமியை மட்டுமல்ல அந்தச் சமயம் ஏற்றப்படும் தீபத்தைக் கூட பார்த்துக் கும்பிடுவதற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது.

ஆகவே படம் பிடிப்பவர்கள் சற்றுப் பதித்து இன்றேல் தூரநின்று படம் பிடித்தல் வேண்டும். படத்தை எடுத்தவுடன் கமராவை எடுத்துவிட வேண்டும். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து நேரில் வருகை தரும் மக்கள் கடவுளுக்குப் பதி லாக கமராவைப் பார்த்து வணங்கும் அவல நிலை நீக்கப்படும்.

*சபா தியாகராஜா, ஆனைப்பந்தி*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எண்ணிய எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். மாணவர்கள் பெற்றோர்களுக்குப் பெருமை சேர்ப்பார்கள். தகுந்த வருமானம் வருவதால் மாதம் முழுவதும் பணப்புழக்கம் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்திகள் வந்துசேரும்.

**இடபம்**: தொழிலதிபர்கள் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பார்கள். அரசு ஊழியர்கள் நினைத்த இடத்துக்கு இடமாற்றம் பெறுவார்கள். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு [illegible] கூடும். பிரிந்துசென்ற நண்பர்கள் வந்து சேர்வார்கள்.

**மிதுனம்**: குடும்பச் சீர்திருத்தம் ஏற்படும். நீங்கள் எதிர்பாராத உறவினர்கள் வந்து போவார்கள். சில தம்பதியர் கருத்து வேற்றுமையால் பிரியக்கூடும். அரசியல்வாதிகள் நியாயத்துக்கு மட்டும் துணைபோவார்கள்.

**கடகம்**: அனைத்துச் செயல்களிலும் வெற்றியைக் காண்பீர்கள். பணவரவுக்குக் குறைவில்லை. பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். புதிய வீடுகட்ட போட்ட திட்டம் ஒருசிலருக்கு கைகூடும்.

**சிங்கம்**: பிள்ளைகளால் பெருமைகள் சேரும். தொழிலதிபர்கள் புதிய ஒப்பந்தங்கள் மூலம் நல்ல இலாபத்தைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு இதுவரை இருந்துவந்த மந்தநிலை மாறும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**கன்னி**: தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கும். ஒருசிலருக்கு இதுவரை விற்பனையாகாமல் இருந்துவந்த சொத்துக்கள் விற்பனையாகும். அரசியல்வாதிகள் புதிய நட்புகளால் உயர்வடைவார்கள்.

**துலாம்**: குடும்பத்தில் குழப்பம் விளைவித்த உறவுகள் விலகிச் செல்வார்கள். சதா சுற்றித்திரிந்த பிள்ளைகள் பெற்றோர் வழிகாட்டுதல்படி வேலைக்குச் செல்வார்கள். பிள்ளைகளால் இருந்துவந்த தொல்லைகள் நீங்கும்.

**விருச்சிகம்**: வியாபாரிகள் மறைமுக எதிர்ப்புகள் விலகி நல்ல லாபத்தைப் பெறுவார்கள். இதுவரை உங்களை வாட்டி வதைத்த பிணி, பீடைகள் விலகும். எதிரிகளும் நண்பர்களாக மாறி விடுவார்கள்.

**தனுசு**: எதிர்பார்த்தபடி மாறுதல் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகச் செல்லும். அரசியலில் உங்களுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் தலைமையால் மாற்றப்படுவார்கள். ஒரு சிலருக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும்.

**மகரம்**: எதிரிகள் விலகிச் செல்வார்கள். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களை விட்டு விலகிச் செல்லலாம். மனதில் நிலையான எண்ணம் இருக்காது. பணநெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்**: பிள்ளைகள் கல்வியில் அக்கறை காண்பிப்பீர்கள். நெருக்கடியான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும்.

**மீனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, வீண் அலைச்சல் குறையும். எதிர்பார்த்த அதிகாரம் அந்தஸ்துக் கிடைக்கும். சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும்.

## நாளை

**ஆவணி-08 ஞாயிற்றுக்கிழமை | 24.08.2014**

திதி: சதுர்த்தசி மா.06.17 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ.04.41 வரை
சுபநேரம்: 09.05-10.35 வரை
இராகுகாலம்: 04.35-06.05 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## உண்மை உனது உள்ளத்தில் எஞ்சி இருக்கும்

காரணம், காரியம் என்பவை மாயை. குழந்தைகள் ரசிக்கும் தேவதைக் கதைகள் நமக்குஎவ்வாறு தோன்றுகின்றனவோ, அவ்வாறே நாம் காண்பவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தமில்லா[illegible] என்னும் உண்மை நாம் வளர்ச்சி அடைந்த பின்னர் நமக்குத் தெரியும்; உண்மையில் காரண காரியம் என்பதெல்லாம் ஒன்றும் இல்லை என்பது நமக்குத் தெரிந்துவிடும். பின்னர் உனக்கு முடிந்தால் உனது அறிவைச் சிறிது தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவந்து "உவமைக் கதைகள் உனது மனத்தில் புக இடம்கொடு, ஆனால்அவற்றின் தொடர்பைப் பற்றி ஆராயாமல் விட்டுவிட்டு. பிறகு கற்பனைகளையும் அழகிய கவிதைகளையும் ரசிக்கும் இயல்பை வளர்த்துக்கொண்டு எல்லாப் புராணங்களிலும்கவிதை இன்பத்தை அனுபவித்து மகிழ். பகுத்தறிவு நோக்கோடும் சரித்திர நோக்கோடும் புராணங்களைப் படிக்காதே. அது ஒரு நீரோட்டம் போல உனது மனதில் ஓடிக்கொண்டு இருக்கட்டும், எரியும் மெழுகுவர்த்தியைப் போல் அது கழற்றப்படட்டும். அதைச் சுழற்றுபவர் யார் என்பதில் கருத்தைச் செலுத்த வேண்டாம், ஒளிவட்டம் உனக்குத் தென்படுவதே போதுமானது; உண்மை உனது உள்ளத்தில் எஞ்சி இருக்கும்.

தாங்கள் கண்டதையும் கேட்டதையும் உருவகப்படுத்தி, பௌராணிகர்கள் புராணங்களை எழுதி இருக்கிறார்கள்; ஓடும் படங்களாகத் தோன்றுமாறு சித்திரித்தார்கள். அவற்றுள் அடங்கியுள்ள பொருள்களைப் பிரித்தெடுக்க முயன்று அவற்றின் அழகைக் கெடுக்காதே. இருக்கிறபடி அவற்றை ஏற்றுக்கொள். அவை உனதுஉள்ளத்தில்உணர்வுகளை உண்டாக்கட்டும். அவற்றால் உண்டாகும் விளைவுகளை மட்டும் கவனி; நல்லதை மட்டும் எடுத்துக்கொள்.

# செவ்வாயில் உயிரினங்கள் வாழலாம்

## விஞ்ஞானிகள் புதிய ஆதாரம் வெளியிட்டனர்



செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்குரிய தகுதி இருப்பதைநிரூபிக்கும்மேலும் ஓர் ஆதாரத்தை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். செவ்வாய்க்கிரகத்தில் உள்ள தாது குறித்த ஆய்வில் இந்த முடிவு தெரிய வந்துள்ளது. இந்தத் தாது ஆராய்ச்சி மூலம் உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழல் அதிகமாகவே செவ்வாய்க் கிரகத்தில் இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள்.

செவ்வாய்க் கிரகத்திலிருந்து கிடைத்த விண்கல்லான நக்லா என்பதை ஆய்வுசெய்து பார்த்த போது அதில் இரும்புத் தாது அடங்கிய களிமண் இருப்பதையும், பல்வேறு தாதுப் பொருள்கள் இருப்பதற்கான அறிகுறிகளையும் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்வு செவ்வாய்க்கிரக தரைப் பரப்பில் அதிகளவிலான, உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற தாதுக்கள் இருக்கலாம் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளதாக வொஷிங்டனில் உள்ள 'பசிபிக் நார்த்வெஸ்ட்' தேசிய ஆய்வகத்தின் தலைமை விஞ்ஞானி ஷெர்ரி கேடி கூறியுள்ளார். இந்த ஆய்வின்போது எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்பி மற்றும்ஸ்பெக்ட்ரோஸ்கோப்பி ஆகிய முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர் ஆய்வுக் குழுவினர். மேலும் இந்த விண் கல் அமைப்பு எப்படி உருவானது என்பதையும் அனுமானமாகக் கூறியுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 9 | 4 | 6 | | | | 1 |
| | | 6 | 2 | | | 9 | 8 | |
| | | | 9 | | 5 | 6 | | 7 |
| 8 | | 2 | | | | | | 3 |
| | 1 | | | | | | 7 | |
| 9 | | | | | | 5 | | 2 |
| 4 | | 8 | 7 | | 2 | | | |
| | 2 | 7 | | | 3 | 1 | | |
| 1 | | | | 4 | 8 | 7 | 2 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 3 | 2 | 5 | 9 | 6 | 7 | 4 |
| 7 | 2 | 6 | 4 | 8 | 1 | 9 | 3 | 5 |
| 4 | 5 | 9 | 3 | 6 | 7 | 8 | 2 | 1 |
| 6 | 8 | 5 | 9 | 4 | 2 | 7 | 1 | 3 |
| 9 | 4 | 1 | 7 | 3 | 8 | 5 | 6 | 2 |
| 3 | 7 | 2 | 6 | 1 | 5 | 4 | 9 | 8 |
| 1 | 9 | 7 | 8 | 2 | 4 | 3 | 5 | 6 |
| 2 | 3 | 8 | 5 | 9 | 6 | 1 | 4 | 7 |
| 5 | 6 | 4 | 1 | 7 | 3 | 2 | 8 | 9 |

CMYK

## இரண்டாம் சுற்றுக்கு தகுதிபெற்றது விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம்



வலி. வடக்கு, ஓக.23

வட மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வட மாகாணத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்களின் விளையாட்டுத்துறைக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் என்பன இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்று சம நிலையில் இருந்த வேளையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் விக்கினேஸ்வரா விளையாட்டுக். கழகம் ஒரு கோலைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது. (ரி-86)

# வடமாகாண சம்பியனானது யாழ்ப்பாண மாவட்ட அணி



கரணவாய், ஓக.23

பலத்த போராட்டத்தின் மத்தியில் நடைபெற்ற கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியை வீழ்த்தி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது யாழ்.மாவட்ட ஆண்கள் அணி.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடமாகாண அணிகளுக்கிடையிலான கடற்கரை கரப்பந்தாட்டம் நேற்று வல்வெட்டித்துறை ரேவதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்ட அணிகள் மோதின.

அரையிறுதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி வவுனியா மாவட்ட அணியையும், மன்னார் மாவட்ட அணி கிளிநொச்சி மாவட்ட அணியையும் தோற்கடித்து இறுதியாட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதின.

யாழ்.மாவட்ட அணி சார்பாக சிவசொரூபன், நிதுசாந் ஆகியோரும், மன்னார் மாவட்ட அணி சார்பாக அனுபவ வீரர்களான ஜெயபாலன், ஜெபநேசன் ஆகியோரும் களமிறங்கினர்.

இதில் முதல் செற்றை மன்னார் மாவட்ட அணி பலத்த எதிர்ப்பின் மத்தியில் 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

இதனை அடுத்து தனது இரண்டாவது செற்றில் வீறு கொண்டு எழுந்த யாழ். மாவட்ட அணி வீரர்கள் அதிரடியாகவும் அதேநேரம் புத்திசாதுரியமாகவும் புள்ளிகளைச் சேகரித்தனர்.

அதற்கு ஈடுகொடுத்தால் போல் மன்னார் மாவட்ட அணியும் புள்ளிகளைக் குவித்தது. இரு அணியும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற ஆட்டம் பரபரப்பின் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இருந்தபோதும் யாழ்.மாவட்ட அணி ஆட்ட நுணுக்கங்களைக் கையாண்டு 21:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி ஈட்டி பதிலடி கொடுத்து ஆட்டத்தைச் சமப்படுத்தியது.

இதனையடுத்து வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதற்காக நடத்தப்பட்ட மூன்றாவது செற்றில் யாழ்.மாவட்ட அணி 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 2:1 என்ற செற்கணக்கில் வென்று வடமாகாண சம்பியனாகியது.

இந்த நிகழ்வில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க, பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.ஜெயசீலன் உட்படப் பலரும் வழங்கிக் கௌரவித்தனர். (ரி-108)

# நிபந்தனைகளுடன் தடைகள் நீக்கம்

வலி. வடக்கு, ஓக. 23

போட்டிகளின்போது ஏற்படுத்திய குழப்பங்களுக்காக வெவ்வேறு லீக்குகளினால் விதிக்கப்பட்ட இரு அணிகள் மீதான தடைகள் நிபந்தனைகளுடன் நீக்கப்பட்டுள்ளதாக அந்தந்த லீக் செயலாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் மீது விதிக்கப்பட்ட தடையானது அந்தக் கழகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க ஒழுக்காற்றுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு நீக்கப்பட்டுள்ளது.

குறித்த லீக்கினால் நடத்தப்பட்ட போட்டியொன்றில் குழப்பம் ஏற்படுத்தியமை தொடாபாக அந்த அணிக்கு ஆறு மாதகால தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந் நிலையில் தற்போது அவர்கள் இத்தகைய தவறுகளில் எதிர்காலத்தில் ஈடுபடமாட்டார்கள் என வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையில் தடை நீக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றால் தற்போது நீக்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்தையும் இணைத்து தண்டனை வழங்கப்படும் என்ற நிபந்தனை அடிப்படையில் தடை நீக்கப்பட்டுள்ளதாக செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட அராலி அண்ணா விளையாட்டுக் கழகத்தின் மீது விதிக்கப்பட்ட தடையானது அவர்களின் வேண்டுதலுக்கு இணங்க ஒழுக்காற்றுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு நீக்கப்பட்டுள்ளது.

குறித்த லீக்கினால் நடத்தப்பட்ட போட்டியொன்றில் குழப்பம் ஏற்படுத்தியமை மற்றும் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியமை போன்ற காரணங்களினால் பத்துமாத கால தடையும் குறிப்பிட்ட தொகைப் பணமும் அபராதமாக விதிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் தற்போது அவர்கள் எதிர் காலத்தில் இத்தகைய தவறுகளில் ஈடுபட மாட்டார்கள் என எழுத்து மூலம் வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையில் தடை நீக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றால் அதிகபட்ச தண்டனை விதிக்கப்படும் என்ற நிபந்தனை அடிப்படையில் தடை நீக்கப்பட்டுள்ளதாக செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-86)



*சோட்டோகான் கராத்தே அக்கடமி இன்ரர் நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிரதம பயிற்றுனரும், பரீட்சகருமான அன்ரோ டினேஸ் இனால் அண்மையில் நடத்தப்பட்ட கறுப்புப் பட்டி தேர்வில் சித்தியடைந்த யாழ். புங்குடுதீவு பயிற்சியக மாணவர்களான எம்.முரளி மற்றும் எம்.சுதன் ஆகியோருடன் அவர்களது பயிற்றுநர்களான சென்செய்.எம்.முருகானந்தனையும் படத்தில் காணலாம். எம்.முரளி, எம்.சுதன் ஆகியோர் கல்வி திணைக்களத்தின் 2014 வடமாகாண கராத்தே போட்டியில் பதக்கங்களை வென்று தேசிய போட்டிக்குத் தெரிவாகியுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி-23)*

## காலிறுதி ஆட்டம்

பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. (ரி)

## பெருவிளையாட்டு போட்டிகள்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளின் முதற்கட்டப் போட்டிகள் எதிர்வரும்செப்ரெம்பர் மாதம்5 ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை இடம் பெற்றவுள்ளது.

இவற்றில், நீச்சல் போட்டிகள் கொழும்பு சுகததாச நீச்சல் தடாகத்திலும், கபடிப் போட்டிகள் அம்பாறை .டி.எஸ்.சேனநாயக கல்லூரியிலும், உடற்பயிற்சி போட்டிகள் .வியங்கொடை சியான ஆசிரியர் பயிற்சி கல்லூரியிலும், யுடோ போட்டி கம்போல விக்கிரமபாகு வித்தியாலயத்திலும், கராத்தே போட்டிகள் கிரிப்பத்தகொடை விகாரமகாதேவி மகளிர் வித்தியாலயத்திலும், சதுரங்கப்போட்டிகள் கண்டியிலும், எல்லேப் போட்டிகள் அநுராதபுரம் சேமே விளையாட்டுக்கழக மைதானத்திலும், பளுதூக்கல் போட்டிகள் டிப்பற்றிய ராஜகிரிய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை- எதிர்வரும் 7 ஆம் திகதி சைக்கிள் ஓட்டப் போட்டி அநுராதபுரத்தில் இடம் பெறவுள்ளது. (ரி-23)

# யாழ்.மாவட்டத் தாச்சிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 18 ஆவது தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தைகடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரின் காலிறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு: -

உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணிக்கும் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணி 9:7 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**தாவடி காளியாம்பாள் விளையாட்டுக்கழக அணி 10:5 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது**

வள்ளுவர் விளையாட்டுக் கழக அணிக்கும் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வள்ளுவர் விளையாட்டுக் கழக அணி 9:5 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணிக்கும் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 10:3 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தாவடி காளியாம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாவடிகாளியாம்பாள் விளையாட்டுக்கழக அணி 10:5 என்ற பழங்... வித்தியாசத்தில்வெற்றிபெ... து. (ரி-23)

# அங்கு வாங்கியதை இங்கு கொடுப்போம் ஆஸ்திரேலிய வீரர் ரியான் ஹரிஸ்



இந்திய மண்ணில் வைத்து அவர்களிடம் வாங்கியதை. ஆஸ்திரேலிய மண்ணில் வைத்து திருப்பிக் கொடுப்போம் என்று ஆஸ்திரேலிய வீரர் ரியான் ஹேரிஸ் கூறியுள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அங்கு பங்கேற்றிருந்த டெஸ்ட் தொடரை மோசமாக இழந்திருந்தது. இந்த நிலையில் எதிர்வரும் டிசம்பர்-ஜனவரியில் ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இறுதியாக இந்தியாவிற்கு ஆஸ்திரேலிய அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது இந்திய அணியிடம் தோற்றிருந்தது. இந்நிலையில் ரியான் ஹரிஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில். இந்திய வீரர்களை நிலைகுலையைச் செய்யும் வசைமொழி நிச்சயம் உண்டு. ஆனால் அவர்களும் திருப்பிக் கொடுப்பவர்கள் தான். இந்திய அணியும் அதற்குச் சளைத்தது அல்ல. ஜடேஜா சண்டை செய்வார். அதே போல் விராட் கோக்லியும் ஓரிரு வார்த்தைகளை எதிர்த்துக் கூறுவது வழக்கம். நான் ஏதாவது தவறாகப் பேசி அதனால் தண்டனை கிடைக்கும் என்றால் அது சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் தண்டனையாகவே இருக்க வேண்டும். இந்திய கிரிக்கெட் வாரியத்தின் செயலாக அது இருக்கக் கூடாது. நாங்கள் எங்கள் அணித்தலைவர். பயிற்சியாளர். கிரிக்கெட் ஆஸ்திரேலியா மற்றும் சர்வதேச கிரிக்கெட் வாரியம் என்ன கூறுகிறதோ அதன் படியே செய்வோம். இந்திய வீரர்கள் இந்தியாவுக்கு வெளியே அவ்வளவு நன்றாக விளையாடுவதில்லை. அவர்கள் சொந்த நாட்டில் எங்களுக்கு நிறைய கொடுக்கின்றனர். ஆகவே இங்கு அவர்களுக்கு நாங்களும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதுவும் மிட்செல் ஜோன்சன் சிறப்பாக பந்து வீசிவரும் நிலையில். இந்தியா என்ன செய்யப் போகிறது என்று பார்ப்போம் என்று கூறியுள்ளார். (ரி)

# ப்ரோட்டுக்கு செப்டம்பரில் சத்திரசிகிச்சை



இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளரான ஸ்டுவர்ட் ப்ரோட்டுக்கு முழங்கால் பகுதியில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது.

நீண்ட நாட்களாக வலது முழங்கால் தசையில் ஏற்படும் வலியால் அவதிப்பட்டு வந்த ப்ரோட்டுக்கு இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் போது வலி அதிகமானது. வலியைப் பொருட்படுத்தாமல் நான்காவது டெஸ்டிலும் பங்கேற்றார். அப்போட்டியில் இந்திய அணி வருண் ஆரோன் வீசிய வேகப்பந்து. ப்ரோட்டின் மூக்கில் பலமாக தாக்கியது. இதற்கு சிகிச்சை எடுத்துக் கொண்டு. ஐந்தாவது டெஸ்டிலும் அவர் விளையாடினார். இந்நிலையில் இந்திய அணிக்கெதிரான ஒருநாள் தொடருக்கான அணியில் ப்ரோட் இடம் பெறவில்லை. இவர் ஒருநாள் அணியில் இடம்பெறாமை குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஸ்டுவர்ட் ப்ரோட்டுக்கு எதிர்வரும் 4ஆம் திகதி சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது. இதற்குப் பின் மறுவாழ்வு மற்றும் மீண்டு வருவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. (ரி)

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியாளர்கள் தெரிவு

US OPEN 2014

ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி நியூயோர்க் நகரில் ஆரம்பமாகிறது. இதற்கான போட்டித் தரநிலையில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் முதலிடத்தையும். சுவிட்சர் லாந்தின் ரோஜர் பெடரர் இரண்டாவது இடத்தையும். பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் முதலிடத்தையும். ருமேனியாவின் சிமோனா ஹலேப் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர். இந்த நிலையில் போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் நேற்று முன்தினம் முடிவு செய்யப்பட்டனர்.

இதன்படி பெண்கள் ஒற்றையர் முதலாவது சுற்றில் முன்னிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ். சக நாட்டவரான தரவரிசை யில் 103ஆவது இடம் வகிக்கும் டெய்லர் டவுன் சென்டை எதிர்கொள்கிறார். முன்னாள் சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா. சக நாட்டவரான் மரியா கிரிலென்கோவுடன் பலப்பரீட்சை நடத்துகிறார். ருமேனியாவின் சிமோனா ஹலேப். அமெரிக்காவின் டேனியலி காலின்சுடன் சவாலை ஆரம்பிக்கிறார்.

ஆண்கள் பிரிவில் முதல்நிலை வீரர் செர்பியாவின் ஜோகோவிச். அர்ஜென்டினாவின் டியாகோ செபாஸ்டியனுடன் முதல் சுற்றில் மோதுகிறார். இவர் காலிறுதியில் ஒலிம்பிக் சாம்பியன் இங்கிலாந்தின் ஆன்டி முரேவை சந்திக்க நேரிடலாம். முரே முதல் சுற்றில் நெதர்லாந்தின் ராபின் ஹாசுடன் மோதுகிறார். 5 முறை சாம்பியனான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர். தனது தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் மரின்கோ மாடோசெவிச்சை சந்திக்கிறார். (ரி)

# சம்பியன் லீக் தொடரிலிருந்து சகீர்கான் விலகல்



ஏழாவது ஐ.பி.எல். தொடரில் விளையாடும் போது. கைத்தசை நார்களில் ஏற்பட்ட காயத்திலிருந்து முழுமையாக குணமடையாத நிலையில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள சம்பியன் லீக் இருபதக்கு இருபது தொடரிலிருந்து விலகியுள்ளார் வேகப்பந்து வீச்சாளரான சகீர்கான்.

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடும் சகீர்கான் கடந்த ஏப்ரலில் நடந்த ஏழாவது தொடரில் விளையாடும் போது கைகளின் தசை நார்களில் ஏற்படிருந்த காயம் காரணமாக அவதிப்பட்டு வந்துள்ளார். இந்நிலையில் காயத்திலிருந்து முழுமையாக குணமடையாத காரணத்தால் அவர் சம்பியன் லீக் தொடரில் விளையாட மாட்டார் எனத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக சகீர்கான் தெரிவிக்கையில். நான் எனது உடல் நிலை பற்றிக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. நான் மீண்டும் விளையாடுவதற்கு எனது உடலின் [illegible] மிக அவசியமானது. எந்து உடல் நிலை பற்றி எனக்கு முழுமையான திருப்தி ஏற்படும் [illegible] தே என்னால் சிறப்பாக பந்து வீச முடியும். என்னால் மன அழுத்தம். சர்வதேச [illegible] உள்ள அழுத்தங்களில் இருந்து விடுபட முடியும். அப்போது மீண்டும் பந்து [illegible] ாகச் செயற்படுவேன் என்று கூறியுள்ளார். (ரி)

# சோப்ராவை வாங்கிய சச்சின்

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடரில் சச்சினின் கேரளா கால்பந்து அணி சார்பில் இங்கிலாந்தின் மைக்கேல் சோப்ரா 35 இலட்சத்துக்கு ஒப்பந்தம் ஆகியுள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட்டின் வரவின் பின் பூப்பந்து, கொக்கி மற்றும் கபடி போட்டிகளும் இம்முறையில் நடக்கின்றன. இந்த வரிசையில் தற்போது புதிதாக இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடர் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இத் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 12ஆம் திகதி முதல் டிசம்பர் 20ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. இந்தத் தொடருக்கு இந்திய கால்பந்து கூட்டமைப்பும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் ஜாம்பவானான சச்சினின் கேரளா, முன்னாள் அணித்தலைவர் கங்குலியின் கொல்கத்தா மற்றும் மும்பை, டெல்லி, சென்னை உட்பட மொத்தம் 8 அணிகள் இதில் பங்கேற்கின்றன. பெங்களூர் அணி கடைசி நேரத்தில் விலகியதால், சென்னை அணி சேர்க்கப்பட்டது. இந்த அணிகளில் 84 இந்திய வீரர்கள் ஏற்கனவே இடம் பெற்றுள்ளனர். அவர்களை விட ஒவ்வொரு அணிகளும் 7 வெளிநாட்டு வீரர்களை சேர்த்துக் கொள்ளலாம். இதற்கான 56 வீரர்களில் 7 பேர் ஏற்கனவே பல்வேறு அணிகளில் இடம் பெற்றனர். மீதமுள்ள 49 பேரைத் தெரிவு செய்ய நேற்றுமுன் தினம் மும்பையில் கூட்டம் நடந்தது.

இதில் இந்திய இங்கிலாந்து வம்சாவளியைச் சேர்ந்த முன்கள வீரர் மைக்கேல் சோப்ராவை 35 இலட்சத்துக்கு சச்சினின் கேரளா அணி வாங்கியுள்ளது. நியூகேசில், சந்தர்லாண்டு, கார்டிப் போன்ற அணிகளுக்காக விளையாடிய அனுபவம் இவருக்கு உள்ளது. (ரி)



# ஐ.பி.எல். அணிகளுக்கு முக்கியத்துவம்

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இருபதுக்கு இருபது சம்பியன் லீக் தொடரில் எட்டு வீரர்கள் தங்களது சொந்த நாட்டு அணியை புறக்கணித்து விட்டு இந்தியாவின் ஐ.பி.எல். அணிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

இருபதுக்கு இருபது சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் ஆட்டம் அடுத்த மாதம் 17ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள ராய்ப்பூர். மொகாலி. ஐதராபாத் மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களில் நடைபெற இருக்கிறது. இதற்கு முன்னதாக செப்டம்பர் 13ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை தகுதிச் சுற்று நடைபெறவுள்ளது.

இந்த போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ். கொல்கத்தா நைட்ரைடர்ஸ். கிங்ஸ் லெவன் பஞ்சாப். நோர்தன் நைட்ஸ். பெர்த் ஸ்கார்ட்செர்ஸ். மும்பை இந்தியன்ஸ். சதர்ன் எக்ஸ்பிரஸ். கேப் கோப்ராஸ். லாகூர் லயன்ஸ். ஹோபார்ட் ஹரிகேன்ஸ். டால்பின். பார்படோஸ் டிரைடன்ட்ஸ் ஆகிய அணிகள் பங்கு பெறுகின்றன.

இந்நிலையில் குறிப்பிட்ட அணிகளில் இடம்பெறும் வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டியில் பங்குபெறும் வெளிநாட்டு வீரர்கள். அவர்களின் சொந்த நாட்டு அணியிலும் இடம் பெற்றிருந்தனர். எந்த அணியை தெரிவு செய்வது என்ற பொறுப்பை வீரர்களிடமே விட்டுவிட்டனர். இதில் 8 வீரர்கள் தங்களது சொந்த நாட்டு அணியை புறக்கணித்து விட்டு இந்தியாவின் ஐ.பி.எல். அணியை தெரிவு செய்துள்ளனர்.

நார்தன் நைட்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள கோரி அன்டர்சன். பார்படோஸ் டிரைடன்ட்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள பொலார்ட். சதர்ன் எக்ஸ்பிரஸ் அணியில் இடம்பெற்றுள்ள மலிங்க ஆகிய 3 பேரும் மும்பை இந்தியன்ஸ் அணியைத் தெரிவு செய்துள்ளனர். அதேபோல் ஜோர்ஜ் பெய்லி, டேவிட் மில்லர் ஆகியோர் முறையே ஹோபார்ட் ஹரிகேன்ஸ், டால்பின்ஸ் அணியைத் தவிர்த்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியைத் தெரிவு செய்துள்ளனர். பேட் கம்மின்ஸ், கலிஸ். டிவைன் ஸ்மித் ஆகியோரும் ஐ.பி.எல். அணியையே தெரிவு செய்துள்ளனர்.

சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது ஆட்டத்தில் ஒரு வீரர் தனது சொந்த அணியை விட்டு வெளிநாட்டு அணியில் விளையாடும்போது. சொந்த அணிக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் வரை வெளிநாட்டு அணி செலுத்த வேண்டும் என்று விதிமுறை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலக்சுமி இராசலிங்கம்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 84, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. மகாலக்சுமி இராசலிங்கம் நேற்று (22.08.2014) வெள்ளிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாதவூர்-அன்னம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அருணகிரி (முன்னாள் வர்த்தகர் Aruna Beadi Co. வரக்காப்பொல), செல்வநாயகம் (முன்னாள் வர்த்தகர் அருணா பீடி வரக்காபொல) மற்றும் வரலக்சுமி (கனடா), காலஞ் சென்ற திருச்செல்வம் (முன்னாள் வர்த்தகர் யுனிக் குரோசரிஸ், காலி), காலஞ்சென்ற தவச்செல்வம் (சாய்ராம் கன்ராக் டர்ஸ்), அருட்செல்வம் (NSPS கொழும்பு), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராஜா (முன்னாள் வர்த் தகர் T.T ஸ்ரோர்ஸ், காலி), திலகவதி (கனடா), பாலாம்பிகை (கனடா), காலஞ் சென்ற இராஜதுரை (முன்னாள் வர்த்தகர், L.P.T கொழும்பு), தவமணி (கனடா), புஸ்பகாந்தி (இலங்கை), புவனேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரஞ்சிதமலர் (நெதர்லாந்து), மனோகரலிங்கம் (லண்டன்), மகேந்திரலிங்கம் (கனடா), சற்குணலிங்கம் (கனடா), ரதிமலர் (ஜேர்மனி), காந்தமலர் (லண்டன்), காலஞ்சென்ற லிங்கேஸ்வரி, சிதம்பரலிங்கம் (லண்டன்), விக்னேஸ்வரலிங்கம் (கண்ணன்-யாழ்ப்பாணம்), சண்முகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், பாசுப்பிரமணியம் (நெதர்லாந்து), செல்வராணி (லண்டன்), சொர்ணமலர் (கனடா), சாந்தினி (கனடா), அருணகிரிநாதன் (ஜேர்மனி), சுதாகரன் (லண்டன்), வாசுகி (லண்டன்), விஜயதட்சனி (யாழ்ப்பாணம்) நவஜீவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், மேகலா, காண்டீபன், திருமகள்-கோபிநாத்-பாணுமதி (நெதர்லாந்து), அபிலாஷ்-அபிலன் (லண்டன்), நிலேஜன்-மிதுசா (கனடா), அபிராம்-அனிதா (ஜேர்மனி), நிகிலேஷ்-சஞ்சிதா (லண்டன்), துளசிகா-கானகன் (லண்டன்), அபூர்வா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காசியினியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிறவுன் வீதி, நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

(51175)(10)

தகவல்:
**கண்ணன் (மகன்)**

# வரலாற்று வெற்றியைப் பெற்றது கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி

கரணவாய்.ஓக.23

பலமான வவுனியா மாவட்ட அணியைத் தோற்கடித்து கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் வரலாற்றுப் பதிவை மேற் கொண்டுள்ளது கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி.



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண அணிகளுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி வல்வெட்டித்துறை ரேவதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று இடம் பெற்றது.

மாவட்ட இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின. இதில் 2:0 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தது கிளிநொச்சி மாவட்ட அணி.

கடந்த பல வருடங்களுக்குப் பின் வடமாகாணச் சம்பியனான கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் அணி, அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

இவ்விறுதிப் போட்டியில் கிளிநொச்சி அணி சார்பாக சுகிர்தா, வானுஜா ஜோடியும், வவுனியா மாவட்ட அணி சார்பாக எம்.ஆர். விஜயசிங்க, எவ்.எம்.ஜெயவர்த்தன ஆகியோரும் களமிறங்கினர். மூன்று செற்களைக் கொண்ட இவ்விறுதி ஆட்டத்தில் முதலாவது செற்றில் இரு அணியினரும் புள்ளிகளை மாறி மாறிப் பெற்றுக் கொண்டன. ஒரு கட்டத்தில் வவுனியா மாவட்ட அணியின் கையே மேலோங்கி இருந்த போதிலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட அணி பலத்த போராட்டத்தின் மத்தியில் 22:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலாவது செற்றை வெற்றி கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற் ஆட்டமும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போதும் வவுனியா மாவட்ட வீராங்கனைகளின் பலவீனத்தைப் புரிந்து கொண்ட கிளிநொச்சி அணி மிக அற்புதமாக விளையாடி இரண்டாவது செற்றையும் 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று 2:0 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்றனர். இதன் மூலம் கடற்கரை கரப்பந்தாட்டத்தில் முதன் முதலாக சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது கிளிநொச்சி மாவட்ட அணி.

வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் ரணசிங்காவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களையும் வெற்றிக் கிண்ணங்களையும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.ஜெயசீலன், வல்வெட்டித்துறை நகர சபை உபதலைவர் எஸ்.சதீஸ் மற்றும் நகர சபைச் செயலாளர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ரி-108)

# மரண அறிவித்தல்



## செல்லையா மகேஸ்வரன்

(உரிமையாளர் JAFFNA ELECTRICALS, Mahesh & Sons, Mahanathy Tex)

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரன் நேற்று (22.08.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-சாந்தநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் சுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோரின் சகோதரரும், மதீசன் (Kenya), மதீதரன் (Mahesh & Sons), யசோதினி (US), சாமினி (UK), முகுந்தன் (Jaffna Electricals) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமுதினி (Kenya), சிவதாரணி, வேதகி, வித்தியசங்கர் (US), நிசாந்தன் (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபூர்வன், ஆதித்யா, அபிநயன், ஆதவி, சௌமியா, துளசிந்தன், அட்சயன், அஸ்வித்தா அபிராம், ஆதன்யா, அய்றா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் இன்று (23.08.2014) சனிக்கிழமைகாலை 9 மணிமுதல் 1 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் அவரது வாசஸ்தலமான யாழ்ப்பாணத்தில் (127/6, Temple Road) அஞ்லிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 25.08.2014 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைகள் சரசாலை வடக்கு கொம்பிகுள மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**
**077 773 8715, 021 221 9522, 0112 367 607**

(C/16150)(10)

## பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நாளை (24.08.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் எமது சங்கப் பணிமனையில் பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றோம். (சி/16144) (7.6.3)

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

# சீனாவுக்கு காணியை குத்தகைக்கு வழங்கவில்லை

## கிழக்கு முதலமைச்சர் கூறுகிறார்.

மூதூர், ஓக.23

திருகோணமலை துறைமுகத்தில் சீன நாட்டுக்கு காணி குத்தகைக்கு இதுவரை வழங்கப்படவில்லை. அது பற்றி நாம் ஆராயவும் இல்லை என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜித் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தவிசாளர் ஆரியவதி கலப்பதி தலைமையில் சபை கூடிய போது மாகாண சபை உறுப்பினர் கி.துரைராஜசிங்கத்தின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இதன்போது சீன நாட்டுக்கு பாதுகாப்புக் காரணங்களுக்காக 1,200 ஏக்கர் காணி குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது அல்லது வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி தாங்கள் அறிவீர்களா? அல்லது தங்களின் அமைச்சர் வாரியம் தான் அறியுமா? மாகாண காணி அமைச்சர், காணி ஆணையாளர், மாவட்ட காணி பயன்பாட்டுக் குழுவில் இந்த விடயம் ஆராயப்பட்டதா? போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன.

இவற்றுக்கு முதலமைச்சர் பதிலளிக்கையில்:

இவ்வாறானதொரு விடயம் ஆராயப்படவில்லை. காணி வழங்கப்படவும் இல்லை. எமது அமைச்சு மட்டத்திலோ, மாகாண காணி ஆணையாளர் மட்டத்திலுமோ இது குறித்து ஆலோசிக்கப்படவுமில்லை. மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக எந்தவித முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் இது பற்றி ஆராய வேண்டிய தேவையில்லை.



ஊடகங்களில் வரும் ஊகங்களை வைத்துக் கொண்டு அவை குறித்து ஆராய முடியாது எனத் தெரிவித்தார். (ஓ-10-40)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



### அமரர் வேலுப்பிள்ளை கனகக்கோன்

கடந்த 03.08.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் துயரச்செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசியூடாகவும் இரங்கற்செய்தி தெரிவித்தவர்களுக்கும் அன்னாரது இறதிக்கிரியைகளின் போதும் இறுதியாத்திரையின் போதும் நேரடியாகக் கலந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (23.08.2014) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் நாளை (24.08.2014) முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

'வேலகம்' தேத்தாவடி,
இடைக்காடு, அச்சுவேலி. (51162) (4.3.6)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார் கடந்த (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் சிவசுப்பிரமணியம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், தபேந்திரன்- இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சாமினியின் அன்புக்கணவரும், யோகநாதன் (லண்டன்), விஜயகுமார்(சந்திரன்), காலஞ்சென்ற இராசகுமார்(கிளி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சதீஸ்சன்(கனடா), தர்சன், பிரியகாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலையரசியின் (தர்சினி-கனடா) மாமனும் லக்ஷயா (கனடா), சௌமியா(கனடா) ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2014) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்திரன் கடையடி,
உரும்பிராய் வடக்கு,
கற்பகவிநாயகர் வீதி. (51149)(6.4.3)

தகவல்:
சி.சந்திரன் (தம்பி)
077 353 8626

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 600/=, இருவர் 1500/=
நால்வர் 2500/=
(Attached Bathroom)
Hotal Villa City
422, Galle Road, Wellawatte
T.P 072 255 2222 (f/15793) (4.6.3)

## சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சை-2014

பரீட்சை வினாத்தாள் தொடர்பான -
சிறப்பு வழிகாட்டல்
(பொது அறிவு மற்றும் நுண்ணறிவு) (51145) (4.6.3)
26.08.2014 9.AM
நியூ பிறைற் கல்வி நிலையம்
95, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் புனர்பூசம் 4ஆம் பாதம் 37 வயதுடைய 5' உயரம் கொண்ட லண்டன் பிரஜாவுரிமை உடைய மணமகனுக்கு அழகிய படித்த பண்புள்ள மணமகள் தேவை. (51150) (7.6.3)

தொடர்பு : 075 807 1014

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm



Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் சி.விஜயகுமார் அவர்களது சகோதரரான

### சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார்

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/16102) (7.6.3)

ஆலய பரிபாலன சபையினர்
உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்

## நெஞ்சகலா நினைவுகள் நித்தியத்துக்கும்



### பத்திநாதர் ஜெரால்ட் ஜொஸ்லி பயஸ்

(இந்திரன்)

மண்ணில் 13.08.1963 — விண்ணில் 24.07.2014

கண்மூடித்திறப்பதற்குள் காலமானீர்
கலங்குகின்றோம்
விண்ணேறிச் சென்றீர் எமக்காய் மன்றாடும்.

தாய், சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

இவரது நித்திய வாழ்வுக்கான வேண்டுதல் திருப்பலி 23.08.2014 மு.ப. 11.00 மணிக்கு பண்டத்தரிப்பு தூய அந்தோனியார் ஆலயத்திலும் பின்னர் இல்லத்தில் நடைபெறும் மதியவிருந்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (51146) (7.6.3)

கீரிமலை றோட், பண்டத்தரிப்பு.

## விசேட விலைக் கழிவு

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் கிளையில் மட்டும் மலிவு விலையில் அண்ணா உற்பத்திப் பொருள்கள் (நூடில்ஸ் பைக்கற், மல்லிக் கோப்பி பெட்டி, ஜீவாகாரம், டிப்பிடிப்பி பைக்கற், சாம்பிராணிப் பெட்டி) 5 பொருள்கள் அடங்கிய பொதி. ஒன்று 250/= விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா கோப்பி காட்சியறை**

பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(நல்லூர் சிவன் கோயில் பின்புறம்) (சி/16102) (7.6.3)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கதிரவேலு சுந்தரமூர்த்தி



ஆண்டுகள் பத்து
கடந்தாலும்
ஆறிடுமோ எம் இதயம்
அன்பும் பாசமும் காட்டி
அரவணைத்துக் கல்வி ஊட்டி
ஏற்றமுடன் வாழவைத்த
எம் அன்புத் தந்தையே!
ஏற்றித் தொழுகின்றோம்
நின் பாதக் கமலங்களை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அளவாவோடை,
சூராவத்தை, சுன்னாகம்.

தோற்றம் 30.08.1926 — மறைவு 11.09.2004
திதி : திரயோதசி
23.08.2014
(51120) (7.6.3)

## Raveens English Medium Classes Karaveddy

மேற்படி நிறுவனத்திற்குரிய Grade 11 மாணவர்கள் பங்குபெறும்

**IMPROMPTU ORATORY (ENGLISH)**
**and**
**PRIZE GIVING DAY**

**முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்) பரிசளிப்பு விழாவும்**

குறிப்பு : சபையோர் ஆங்கிலத்தில் வழங்கும் விடயத் தலைப்புக்களுக்கே மாணவர்கள் பேசுவார்கள்.
இடம் : நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் கல்யாண மண்டபம்
காலம் : நாளை (24.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30
தலைவர் : ப.ஈஸ்வரநாதன்
நிர்வாகி - ரவீன்ஸ் EMC கரவெட்டி.

Chief Guest
**Mr.S.Sivasri**
(D.S, Karaveddy)

Distribution of Prizes
**Mrs.Tarmila Sivasri**
(Teacher, Vadamarachy Central Ladies College
Vathiry, Karaveddy)

*ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

ரவீன்ஸ் கல்விச் சமூகம் (51161) (7.6.3)

2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள்
திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

**தேவை**

யாழ். ஸ்ரான்லி வீதி, அதனை அண்டிய பகுதியில் செரமிக் காட்சியறைக்கு கடை வாடகைக்குத் தேவை. (C/16149) (10.6)
தொடர்பு: 077 362 9518

மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய
**பயிற்சி நெறி**
**HND in PHARMACY**
வயதெல்லை கிடையாது.
பகுதிநேரமாகப் படிக்கலாம்.
வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு.
LAVA HOSPITALS (48916) (7.6.3)
120, Temple Road, Jaffna.
(Tel : 077 316 4617/021 222 4333)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி, தாவடியில்
1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொ.பே: 077 255 0807 (51154) (4.6.3)

**Suzuki Astar Car**

Auto, JVC Setup with Bluetooth & iphone support, Alloy Wheel, Leather Seat, Day Light LED, ABS, Power Shutters, Door Visors, Revers Camera, Centre Viewing Mirror TV, Wind Screen Speed Projector. Mint Condition.
Contact : 077 326 3964 (C/16148) (10.6)

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச திணைக்களங்களில் கடமை யாற்றும் குடும்பத்துக்கு நல்லூர், யா/இந்து மகளிர் கல்லூரியை அண்மித்த சூழலில் அமைந்த வீடு வாடகைக்குத் தேவை.
T.P:075 210 2485 (C/16149) (10.6)

## 25ஆம் ஆண்டு நினைவூட்டல்

திருமதி
### சூரியமலர் (மலர்) இரத்தினசிங்கம்



உதயம் 25.07.1959
அஸ்தமனம் 29.08.1989

திதி : திரயோதசி

என் தாயே!
விண்ணிடைப் புகுந்த விலை மதிப்பற்ற முத்தே...
நின் பயணம் முடிந்து.. கால் நூற்றாண்டுகள் கரைந்து போனதுவே...
கரைந்த நாள்களில்... என் வாழ்க்கையும் பொழுதுகளும்...
களவாடிப் போனதே... இறுதியில்
என்குடும்ப வாழ்வும் குலைந்து போனதே...
என்றாலும் உன் நினைவுகளை எப்படி நான் இழப்பேன்?
என் வாழ்க்கைப் பயணத்தில் மறையாத கல்வெட்டு 'நீ'
அந்தக் 'கல்வெட்டு' என்மனத்தைவிட்டு எப்படிக் கரைந்துபோகும்?
தாயன்பைத்தேடி ஓர் 'அன்பை' நாடினேன்...
அது 'பேயன்பாய்' மாறும் எனக் கனவிலும் எண்ணவில்லை...
இருளும் ஒளியும் சேர்ந்தது தான் வாழ்க்கை.
இதை உணராதவர் மனிதர் இல்லை... புனிதரும் இல்லை...
இன்று என் வாழ்வில் இருள் வீசலாம்...
ஆனால் ஒருநாள் ஒளிவீசும்... எந்த 'நெருப்பாற்றையும்'
நான் நீந்திக் கடப்பேன்... உன் உயிர் பிரியும் வரை உன்னை எட்டியும் பாராத
உந்தன் உறவுகளும்... இரத்தங்களும்...
எந்தன் வாழ்வில் உரிமை பாராட்ட எப்படி உரிமை எடுத்தார்?
எனக்குப் புரியவில்லை... நெருப்பாற்றுக்குள்
என்னைத் தள்ளி விட்டு - அதனுள்
'வெந்து போவேன்' என்று வேடிக்கை பார்க்கிறார்கள்...
உன் அன்பு உள்ளவரை... உன் பார்வை உள்ளவரை...
எந்தப் 'போலிகளும் என்னை ஒன்றும் செய்யாது...
இதை உரத்துக் கூறிடு உன் 'சொந்தங்களுக்கு'!

*என்றும் நினைவுகளுடன்*
மகன் : இர.விஜய்
மருமகள் : நிஷாந்தி
பேரன் : ஜதுமிகன்
முகவரி : சந்தை வீதி K.K.S
த.முகவரி : கோப்பாய் மத்தி, கோப்பாய்.
(51166)(7.6.3)

## மரண அறிவித்தல்

### அருளானந்தம் சிவநாதன்

(ஆராய்ச்சி உத்தியோகத்தர், இலங்கை கரும்பு ஆராய்ச்சிக் கூட்டுத்தாபனம் நடுத்தெரு, காரைநகர்)



காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்த அருளானந்தம் சிவநாதன் 21.08.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் சீவரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான N.K.P விஜயசிங்கம்-தவமணிதேவி தம்பதியரின் மருமகனும், விஜயசவுந்தராணியின் அன்புக் கணவரும், சிவலதா, சசிதரன் (ஆஸ்திரேலியா), சிவரஞ்சனி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திருமதி நா.புஸ்பராணியின் (கிளி) சகோதரரும் T.நாகரத்தினம், V.விஜேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடுத்தெரு காரைநகரிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு, காரைநகர். (51172)(10)
தகவல் :
சிவநாதன் சசிதரன் (மகன்).

## மின்னல் தாக்கி இருவர் காயம்

தென்மராட்சி,ஒக.23
மின்னல் தாக்கியதில் இருவர் கடுமையான எரிகாயங்களுக்கு உள்ளாகினர். இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:- பூநகரி நாகபடுவான் பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று இரவு 8 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது சங்குப்பிட்டி பாலத்துக்கு அண்மையில் மின்னலால் தாக்கப்பட்டனர். உடல் முழுவதும் கடுமையான எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ரி-9)

## நிர்வாகசபை தெரிவுக் கூட்டம்

கிளிநொச்சி, ஒக.23
கிளிநொச்சி இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தின் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய அமைப்புக்களை உருவாக்குவதற்கான நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
சிறுவர் நல்லொழுக்க வட்டம், கலைச்சுடர் விளையாட்டுக்கழகம், கால்நடை வளர்ப்போர் மற்றும் வீட்டுத்தோட்ட செய்கையாளர் சங்கம் ஆகியவற்றுக்கே நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளது. (ஒ)

## பரிசளிப்பு விழா

நெல்லியடி,ஒக.23
கரவெட்டி ரவீன்ஸ் ஆங்கில மொழி வகுப்புக்கள் நிறுவனத்தின் தரம் இரண்டு மாணவர்கள் பங்குபற்றும் முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்), பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.
ப.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறீ முதன்மை விருந்தினராகக்கலந்து கொள்வார். திருமதி தர்மிலா சிவசிறீ பரிசில்களை வழங்குவார். (க)

## நாட்டுப்படகு மீனவர்களும் இனி கைது செய்யப்படுவர்

கொழும்பு.ஒகஸ்ட்.23
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நாட்டுப் படகுகளில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களையும் கைது செய்யுமாறு இலங்கைக் கடற்படையினருக்கு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.
மன்னார் மாவட்டத்தில் தலை மன்னார் கடற்பரப்பில் இந்திய நாட்டுப் படகுகளின் அத்துமீறல் அதிகரித்துள்ளமை தொடர்பில் கடற்றொழில் அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதை அடுத்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி எல்லை தாண்டி மீன்பிடித்தலில் ஈடுபடும் போது கடந்த காலங்களில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது நாட்டுப் படகுகளைப் பயன்படுத்துவோரும் கைது செய்யப்படவுள்ளனர். (ற-14)

## துப்பாக்கி வெடித்து சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம். ஒக. 23
பளையிலுள்ள இராணுவ முகாமில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தவறுதலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில இராணுவச் சிப்பாய் ஒருவர் காலில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பலாலி வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார். டி.சமன்திலக (வயது 31) என்ற இராணுவ சிப்பாயே அவ்வாறு படுகாயமடைந்தவராவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

**பணி நிலை வேண்டுகை**

*எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*



கணினி பக்க வடிவமைப்பாளர்
(Tamil, English Typing, Corel Draw, Page Maker, Photo Shop)

அச்சு இயந்திர உதவியாளர்

இத்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி :27.08.2014

**ஸ்ரீ மாருதி பிறிண்டேஸ்** 555 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (கைலாச பிள்ளையார் கோவில் அருகில்) 021-4545044, 0752040061

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 28.06.1954



மறைவு 06.09.2010


அமரர்
### நடராஜா கனகலிங்கம்
(மர அரிவு காலை, மரக்காலை உரிமையாளர்)
23.08.2014

எம்மைவிட்டு நீங்கி
நீண்டது நான்காண்டுகள்...
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ்நாள் வரை.

*அராலி வீதி,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.*
குடும்பத்தினர்.
(51164)(7.6.3)

## மரண அறிவித்தல்

### வில்லியம் லோறன்ஸ் (அழகக்கோன்)
மிருசுவில்



யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து வில்லியம் லோறன்ஸ் அவர்கள் 18.08.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இன்னாசிமுத்து- அக்னெஸ் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளப்பு-எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிமாக் கிறேட்டின்(பூரணம்) அன்புக் கணவரும், எமில் (கனடா), ரஞ்சித் (கொழும்பு), ஜெஸ்லி(கனடா), றவி (கனடா), றுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர் களான இராசக்கோன், இராசமலர் மற்றும் வேந்தக்கோன், இராசமணி, வீரக்கோன், விஜயக்கோன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் பொன்னுத்துரை (றெஜிஸ்ரார்), ஜெயசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஐடா, தயாளினி, ஜெயந்தி, அனுஷியா, சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், டேமன், மிஷெல், செஷாணி, ஸ்டெபி, ஷெக்கினா, அரோன், ஜெரோன், ஆஷ்லி,டிவோன் ஆகியோ ரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home, 8911, Woodbine Avenue,Markham,ONL3R 5G1, Canada வில் பார்வைக்காக வைக்கப்பட்டு, Christ the King Cemetery, 7770 Steeles E.Markham ON L6B 1A8 Canada வில் இன்று (23.08.2014) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்-ரஞ்சித் (கொழும்பு)
077 789 1781
(சி/15827) (5.6)

## தொடர்ச்சிகள்

### இனிமேலும்

கையில்,

**அரசியல் தீர்வு**

13 ஆவது அரசியல் திருத்தம் என்பது தமிழ் மக்களின் அரசியல் தீர்வாகக் கொள்ள முடியாது. ஆனால் அதன் உள்ளடக்கத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்களைக் கூட இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசை, இந்திய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும். அதனூடான அதிகாரப் பரவலாக்கத்துக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை அரசு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை புறக்கணித்துச் செயற்பட்டு வருகின்றது. வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டது. தற்போது அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபை நிர்வாகத்துக்குச் சமாந்தரமான நிர்வாகத்தை இலங்கை அரசு முன்னெடுத்து வருகின்றது.

**இராணுவப் பிரசன்னமும் கேள்விக்குறியாகும் பெண்கள் பாதுகாப்பும்**

வடக்கில் 10 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். ஆனால் ஒன்றரை லட்சம் இராணுவத்தினர் வடக்கில் மாத்திரம் நிலை கொண்டுள்ளனர். இதனால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. ஆயுதப் படைகளால் போரின் போதும், அதன் பின்னரும் தமிழ்ப் பெண்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். 89 ஆயிரம் விதவைகள் இத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே வடக்கில் வசித்து வருகின்றனர்.

**மீள்குடியேற்றம்**

வடக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதில் வசித்த தமிழ் மக்கள் அகதிகளாகியுள்ளனர். தமிழ்நாட்டில் மாத்திரம் ஒன்றரை லட்சம் அகதிகள் இருக்கின்றனர். அதற்கு மேலாக யாழ்ப்பாணத்திலும், சம்பூரிலும் இடம்பெயர்ந்த மக்கள் உள்ளனர். இவர்களை மீள்குடியமர்த்துவதற்கு இதுவரையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை.

**ஏமாற்றும் இலங்கை அரசு**

இலங்கை அரசு, போர் முடிவுக்கு வந்தவுடன் இந்திய அரசுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அதனை நிறைவேற்ற எள்ளளவும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. அதே போன்று சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக எம்முடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளையும் இலங்கை அரசு குழப்பியடித்தது. அத்துடன் இதுவரையில் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களுக்கு எந்தப் பதிலையும் இலங்கை வழங்கவில்லை.

இதற்கு மேலாக தற்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வருமாறு இலங்கை அரசு அழுத்தம் கொடுத்து வருகின்றது. இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் ஏமாற்று வேலையே. இதனூடாகவும் இந்த அரசு தீர்வை வழங்காது.

**5 வருடங்களில் தமிழினம் அழியும்**

இலங்கை அரசு தனது நிகழ்ச்சி நிரலை கனகச்சிதமாக முன்னெடுத்து வருகின்றது. தமிழர் தாயக பூர்வீக நிலங்களில் சிங்கள - இராணுவ குடியேற்றங்களை நிறுவி வருகின்றது. இதனூடாக வடக்கு - கிழக்கில் இனப்பரம்பலை மாற்றியமைக்க முயல்கின்றது. இவ்வாறு இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழினத்தையே அழிக்க முயல்கின்றது.

இலங்கை அரசு மேற்கொண்டுள்ள தற்போதைய நிகழ்ச்சி நிரல் தொடருமாயின், இன்னும் 5 தொடக்கம் 10 வருடங்களில் இனப்பிரச்சினை என்ற ஒன்றே இலங்கையில் இருக்காது. தமிழினம் முற்றாக அழிக்கப்பட்டு விடும். அதனை நோக்காக கொண்டு இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றது.

**காணா மற்போனவர்கள் கண்டுகொள்ளப்படவில்லை**

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் காணாமற் போனவர்கள் விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் என்பது மிக முக்கியமாக இருக்கின்றது. இதனைத் தீர்த்து வைப்பதற்கு இலங்கை அரசு முழுமையான எந்தவொரு நடைமுறையையும் இது வரை மேற்கொள்ளவில்லை. போர் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்தும் இலங்கை அரசு இந்த விடயங்களைக் கண்டுகொள்வதில்லை.

**இனியும் தாமதிக்க முடியாது**

இலங்கை தமிழர்களின் இனப் பிரச்சினைத் தீர்வு என்பது இந்தியாவின் பாதுகாப்புடனும் சம்பந்தப்பட்ட ஒன்று. இந்தியாவைத் தவிர்த்து இலங்கைத் தமிழர்களுக்கான தீர்வு என்பது கிடையாது. இந்தியா இதனை உணர்ந்து, இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்கு காலம் தாழ்த்தாது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்று கோரிக்கை விடுக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

(ற-5)

### இலங்கையை

றேன். அத்துடன் 13 ஆவது திருத்தத்தின் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் இலங்கை அரசு எடுத்து வரும் நிலைப்பாடுகளையும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். இராணுவப் பிரசன்னம் மற்றும் வடக்கு மாகாண சபையை இயங்க விடாமல் முன்னெடுக்கப்படும் முட்டுக்கட்டைகளையும் நாம் அறிந்துள்ளோம். இது தொடர்பில் பிரதமருடன் பேசி முடிவு எடுக்கப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### மோடியை

சுஜாதா சிங்கையும், மு.ப. 10.30 மணிக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். அதன் பின்னர் பி.ப. 3.30 மணியளவில் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலையும், 5.30 மணியளவில் இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இன்றைய தினம் புதிய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

(ற-5)

### உள்ளக

என்று தெரிவித்தன.

ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு மூன்று சர்வதேச நிபுணர்கள் முதல் நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கு மேலாக ஜப்பானைச் சேர்ந்த ஒருவரை ஆறாவதாக இணைப்பது தொடர்பில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5)

### மின்சாரம்

அ.கஜிநாத் என்பவரே உயிரிழந்துள்ளார். விஜயகுமார், அருள்லோகன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் மூவரும் மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவர்களாவர். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் குறித்த மூவரும் உயரழுத்த மின்மார்க்கத்தில் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அந்தச் சமயம் மின் கம்பிகளில் திடீரெனப் பாய்ந்த மின்சாரம் தாக்கியதை அடுத்து அவர்கள் தூக்கி வீசப்பட்டுள்ளனர். கஜிநாத் பாதுகாப்புப் பட்டியுடன் மின்கம்பத்தில் தொங்கியவாறு காணப்பட்டார் என்றும், குறித்த மின்கம்பம் சரிக்கப்பட்டு அவரது உடல் மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தூக்கி வீசப்பட்ட ஏனைய இருவரும் தெல்லிப்பழை மருத்துமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

திருத்த வேலைகள் நடைபெற்ற மின்மார்க்கங்களில் எவ்வாறு மின்சாரம் பாய்ந்தது என்பது குறித்து அறிய முற்பட்டபோதும், அதுகுறித்த தகவல்களைப் பெறமுடியவில்லை.

அதேவேளை, நேற்றைய தினம் பெய்த மழையால் மின்னல் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டது என்றும், அதன் காரணமாகவும் சில சந்தர்ப்பங்களில் மின்சாரம் பாய்திருக்கக் கூடும் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி.36.106)

### வடக்கின்

ருந்தது. குறித்த நூறு மில்லியனில் வடக்கின் 43 வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 28 மில்லியன் ரூபா செலவிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 16 மில்லியன் ரூபா செலவிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 மில்லியன் ரூபா செலவிலும், வவுனியா மாவட்டத்தில் 20 மில்லியன் ரூபா செலவிலும், மன்னாரில் 16 மில்லியன் ரூபா செலவிலும் வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக 900 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் உடனடியாகப் புனரமைப்புச் செய்ய வேண்டியுள்ளன. இவை பஸ் போக்குவரத்துப் பாதைகளாக உள்ளன. இந்த அதி முக்கியமான வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 6 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வீதிகளை புனரமைப்புச் செய்வதற்கு எந்தவொரு நிதி ஒதுக்கீடும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### வடக்கில்

பாதிக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கனமழை பொழிந்து வீதிகளில் வெள்ள நீர் ஓடியது. தொடர்ந்தும் மழை பொழிவதற்கான சூழ்நிலை காணப்படுகின்றது. அதனால் மக்கள் மகிழ்வடைந்துள்ளனர். (ற)

### அரசுடைய

னால் தற்போதுள்ள பிரச்சினைகள் பலகாலம் தொடரவுள்ளன - என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பேராசிரியர் (மருத்துவர்) தயா சோமசுந்தரம்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"வடக்கில் தற்போதுள்ள உளசமூகப் பிரச்சினைகள் தீர்க்கப்படாது தொடரும் நிலையே காணப்படுகின்றது. அதனைத் தடுப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனாலேயே இந்த சமூகப் பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

தற்கொலை, பாலியல் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறை, பொருளாதார நெருக்கடி காரணமாக மனப்பாதிப்புகள் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. அவற்றில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை மீட்கவும், ஏனையோர் பாதிக்கப்படாதிருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்தப் பொறுப்பு அரசுக்குண்டு. ஆனாலும் அரசு இது தொடர்பில் கவனம் எடுக்கவில்லை. முன்வைக்கப்பட்ட திட்டங்களையும் அரசு நடைமுறைப்படுத்தவில்லை. அதனாலேயே தற்போது உளசமூகப் பிரச்சினைகள் பூதாகரமாகியுள்ளன. இது மிக மோசமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இதன் தாக்கம் பயங்கரமானதாகும். உளசமூகப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க, அவர்களுக்குத் தாங்கும் தன்மையான மனநிலையை உருவாக்க வேண்டும். அதனை எழுத்தாளர்கள், கலைஞர்கள் மேற்கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-4)

### சமுர்த்தி

அதிபர் சுந்தரம் அருமை நாயகம் ஊடாக அழைப்பு விடுத்திருந்தார். அதன்படி நேற்றுக் காலை 9 மணிக்கு ஒரு கலந்துரையாடலும், பிற்பகல் 2 மணிக்கு மற்றுமொரு கலந்துரையாடலும் நடத்தப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "வாழ்வின் எழுச்சித் திட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வழங்க வேண்டும். அரசின் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் என்பது அரசியல் கலந்த நியமனம். எனவே அரசுக்கு விசுவாசமாகச் செயற்பட வேண்டும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வருகை தரவுள்ளார். அவரது நிகழ்வில் சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்க வேண்டும். ஊவா மாகாணத்தில் கிராம மட்ட அமைப்புக்களை வலுப்படுத்தும் செயற்பாட்டுக்கு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இங்கிருந்து நூறு சமுர்த்தி உத்தியோகத்தர்களை எதிர்பார்க்கின்றார்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் என்று அழைத்து, தமது கட்சியின் தேர்தல் பரப்புரைப்புரை குறித்துப் பேசப்பட்டமை தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய கலந்துரையாடலில் செய்தி சேகரிக்க யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் சென்ற போதும், அவர்களை அனுமதிக்கவில்லை. (ற-5)

### பொது வேட்பாளரை

இதற்கான நிபந்தனைகள் குறித்தும் சிந்திக்கவில்லை. எனினும், இந்த அரசால் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் நாங்கள் சில முக்கிய விடயங்களைக் கருத்திலெடுக்க வேண்டியிருக்கும். போருக்குப் பின்னர் நாங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். எமது முன்னுரிமைக்குரிய விடயங்களுக்கு அவர்கள் தீர்வுகாணவில்லை. குறிப்பிட்ட வேட்பாளர் யாராக இருந்தாலும் அவருடன் இந்த விடயங்கள் குறித்து ஆராயப்படும்.

ஆரம்பகாலத்திலிருந்தே நாங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை எதிர்த்து வருகிறோம். இது நாட்டுக்கு பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்ததும் இதுவே. அரசு 18 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தது. ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை தடவையும் போட்டியிடலாம். இது சர்வாதிகாரத்துக்கே வழிவகுக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இதனை அனுமதிக்க முடியாது.

தனித்தனியாகப் போட்டியிடுவது சிறந்த தந்திரோபாயமாக இருக்க முடியாது என்பதை எதிர்க்கட்சிகள் உணரவேண்டும். ஜனாதிபதியைத் தோற்கடிக்க விரும்பினால் அவர்கள் ஒன்றுபடவேண்டும். இதன் காரணமாகவே வலுவான பொதுவேட்பாளரால் மாற்றத்தை ஏற்படுத்த முயலும் நான் கருதுகிறேன். எனினும் துரதிர்ஷ்டவசமாக எதிர்க்கட்சிகள் அதற்கு முழுமையாகத் தயாராகவில்லை. முக்கிய எதிர்க்கட்சிகள் எவையும் இது குறித்து தங்களது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவில்லை.

நாங்கள் மஹிந்த ராஜபக்ஷ அரசைத் தோற்கடிக்க விரும்புகிறோம். ஜனாதிபதியும் அரசும் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நாட்டை ஆளத்தவறிவிட்டனர். வடக்கு, கிழக்கு மக்களின் துயரங்களை ஒரு பக்கம் வைத்து விட்டு நாட்டின் ஏனைய பகுதிகளை பாருங்கள், எங்கும் சர்வாதிகாரமும், குடும்ப ஆட்சியும் தலைவிரித்தாடுகின்றன. யாரும் இந்த நாட்டில் வாழ விரும்ப வில்லை. இராணுவமே இந்த நாட்டை ஆளுகின்றது. நாங்கள் இவற்றை தோற்கடிக்கக் கூடிய உறுதியான வேட்பாளரை விரும்புகின்றோம்

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது குறித்து என்னால் கூற முடியாது. ஆனால் நாங்கள் நிறைவேற்று அதிகார முறையை எதிர்க்கின்றோம். அதனை ஒழிப்பதற்கு யார் முன்வந்தாலும் அதனை வரவேற்போம். எனினும், யார் போட்டியிட முன்வந்தாலும் அவர் தேர்தலில் வெல்லகூடியவராக இருக்கவேண்டும். மக்களின் வாக்குகளை அவரால் பெறமுடிய வேண்டும். நாங்கள் தேர்தலில் வெல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### 14 வயது

சம்பத் என்னும் இராணுவச் சிப்பாயே இதற்குக் காரணம் எனத் தெரிவித்ததோடு, அவர் சிறுமியுடன் தொலைபேசியில் உரையாடுவதாகவும் கூறித் தொலைபேசி இலக்கத்தையும் பொலிஸாரிடம் வழங்கியுள்ளார்.

மன்னார் பொலிஸார் சௌத்பார் இராணுவ முகாமுக்கு விசாரணைக்காகச் சென்ற போது குறித்த பெயருடைய இராணுவச் சிப்பாய் தமது முகாமில் இல்லை எனக் கூறி விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த தொலைபேசி இலக்கத்தின் விவரத்தைப் பெற்றுக்கொண்ட போது அது ஒரு பெண்ணுடையது எனவும், அவரது கணவர் சௌத்பார் இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் எனவும் தெரிய வந்தது.

குறித்த சிப்பாயைக் கைது செய்த மன்னார் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணத்திடம் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான், குறித்த சிப்பாயை எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டதோடு எதிர்வரும் 5 ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறும், குறித்த சிறுமியை அன்னை இல்லத்தில் ஒப்படைக்குமாறும் பணித்தார்.

குறித்த சிறுமி சார்பாக சட்டத்தரணிகளான பிரிமூஸ் சிராய் உவா, ரி.வினோதன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-56)

### பாம்பன் பால

வித்து விட்டு அவர்களின் 64 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

இந்நிலையில் படகுகளை விடுவிக்க வலியுறுத்தி இன்று பாம்பன் பஸ் பாலத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவது என கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு நடைபெற்ற மீனவர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் போராட்டம் இன்று நடைபெற இருந்த நிலையில் நேற்று மாலை இராமேஸ்வரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் வட்டாச்சியர் ஜீவரேகா, மீன்வளத்துறை உதவி இயக்குனர் கோபிநாத், காவல் துணைக் கண்காணிப்பாளர் விஜயகுமார் முன்னிலையில் மீனவ சங்கத் தலைவர்கள் கலந்து கொண்ட அவரசக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கையில் இருக்கும் படகுகளை மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருவதால் இன்று நடத்த விருந்த போராட்டத்தை இடை நிறுத்தவேண்டும் என அரசு அதிகாரிகள் கேட்டுக் கொண்டதை அடுத்து பாம்பன் பாலம் முற்றுகைப் போராட்டத்தை இராமேஸ்வரம் மீனவர்கள் சங்கத்தினர் கைவிட்டுள்ளனர். (த-14)

### வழக்காளியும்

கொண்டிருந்த வேளையில் நீதிவான் முன்னிலையில் இரு பகுதியினரும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த நால்வரையும் எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(த-9)

## திருமலையில் சுழல்காற்று; வீடுகள், கடைகள் சேதம்



திருகோணமலை, ஓக.23
திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் வீசிய சுழல் காற்றால் வீடுகள், கடைகள் சேதமடைந்துள்ளன.
குறிப்பாக கோவிலடி குஞ்சப்பன்திடல் மற்றும் நாயன்மார்திடல் பகுதிகளிலேயே சுழல் காற்று வீசியுள்ளது.
அன்றையதினம் மாலை 3.15 மணியளவில் வீசிய சுழல் காற்று சுமார் 15 நிமிடங்கள் வரை நீடித்துள்ளது.
இதில் 08 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 15 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.
அத்துடன் 6 கடைகளும் கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களும் சேதமடைந்துள்ளன. எனினும் இந்த இடரால் எவ்வித உயிர்ச் சேதமோ எவருக்கும் காயங்களோ ஏற்படவில்லை. திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் மாவட்டத் தலைவருமான க.துரைரெட்ணசிங்கம் இடரின் பின்னர் குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். (வ-10)

## அம்பாறை முஸ்லிம் பிரமுகர்களுடன் சவூதி அரேபிய முக்கியஸ்தர்கள் சந்திப்பு

அம்பாறை, ஓக. 23
இலங்கைக்கு வருகை தந்துள்ள சவூதி அரேபியாவைச் சேர்ந்த அதிமுக்கிய பிரமுகர்கள் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்து முஸ்லிம்கள் எதிர்நோக்கி வருகின்ற சமகால பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.
அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமாவின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் மாலை சாய்ந்த மருது ஜும்மாப் பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.
இலங்கையில் பல்வேறு மட்டங்களிலும் சமூக சேவை வேலைத் திட்டங்களுக்கு பங்களிப்பு செய்து வருகின்ற சவூதி அரேபிய அல்-கஷீம் பல்கலைக் கழக பேராசிரியர் சாலிஹ் ஹத் லூல் மற்றும் சவூதி அரேபிய மனித வள அபிவிருத்தித் தாபனத்தின் கிழக்காசியாவுக்கான பிரதி நிதி ஷேக் ஹாலித் ஹைரூத் ஆகியோரே இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.



அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா தலைவரும் இலங்கை வக்பு சபை உறுப்பினருமான அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கி வருகின்ற சமகால பிரச்சினைகள் குறித்தும் அவர்களது தேவைகள் குறித்தும் கருத்து பரிமாறல்கள் இடம்பெற்றன.
இதில் அம்பாறை மாவட்ட சர்வ சமய சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் ஏ.எல். எம்.ஜெமீல், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் டாக்டர் ஏ.எஸ். எம்.அஸீஸ், சட்டத்தரணி அன்ஸார் மௌலானா, சட்டத்தரணி எம்.சி. ஆதம்பாவா, டாக்டர் அல்- அமீன் றிசாத், மௌலவி நாஸிர் கனி உட்பட பலரும் கருத்துக்களை முன்வைத்தனர்.
இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த் பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், உலமாக்கள், கல்விமான்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (வ-10)

## ஆலயக் கதவு தீக்கிரை

[illegible]கானை, ஓக.23
வட்டுக்கிழக்கு, சித்தன் கேணியில் அமைந்துள்ள துறட்டிப்பனை முத்துமாரியம்மன் ஆலயத்தின் தெற்குப்புற நுழைவாயில் கதவு விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வேளை இடம்பெற்றுள்ளது.
பெறுமதியான பொருள்கள் களவு போகாத நிலையில் எண்ணெய் நிரம்பிய நிலையில் பிளாஸ்ரிக் கான் ஒன்று மட்டும் கதவருகே காணப் பட்டது.
வட்டுக்கோட்டை பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணையை மேற் கொண்டதோடு, மோப்ப நாய் கொண்டு வரப்பட்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். (வ-29)

## கைபேசியில் ஆபாசம்; ஆசிரியர் நீதிமன்றில்

### அரச நிதிக்கு ரூ.1 லட்சம் கட்டினார்

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்களை வைத்திருந்த வலி.கிழக்குப் பிரதேச ஆசிரியரொருவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் அரச உத்தியோகத்தர் என்ற காரணத்தினால் ஒரு லட்சம் ரூபா அரச நிதியாகச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.
கொடிகாமம் பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட அந்த ஆசிரியர் நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மாணவர்களின் கற்பித்தல் செயற்பாட்டுக்கு பயன்படுத்த ஆபாசப் படங்களை தொலைபேசியில் வைத்திருந்ததாக அவர் கூறியதையடுத்து ஒரு லட்சம் ரூபா அரச நிதியாகச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (ஓ-9)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.23
நேசன் பொப்புலர் ரவல்ஸ் மற் றும் ரூர்ஸ் ஸ்தாபனத்தாரின் சுற்றுலாவழிகாட்டி என்னும் ஐந்து மொழிகளிலான (தமிழ், சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு, டொச்) நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை நல்லை திருஞானசம் பந்தர் மண்டபத்தில் மாலை 7.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.
சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லைஆதீனமுதல் வர்சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார். வாழ்நாள் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை நூலை அறிமுகம் செய்து வைப்பார். (க)

## பஜனை நிகழ்வு

நல்லூர் துர்க்கா மணிமண் டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 5 மணி வரை வட பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத்தி னரின் பஜனை நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ஓ)

## குடிதண்ணீர் இல்லை; குளித்து கும்மாளம் போடும் ராணுவம்

சுன்னாகம் கிணறுகளில் வாளியில் அள்ள அள்ள ஒயில் வருகின்றது. அது முஸ்லிம் நாடுகளில் வருவதைப் போல அல்ல ஒயிலாக இருந்திருந்தால் எங்கள் தேசமும் பணக்கார தேசமாகியிருக்கும் என்று மக்களின் குடிதண்ணீர் அவலத்தை சபையில் எடுத்துரைத்தார், ஆளுங் கட்சி உறுப்பினர் கஜதீபன்.
சபையின் அமர்வில் சூடான விவாதங்கள் இடம்பெற்றாலும், ஒவ்வொரு விவாதத்தின் போது சிரிப்பூட்டும் விடயங்களும் அரங்கேறியமையால் உச்சக்கட்ட கருத்து மோதல் எதுவும் இடம்பெறவில்லை.
வடக்கு மாகாணசபையின் 14 ஆவது அமர்வு, கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9.35 மணிக்கு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது.

**வெளிநாட்டுப் பயணத்துக்கு கட்டுப்பாடு**

மாகாணசபை உறுப்பினர்கள், மாகாணசபை நிதியத்திலிருந்து நிதி பெற்று வெளிநாடுகளுக்குச் செல்வதானாலும், கல்வி நடவடிக்கைகளுக்குச் செல்வதானாலும் வடக்கு ஆளுநரின் அனுமதியின்றி செல்ல முடியாது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்திருப்பதாக அவைத் தலைவர் ஆரம்பத்திலேயே குண்டைத் தூக்கிப் போட்டிருந்தார். மாகாணசபை நிதியில் செல்வதற்கு மாத்திரமே அந்த நடைமுறை பொருந்தும் என்பதால் எந்தவொரு உறுப்பினரும் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

**வாகனங்கள் வந்து சேரவில்லை**

இதன் பின்னர் உறுப்பினர்கள் வாய்மொழி மூல வினா எழுப்பப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா, முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட வாகனம் தொடர்பில் கேள்வி எழுப்பினார். இதற்கு முதலமைச்சர், வாகனங்கள் இன்னமும் முழுமையாக வந்து சேரவில்லை. வந்து சேர்ந்ததும் தெரிவிக்கப்படும் என்றார். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் சயந்தன் எழுந்தார்.
முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்குரிய வாகனம் உத்தியோகபூர்வ வாகனமா அல்லது அவர்களுக்குரிய தனிப்பட்ட வாகனமா என்ற கேள்வியை எழுப்பியதும், எதிர்க்கட்சித் தலைவர் வழமை போன்று ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார். கேள்வியைக் கேட்ட நான் மாத்திரமே அதில் தெளிவுக்கு அல்லது உப கேள்வி கேட்க முடியும் என்று காட்டமாகச் சொல்ல அவைத் தலைவர் சிரித்துக் கொண்டு அவர் தெளிவுக்கு கேட்கிறார் போல என்று குறிப்பிட்டார்.
இந்தச் சர்ச்சைகளுக்கு நடுவில் முதலமைச்சர் அவை உத்தியோகபூர்வ வாகனம். நான் போனதன் பின்னர் இனிவரும் முதலமைச்சர் அதனைப் பயன்படுத்துவார் என்று குறிப்பிட்டார்.
வழங்கிய பதிலுக்கு நானே மீளவும் கேள்வி தொடுப்பேன் இரண்டாவது வாய்மொழி மூல வினாவை எதிர்க்கட்சித் தலைவர் தொடுத்தார். முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் கட்டடங்களுக்குரிய வாடகைக் கொடுப்பனவு மற்றும் திணைக்களங்களுக்குரிய வாடகைக் கொடுப்பனவு தொடர்பாகவும், உரிய நடைமுறைகள் பின்பற்றப் படுகின்றனவா என்று கேள்வியெழுப்பினார்.
இதற்கு புன்முறுவலுடன் பதிலளிக்கத் தொடங்கிய முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் இதை ஏன் கேட்கிறார் என்று தெரியேல்ல. பிரதம செயலாளர் தந்ததைச் சொல்கின்றேன். நான் வழங்குகின்ற பதிலில் நானே மீளவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கேள்வி எழுப்புவேன் என்று குறிப்பிட்டு விட்டு பதிலளித்தார்.
இதன் போது அவைத் தலைவர் இனி இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்ப முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பூட்டு போட்டுக் கொண்டு பிரேரணைக்குள் நகர்ந்தார்.
அவைத் தலைவரினால், 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கும் அதன் பின்னர் ஓய்வூதியம் பெற்றவர்களும் இடையிலான சம்பள முரண்பாடு தொடர்பில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அது எந்தவித விவாதமும் இன்றி ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**தொடங்கியது சர்ச்சை**

இதன் பின்னர் தற்போது வடக்கை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கம் வறட்சி தொடர்பிலான பிரேரணையும் அவைத் தலைவரினால் முன்வைக்கப் பட்டது. இதன் போதே சூடான விவாதங்கள் கிளம்பின.
இதன் போது விவசாய அமைச்சரே முதலில் கருத்துரைத்தார். இந்தப் பருவமழை பொய்ப்பு என்பது வழமைக்கு மாறானது. இது இந்த வருடமோ அல்லது அடுத்த வருடத்திலோ தீர்க்கக் கூடிய அல்ல.
இந்த ஆண்டு யாழில் வறட்சி வாட்டி வதைக்க முக்கிய காரணம், குளங்களிலிருந்து ஆயிரக் கணக்கான பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் வீதி அபிவிருத்தி வேலைக்காக எடுக்கப்பட்டதுதான். அதற்கு பிரதேச சபைகளிடமிருந்தும் அனுமதி பெறப்படவில்லை. மேலும் குடாநாட்டின் மக்கள் தொகைக்கு மேலாக இருக்கின்ற இராணுவத்தினர் அதிகளவான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனாலேயே வழமைக்கு மாறான வறட்சி குடாநாட்டை ஆட்கொண்டுள்ளது என்று தெரிவித்தார்.

**இராணுவத்தை போட்டுத் தாக்கிய விந்தன்**

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர் விந்தன், வறட்சி மீள் கட்டுமான நிதி வடக்கின் மூன்று மாவட்டங்களுக்குப் பகிரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் வழங்கப்படவில்லை. இது மத்திய அரசின் பாரபட்சத்தை எடுத்துக் காட்டுகின்றது. வடக்கில் பிரித்தாளும் தந்திரத்தை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள்.
தீவகத்தில் மக்கள் குடிதண்ணீருக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் குடிக்க தண்ணீர் இன்றி அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இராணுவத்தின் குடிக்கின்ற தண்ணீரை எடுத்து குளித்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர் என்று கடுமையாகச் சாடினார்.
இதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் எழுந்தார். பிரேரணையை வரவேற்ற அவர், இது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டு அமைச்சரவைப் பத்திரம் தயாரித்துள்ளதாகத் தெரிவித்தார். அண்மையில் யாழ்.மாவட்டச் செயலகத்திலும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலாளர்கள், சபைச் செயலாளர்களை அழைத்து அவர்களிடத்திலிருந்து நீண்டகால மற்றும் குறுகிய கால தீர்வுத் திட்டம் பெறப்பட்டே அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப் பட்டதாகக் குறிப்பிட்டார்.
இதன் பேுாது ஆளுங்கட்சி உறுப்பினர் விந்தன், நீங்கள் சனம் எல்லாம் செத்ததுக்குப் பின்னரே இவற்றை நடைமுறைப்படுத்தப் போகின்றீர்கள் என்று ஆவேசமாகக் கேட்டார். இதன் பின்னர் சிவாஜிலிங்கமும் எழுந்து பேசினார்.
அப்போது அவைத் தலைவர், நீங்கள் பத்திரிகைகளில் செய்தி வரவேண்டும் என்பதற்காக குறுக்காகப் பேசுகின்றீர்கள் என்று சத்தம் போட பதிலுக்கு சிவாஜிலிங்கமும், நீங்கள் அவ்வாறு சொல்ல முடியாது. அதனை வாபஸ் பெற வேண்டும் என்று விடாப்பிடியாக நிற்க, அவைத் தலைவரோ அதனை வாபஸ் பெற மாட்டேன் என்று உறுதியாகத் தெரிவிக்க, இந்தச் சண்டைகளின் நடுவே அமைச்சர் குருகுலராஜா எழுந்தார்.
அவர் எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து, நீங்கள் கொஞ்சம் அடக்கிப் பேசுங்கள் என்று காட்டமாகவே சொல்ல, சூடாகிப் போன எதிர்க்கட்சித் தலைவர், இந்தப் பிரதேசத்தில் என்ன நடக்கிறதென்றதே தெரியாமல் இருக்கிறீயள் என்று சொல்லி ஆளுங்கட்சியினரை வம்புக் கிழுத்தார். வீறு கொண்டெழுந்த ஆளும்கட்சியினர் வாய்த் தர்க்கம் நடத்திய போதும், சிறிது நேரத்திலேயே அவை வழமைக் குத் திரும்பியது. *(தொடரும்)*

## காணி விற்பனைக்கு

838, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் கோயில் வீதி சந்தியில் சஞ்சுவான் கோயிலுக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை. (51125) (7.6.3)

தொடர்பு : 077 660 0425, 071 617 9881

## வீடு விற்பனைக்குண்டு

தாவடி தெற்கு, கொக்குவிலில் (தாவடிப் பிள்ளையார் கோயில் அருகில்) 5 அறைகள் 2 இணைந்த குளியலறைகள், சமையலறை, உள்ளே 2 பெரிய ஹோலும், வெளியே 2 பெரிய ஹோலும் மற்றும் கிணறு, பாத்ரூமும் மற்றும் வீடு முழுவதும் ரைல்ஸ் பதித்த புதிதாகக் கட்டிய 2¾ பரப்புக்குள் அடங்கிய சுற்றிவர மதில் கட்டப்பட்ட வீடு விற்பனைக் குண்டு. மேல் மாடி பூர்த்தியாகாமல் உள்ளது.

தொடர்பு : (51147)(7.6.3)

077 958 3944 (சிவா), 077 722 2137 (மனைவி)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வலி.வடக்குத் தவிசாளர் சுகிர்தன் உதவி



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் தாதியர் பிரிவுக்கு வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளரும் தெல்லிப்பழைஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் உறுப்பினருமாகிய சோ.சுகிர்தன் புடைவைகள் சலவை செய்யும் இயந்திரம் ஒன்றைத் தனது சொந்த நிதியிலிருந்து அன்பளிப்புச் செய்துள்ளார்.

பிற மாவட்டங்களில் இருந்து வந்து எமது பிரதேசத்துக்குச் சேவையாற்றுகின்ற தாதியர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தினரிடம், தமது விடுதிக்கு உடுபுடைவைகளைச் சலவை செய்யும் இயந்திரம் ஒன்று தேவையென்று கோரிக்கை விடுத்தனர். அதனைத் தொடர்ந்தே நலன்புரி சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகிய சுகிர்தன் தான் அதைக் கொள்முதல் செய்து தருவதாக உறுதியளித்தார். இதன்படி அந்த இயந்திரம் வழங்கப்பட்டது. (த)

## போட்டிப் பரீட்சை வகுப்பு

கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்.

ஆரம்பம்: 23.08.2014 2 pm

(C/19143) (10.6)

**புதிய உயர்கல்லூரி**

T.P.No: 021 222 8148 ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

* சுன்னாகம் சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாக K.K.S வீதியின் கிழக்குப் பக்கத்திலிருக்கும் எரிபொருள் விற்பனை நிலையத்திற்குப் பின்புறமாக இரண்டாவது காணி 7 பரப்பு விற்பனைக்குண்டு.
* K.K.S வீதியில் எரிக்கனேஸ் கண்ணாடியகத்திற்கு அருகில் யூனியன் வங்கிக்கு முன்பாக 10 குழி காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 071 480 6309 (51045) (7.6.3)

## முகாமையாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கிவரும் அரிசி ஆலை ஒன்றுக்கு முகாமையாளர் தேவை. அரிசி ஆலை பற்றிய முன் அனுபவம் தேவை. அத்துடன் தங்கி நின்று பணியாற்றக் கூடியவராக இருக்கவேண்டும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (47858)(10.6)

தொடர்புகளுக்கு:077 635 7024

## வேலையாள்கள் தேவை

யாழ். நகர மையப்பகுதியில் புதிதாக திறக்கப்படவுள்ள அசைவ உணவகத்துக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை



★ உணவு தயாரிப்பாளர்
★ சமையல் உதவியாளர்
★ உணவு பரிமாறுபவர்கள்
★ ரீ மேக்கர்
★ ரொட்டி தயாரிப்பாளர்

(51163)(10.6)

தொடர்பு: 077 77 80 995

## கோயில் கட்டட வேலையின் கூலிக்கான கேள்வி விலை கோரல்

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வசந்த மண்டபம் மற்றும் யாக மண்டபம் என்பவற்றின் புனருத்தாரண வேலையின் கூலிக்கான கேள்வி விலை கோரல்.

மேற்படி வேலைகளைச் செய்ய விரும்பும் கூலி ஒப்பந்தகாரர்களை நாளை (24.08.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 04 மணிக்கு ஆலய முன்றலில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம், குப்பிழான்.

(51174)(10)

## சர்வதேச தொடர்பாளராகப் பதவி உயர்வு காணும் உங்களை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றோம்.



* ஐந்தாண்டு காலம் திசைகாட்டியின் வளர்ச்சிக்கு அடிமட்டத்தொண்டனாக இருந்து அயராது உழைத்த உத்தமர் நீவிர் மட்டுமே
* கடல் கடந்த நிலையிலுள்ள திசைகாட்டியின் தலைமையின் Remote controller போல செயலாற்றும் இயந்திர மனிதரும் நீர் தான்
* திசைகாட்டி சமூகமயப்பட்டு உறுதி நிலையடைய வலுவான அடித்தளமிட்டது உங்களது சிந்தனையே
* வேக அம்புகளாக வந்தடிக்கும் விமர்சனங்கள் குறைநிறைகள் தாங்கும் காப்பரணும் தாங்களே
* தங்களை இப்பதவிக்கு நியமித்த எங்கள் திசைகாட்டிக் குழுமத்தலைவர் உயர் திரு.எஸ்.செல்வராசா அவர்களுக்கு இவ்விடத்தில் நன்றிகள் சொல்கின்றோம்.
* காலம் கடந்து கிடைத்த கைம்மாறுதான் இது. இருப்பினும் இப்போது தானும் உங்கள் உழைப்பின் பெறுமதி எம் திசைகாட்டியின் ஆஸ்திரேலிய தேச "வெள்ளைக் கொலர் கல்விமான்களால் உணரப்பட்டமை எமக்கு ஆறுதலளிக்கின்றது.
* சரி நீங்கள் செல்லுமிடமெல்லாம் வெற்றிப்பவனியே

திரு.வி.எஸ்.நிறஞ்சன்
(திசைகாட்டி நிர்மாணி சட்டத்தரணி திசைகாட்டிக் கொழும்புக்கிளை)
திரு.எஸ்.தீபன் (ஆஸ்திரேலியாக்கிளை)
செல்வி.வி.இந்துஜா பிரதம நிறைவேற்று அதிகாரி
அத்துடன் அனைத்து பணியாளர்கள்.

Best Wishes

**திசைகாட்டி (பிறை) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

(51173)(10)

தற்போது யாழ் நகரில்...



## BTEC HND in BIOMEDICAL SCIENCE

Leadind to BSc (Hons) from UK universities

* ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
* உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
* சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
* பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
* உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

Macro Ads

Building Careers - Transforming Lives

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

### Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

* சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
* கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
* விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
* ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

### Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

Duration: (2 Months)

### IELTS Acadamic/General

We do Official Online Registration for Exam Candidates

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Duration: (2 Months)

(C/15078)(7.6.3)

23/08/2014 @ 9.00am 25/08/2014 @ 3.00pm 27/08/2014 @ 9.00am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 0212224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207

Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.